விலை: 20
பக்கங்கள்:28+20

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 36 மார்கழி 17ஆம் நாள் திங்கட்கிழமை 01 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2048



"அகரம்"
உலக முன்னணி
என முன் நிறுத்தி
கனேடிய
முன்னணிப்
பல்கலைக்கழகமும்.
100% வேலை வாய்ப்பு
சிறப்பிதழ் பக்கம் V இல் பார்க்க



2018
வாசகர்கள், நண்பர்கள்,
விளம்பரதாரர்கள்,
முகவர்கள்,
அனைவருக்கும்
உதயன்
குழுமத்தின்
ஆங்கில புதுவருட
வாழ்த்துக்கள்


# நிரந்தரமான தீர்வை எட்ட சேர்ந்து செயற்படுவோம்

### அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் புத்தாண்டில் சம்பந்தன் அழைப்பு

கொழும்பு, ஜனவரி 1

இந்த நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை அடையும் நோக்கில் சேர்ந்து செயற்பட முன்வருமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் தலைவர்களிடமும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் இந்தப் புத்தாண்டு செழிப்பானதும் மகிழ்ச்சியானதுமாக அமைய எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

இந்தப் புதிய வருடத்தை எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் வரவேற்கின்ற இந்தத் தருணத்தில், ஒன்றுபட்ட நாட்டின் மக்க >> 25



## எம்.பிமாருக்கு புத்தாண்டுப் பரிசு

கொழும்பு, ஜன. 1

பிறக்கின்ற புதுஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்கும் 'புத்தாண்டுப் பரிசாக' முத்திரைக் கொடுப்பனவு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு தற்போது ஆண்டுக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரை வழங்கப்படுகின்றது. இன்று தொடக்கம், இதன் பெறுமதி இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரை கிடைக்கப்பெறும். >> 25

## அரச தலைவர் நிச்சயம் நடவடிக்கை எடுப்பார்

### சுதந்திரக் கட்சி நம்பிக்கை

கொழும்பு, ஜன. 1

பிணைமுறி விவகாரத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிச்சயம் நடவடிக்கை எடுப்பார். அந்த உறுதிமொழியை எங்களுக்கு வழங்கியுள்ளார்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய அரச தலைவர் ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் >> 25

## சட்டமா அதிபருடன் மைத்திரி நாளை முக்கிய சந்திப்பு

### பிணைமுறி அறிக்கை மீதான நடவடிக்கை குறித்து

கொழும்பு, ஜன. 1

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் சட்டமா அதிபருக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடல் நாளை இடம்பெறவுள்ளது என்று தெரியவருகின்றது.

பிணைமுறி தொடர்பில் விசாரணை மேற்கொண்ட அரச தலைவர் ஆணைக்குழுவினர் நேற்றுமுன்தினம் தமது இறுதி அறிக்கையை அரச தலைவரிடம் கையளித்தனர்.

அது தொடர்பில் அடுத்தகட்ட சட்ட ஏற்பாடுகள் என்ன என்று கலந்துரையாடுவதே இந்தச் சந்திப்பின் நோக்கம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

அறிக்கையின் மீதான நடவடிக்கைகள் மற்றும் அதனை மக்களுக்குப் பகிரங் >> 25

## கால எல்லை நீடிக்கப்பட்டது

கொழும்பு, ஜன. 1

சேதப்படுத்தப்பட்ட மற்றும் உருச்சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களை வங்கிகளில் மாற்றம் செய்து கொள்வதற்கான கால எல்லை மார்ச் 31வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

"வேண்டுமென்றே சேதப்படுத்தப்பட்ட மற்றும் உருச்சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களை வர்த்தக நிலையங்களில் மாற்றிக்கொள்வதில் பொதுமக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கிக்குப் பொதுமக்களிடமிருந்து பல கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றன.

அத்துடன் அரச தலைவர் மைத்திரியும் கால >> 25



என்வழி தனிவழி என்றபடி

## அரசியலில் நுழைந்தார் தமிழக நடிகர் ரஜினிகாந்

சென்னை, ஜன. 1

நான் அரசியலுக்கு வருவது உறுதி. இது காலத்தின் கட்டாயம். எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தனிக்கட்சி ஆரம்பித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள தொகுதிகளில் போட்டியிட முடிவுசெய்துள்ளேன் என்று நடிகர் ரஜினிகாந்த் நேற்று அறிவித்தார்.

கடந்த 30ஆண்டுகளாக ரஜினி அரசியலுக்கு வருவாரா, மாட்டாரா என்ற கேள்வி இருந்து வந்தது. அந்தக் கேள்விக்கு ரஜினி நேற்று முற்றுப் புள்ளி வைத்தார்.

(விரிவான செய்தி பக்.14)

# அரச பேருந்து ஊழியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

### கோரிக்கை நிறைவேறும் வரை தொடரும் எனவும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினர் இன்று திங்கட்கிழமை தொடக்கம் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதுவிடின் போராட்டம் தொடரும் எனவும் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் பொதுச் செயலர் அருளானந்தம் மேலும் தெரிவித்ததாவது;

"வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தனித்துவத்தை இல்லாதொழிக்கும் முதலமைச்சரின் நடவடிக்கையைக் கண்டித்தும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு எதிராக அவரால் எடுக்கப்படும் தன் >> 25

### தேர்தல் காலங்களில்

## ஊடகங்களுக்கான வழிகாட்டல் நாடாளுமன்றத்தின் அனுமதிக்கு

கொழும்பு, ஜன. 1

தேர்தல் காலத்தில் ஊடகங்கள் பின்பற்றவேண்டிய ஊடக செயல்நெறி தொடர்பான அரசிதழ் அறிவித்தலுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைக் கோரும் ஆவணத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாளை செவ்வாய்க் >> 25

## புதிய நிலைய்த்திலிருந்தே இன்று முதல் சேவைகள்

### வவுனியா நகர சபை அறிவிப்பு

வவுனியா, ஜன.1

அனைத்துச் சேவைகளும் இன்று முதல் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்தே ஆரம்பிக்கப்படும் எனவும், பயணிகள் தங்களுடைய பயணங்களை புதிய பேருந்து நியைத்தில் இருந்து மேற்கொள்ளுமாறும் வவுனியா நகர சபைச் செயலர் தயாபரன் அறிவித்துள்ளார். >> 25


see more news in
newuthayan.com


## வடக்கு -கிழக்கு இணைப்பைக் கோருவோர்தான் அதைக் குழப்ப பிரதேச வாதம் பேசுகின்றனர்

### கிளிநொச்சியில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

வடக்கு - கிழக்கு இணைப்பை வெறும் கோசமாக முன்வைப்போர்தான் அதனைக் குழப்பும் வகையில் செயற்படுகின்றனர். வடக்கு கிழக்கு இணைப்பை தடுப்பதற்காக பச்சை பச்சையாக பிரதேசவாதத்தையும் கக்குகின்றனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் நேற்றுக் காலை நடைபெற்றது. அங்கு உரையாற்றினார் நாடா >> 25

## வாக்காளர் அட்டைகளை வழங்காது நிறுத்துவோம்

### தபால் தொழிற்சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 1

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படா விட்டால், உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் முற்றாக நிறுத்தப்படும் என்று தபால் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை எதிர்வரும் 18ஆம் திகதி விநியோகத்துக்காக தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. >> 25

## களஞ்சியத்தில் தீபரவல்

கொழும்பு.ஜன.1
ஒருகொடவத்த மேம்பாலத்துக்கு அருகில் அமைந்துள்ள களஞ்சியமொன்றில் நேற்றுத் தீப்பரவல் ஏற்பட்டது. காட்போட் அட்டைகள் மற்றும் ரெஜிபோர்ம் சேகரிக்கும் இடமொன்றிலேயே இவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்த தீ விபத்தால் அருகில் உள்ள வீடொன்றும் சேதமடைந்தது.
தீயை தீயணைப்புபிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

## த.மு. கூட்டணியின் கூட்டம் ஹற்றனில்

ஹற்றன்,ஜன.1
சிறிலங்காவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்பாடு செய்திருந்த முதலாவது பரப்புரைக் கூட்டம் ஹற்றன் டீ. கே. டபிள்யூ கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
கூட்டணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் நாட்டின் தலைமைஅமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க முதன்மை அதிதியாக கலந்து கொண்டார்.
இந்த நிகழ்வில் அமைச்சர் பழனி திகாம்பரம், இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஸ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (ற-ரி5)



# இந்திய மீனவர்கள் நாடு திரும்பினர்



யாழ்ப்பாணம், ஜன.1
இலங்கைக் கடலில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 69 பேர் நேற்று இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 69பேரை பருத்தித்துறை, ஊர்காவற்றுறை மற்றும் மன்னார் நீதிமன்றங்கள் கடந்த வெள்ளிக்கிழமை விடுவித்தன.
இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக் கடற்படையினரால் குறித்த இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு யாழ் மற்றும் மன்னார் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.
சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிப்பின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 69 இந்திய மீனவர்களை யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் நீதிமன்றங்கள் விடுவித்தன.
யாழ். சிறைச்சாலையில் இருந்த 52மீனவர்களும் மன்னார் சிறைச்சாலையில் இருந்த 17 மீனவர்களும் இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.
அவர்கள் நீரியல்வளத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் கையளிக்கப்பட்டனர். (ற-ரி5)

## 5 ஆண்டுகள் வரி செலுத்தாத வாகன பதிவுகள் இல்லாமல் ஆக்கப்படும்

கொழும்பு, ஜன. 1
தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு மேலாக வாகன வரி அனுமதிப் பத்திரத்தை பெற்றிராத வாகனங்களின் பதிவை அடுத்த இந்த ஆண்டு முதல் இல்லாமல் செய்யத் தீர்மானித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதற்காக அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.
2016 ஆண்டில் வாகனங்களைப் பதிவு செய்யும் வீதம் 2017ஆம் ஆண்டில் ஒப்பிடும் போது 50 ஆயிரத்தினால் குறைந்துள்ளது.
2016ஆம் ஆண்டில் 4 லட்சத்து 48 ஆயிரத்து 625 வாகனங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளதாகவும், இதில் 76 வீதமானவை மோட்டார் சைக்கிள்கள் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (5)

### சைவ மகா சபையின் ஏற்பாட்டில்

## ஈழத்துச் சிதம்பரம் வரை பாதயாத்திரை ஆரம்பம்

யாழ்ப்பாணம். ஜன.1
சைவமக்களால் கடைப்பிடிக்கப்படும் திருவெம்பாவை நோன்பை முன்னிட்டு, அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் ஈழத்துச் சிதம்பரம் நோக்கிய பாத யாத்திரையானது. நேற்று ஆரம்பமாகியது.
சைவ மக்களிடையே ஆன்மிக நம்பிக்கையையும், இளையோர்களிடையேயும் மாணவர்களிடையேயும் மத நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கிலும் சைவ மகா சபையால் வருடாந்தம் இந்தப்பாத யாத்திரை நடத்தப்பட்டு வருகின்றது.
வடக்கு, கிழக்கின் பல பாகங்களிலும் இருந்து வருகை தருகின்ற சிவனடியார்கள் இதில் கலந்துகொண்டனர்.
சம்பில்துறை சம்புநாத ஈச்சரத்தில் இருந்து ஆரம்பமாகிய இந்தப் பாத யாத்திரை, ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடையும். (ற-ரி5)

## சுவையான உணவு உண்ட தண்டனைக் கைதிகள்

கொழும்பு, ஜன.1
மரணத் தண்டனைக் கைதிகள் 250 பேருக்கு வெலிக்கடை சிறைச்சாலையில் வழமைக்கு மாறாக சுவையான உணவுகள் வழங்கப்பட்டன.
வெலிக்கடைச் சிறைச்சாலையில், நேற்று பௌத்த சமய நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்விலே மரணத்தண்டனைக் கைதிகள் 250 பேர் உள்ளிட்ட 900 கைதிகளுக்கு உணவுகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
பொதுவாக மரணத் தண்டனைக் கைதிகளுக்கும், ஏனைய கைதிகளுக்கும் காலை உணவாக பாண் அல்லது சோறே சிறைச்சாலைகளில் வழங்கப்படுவது வழக்கம் இந்த நிலையில், சுமார் 10 வருடங்களுக்குப் பிறகு கைதிகளுக்கு இவ்வாறான உணவுகள் வழங்கப்பட்டன. (ற-ரி5)

## காரும் மோட்டார் சைக்கிளும் விபத்து : ஒருவர் படுகாயம்

மன்னார்,ஜன.1
மதவாச்சி - மன்னார் வீதியில் காரும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார்.
மதவாச்சி - மன்னார் பிரதான வீதியில் நேரியகுளம் பகுதியிலேயே விபத்து நேற்று இடம்பெற்றது.
கார் சாரதி வேகத்தைக் கட்டுப்படுத்தத் தவறியதாலேயே இந்தவிபத்து இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.
மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரே விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெண்கலச் செட்டிகுளம் பிரதேச பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

### வவுனியா மாவட்டத்தில்

# தேர்தல் முறைப்பாடுகளை பதிவு செய்ய அலுவலகம்

வவுனியா, ஜன.1
உள்ளூராட்சி சபைத்தேர்தல் தொடர்பாக வவுனியா மாவட்ட முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்காக வவுனியா மாவட்டச் செயலகத்தில் முறைப்பாட்டு அலுவலகம் (உதவி மாவட்ட செயலாளர் அலுவலக அறை) திறக்கப்பட்டுள்ளது என்று என மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன. உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை குறித்த அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 0242222138 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ, 0242222138 என்ற தொலைநகல் இலக்கம் ஊடாகவோ, vavvunia.complaint@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ தெரியப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற21)

## யாழ். ஆயரைச் சந்தித்தனர் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்கள்

மன்னார், ஜன.1
தமிழ் காங்கிரஸ் கட்சியினர் நேற்று யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட் ஜஸ்ரின் பெர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் யாழ். மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெயபரட்ணம் அடிகள் ஆகியோரைச் சந்தித்தனர். காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இந்த் சந்திப்பில் தமிழ் காங்கிரஸின் யாழ். மாநகர சபை மேயர் வேட்பாளர் வி.மணிவண்ணன், துணை மேயர் வேட்பாளர் ஆ.தீபன் திலீசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் மற்றும்வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.
ஆயர் இல்லத்தில் யாழ்.மறைமாவட்ட குரு முதல்வரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டனர். (ற)

## தென்னையிலிருந்து தவறி வீழ்ந்த முதியவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜன.1.
தென்னை மரத்திலிருந்து தவறி வீழ்ந்த முதியவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மீசாலையில் இடம் பெற்றது.
மீசாலை மேற்கைச் சேர்ந்த ஆறுமுகம் செல்லத்துரை (வயது63) என்பவர் காலை உணவுக்குத் தேங்காய் பிடுங்குவதற்கு வளவில் நின்ற தென்னைமரத்தில் ஏறியபோது கைதவறி வீழந்துள்ளார்.
இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனவும் தெரிவிக்கப்பட்டது. (ரி2,9)

## குண்டு துளைக்காத வாகனங்களை ஆழ்கடலில் மூழ்கடிக்கத் திட்டம்

கொழும்பு, ஜன. 1
தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்காக நாட்டின் அரச தலைவர்களின் பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட குண்டு துளைக்காத 25 மோட்டார் வாகனங்களை ஆழ் கடலில் மூழ்கடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
விலையுயர்ந்த இந்த மோட்டார் வாகனங்களில் முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மானுக்குக் கொண்டு வரப்பட்ட வாகனமும் உள்ளடங்குகிறது.
முன்னாள் அரச தலைவர்களான ஜே.ஆர்.ஜெயவர்தன, சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோரால் இந்த வாகனங்கள் பாவிக்கப்பட்டுள்ளன.
வாகனங்களை ஆழ் கடலில் மூழ்கடிப்பதற்கான பொறுப்பு கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.
இந்த வாகனங்களில் பொருத்தப்பட்டிருந்த தொடர்பாடல் மற்றும் பிற உபகரணங்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குண்டுதுளைக்காத இந்த வாகனங்களை ஏலத்தில் விட்டால், பாதாள உலகத்துடன் தொடர்புடையவர்கள் அதனைக் கொள்வனவு செய்யச் சந்தர்ப்பம் காணப்படுவதால், ஆழ் கடலில் மூழ்கடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.
பல வருடங்கள் பழைமைவாய்ந்த இந்த வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கு அதிக செலவாகுவதாகவும் கூறப்படுகின்றது. (5)

# காணாமற் போனோர் பிரச்சினைக்கு புத்தாண்டிலாவது தீர்வு காணுங்கள்

*புத்ததாண்டு வாழ்த்துச் செய்தியில் ஆயர் தெரிவிப்பு*



2018 ஆவது புதிய ஆண்டு மலர்ந்துள்ளது. இந்தப் புதிய ஆண்டை பல புதிய எண்ணங்களோடும் புதிய எதிர்பார்ப்புக்களோடும் புதிய ஏக்கங்களோடும் திட்டங்கள் தீர்மானங்களோடும் எல்லோரும் எதிர்பார்த்துள்ளனர். இந்தவேளையில் அனைவரின் உள்ளத்து எண்ணங்களும் இந்தப் புதிய ஆண்டில் நிறைவுபெற வேண்டுமென இறையாசி வேண்டி புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

ஆண்டவர் இயேசு இந்த ஆண்டு முழுவதும் உங்கள் அனைவரையும் பாதுகாத்து வழிநடத்துவாராக. மூன்று தசாப்த கால போரில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த தமிழ்மக்கள் போர் முடிந்து 9 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் நல்லெண்ண அரசு பல முக்கிய விடயங்களை இன்னும் ஆற்றவில்லை என்று குற்றஞ் சாட்டுவது நீதியானதே. எனவே இயல்பு வாழ்வைத் தோற்றுவிக்கத் தேவையான விடயங்கள் வேகமாக முதலில் ஆற்றப்பட வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறோம். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மனித உயிர்களுடனும் மனித உணர்வுகளுடனும் தொடர்புடைய ஒரு விவகாரம். இதற்கான ஒரு முடிவைக் காண போர் முடிந்து 9 ஆண்டுகளாயும் நல்லெண்ண அரசால் ஏன் இன்னும் முடியவில்லை என்பது புரியவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம் வவுனியாவில் 300 நாட்களைக் கடந்த நிலையில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது அதே வேளை உயிரோடு இருப்பவர்களை காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. மனித உயிர் சம்பந்தமான இந்தப் பிர ச் சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது முடிவு காணுங்கள். தமிழ் மக்களின் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வுக்காக உழைக்கக் கூடியோர் யார் என்பதை இனங்காணவேண்டும். முகங்களுக் கல்ல கொள்கைகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஊரவர் உறவுகள் என்ற உணர்வு எல்லைகளைத் தாண்டி உண்மையாக திறமையுடையோரையும் இளையோர்களையும் தெரிவு செய்ய வேண்டும் என வேண்டுகிறோம். 2018 ஆவது புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் அருள் நிறைந்த ஆண்டாக இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

**ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட்**
**ஞானப்பிரகாசம் ஆண்டகை**
**யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்**

# சௌபாக்கியமும் ஆரோக்கியமும் கிட்டும் புதுவருடமாக 2018 அமையட்டும்

*அரச தலைவர் தெரிவிப்பு*



கடந்த காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் எம்மை அறிவாலும் அனுபவத்தாலும் பரிபூரணப்படுத்தும் அதேவேளை மலரும் ஒவ்வொரு நிமிடமும் எமது ஆற்றல்களை பரீட்சித்துப் பார்த்தவண்ணமே இருக்கிறது. இதன்போது நாம் வெளிப்படுத்தும் உன்னத அர்ப்பணிப்பும் உறுதிப்பாடுமே எம்மை வெற்றியை நோக்கி இட்டுச் செல்கின்றன.

நிறைவுறும் வருடச்துக்கு விடைகொடுப்பதும் மலரும் புத்தா ண்டை எதிர்பார்ப்புக்களுடன் வரவேற்ப ம் இந்த அடிப்படையிலேயே நிகழ்கின் து. அதற்கமைய கடந்த வருடத்தை ஒ நாடு என்றவகையில் எமக்கு என் ற சாதகமான பலன்களை பெற்றுத் ந்த வருடமாகவே கருதலாம்.

அதேபோன்றே 2018 ஆம் ஆண்டில் நாம் அடியெ டுத்து வைப்பதும் நிச்சயம் வெற்றி கொள் ள வேண்டிய ஏராளமான சவால்களுடனேயே ஆகும். அந்தவகையில் அடைய வேண்டியிருக்கின்ற பொருளாதார சுபீட்சம் பலமாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய சமூக நல்லிணக்கம் பூரணப்படுத்தப்பட வேண்டிய மனித சுதந்திரம் இந்த மண்ணில் மேன்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டிய நம் நாட்டின் ஒளிரிடும் நற்பெயர் ஆகியன அவற்றுள் முதலிடம் வகிக்கின்றன.

மலரும் புதிய வருடத்தை கோலாகலமான ஆரம்பமாக அமைத்துக்கொள்ள வேண்டுமாயின் அதனை எமது உறுதிப்பாட்டினாலும் அர்ப்பணிப்பினாலுமே சாதிக்க முடியும்.

இலங்கை நீர்வள செயற்றிட்டத்தின் பிரம்மாண்டமான சாதனையை மக்கள் மயப்படுத்தும் தேசத்தின் அபிவிருத்தி செயற்பாட்டின் சுபீட்சமான ஆரம்பத்தை அடித்தளமாகக் கொண்டே இந்தப் புத்தாண்டு மலர்கின்றது.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் மங்களகரமான நீரைக் கொண்டு வளமான தேசத்தை உருவாக்கும் எண்ணிலடங்கா எதிர்கால எதிர்பார்ப்புக்கள் சுடர்விட்டு பிரகாசிக்கும் ஒரு இரம்மியமான பொழுதினில் மலரும் இந்த புத்தாண்டு இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் சௌபாக்கியமும் ஆரோக்கியமும் கிட்டும் புத்தாண்டாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# நட்புணர்வுமிக்க சூழலை 2018 இல் ஏற்படுத்துவோம்

*தலைமை அமைச்சர் புத்தாண்டு வாழ்த்து*



நீண்ட கால மக்கள் எதிர்பார்ப்புக்களை வெற்றி கொண்டு நாம் பெற்றுக் கொண்ட சமூக அரசியல் சுதந்திரத்தை மிகவும் அர்த்தமுள்ளதாக மாற்றியமைக்கும் முக்கிய பணியை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திய நிலையிலேயே 2018 ஆம் ஆண்டு பிறக்கிறது.

கடந்த காலப்பகுதியில் மக்களுக்கு சமூக அரசியல் மானிட சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பன்னாட்டு ரீதியாக எமது நாடு தொடர்பாகக் காணப்பட்ட எதிர்மறையான மனப்பாங்குகளை மாற்றியமைத்து நட்புணர்வுமிக்க சூழலொன்றைக் கட்டியெழுப்பவும் முக்கிய கவனத்தைச் செலுத்தி நடவடிக்கை மேற்கொண்டோம்.

தற்போது எமக்கு அவற்றின் சிறந்த பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ள முடியுமான நிலமை காணப்படுகிறது.

ஜனநாயக தார்மீகப் பண்புகள் கொண்ட முன்னேற்றகரமான நாடாக முன்னோக்கிச் செல்வதற்காக எமது அரசு இது வரைக்கும் மேற்கொண்ட வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் மிகுந்த பலத்துடன் இந்த வருடத்திலும் தொடர்ந்து முன்னோக்கிச் செல்ல நீங்கள் எம்மோடு இணைந்திருப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

2018 ஆம் ஆண்டு அனைத்து சிறந்த நோக்கங்களும் அடையப் பெறும் துணிச்சல் மிகுந்த ஆண்டாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.



# அமைதி,சமாதானம் நல்கும் ஆண்டாக அமையட்டும்

இன்று புதிதாக மலரும் 2018ம் ஆண்டு அனைத்து மக்களுக்கும் அமைதியையும் சமாதானத்தையும் வழங்குகின்ற ஒரு புதிய ஆண்டாக மிளிர வேண்டும் என வாழ்த்துகின்றேன். எம்மிடமிருந்து விடைபெறும் 2017ம் ஆண்டை அன்புடன் வழியனுப்பி 2018 ஆம் ஆண்டை மகிழ்வுடன் வரவேற்போம்.

இந்தப் புதிய ஆண்டில் எம்மிடையே காணப்படுகின்ற விரோத உணர்வுகள் அனைத்தும் அகலக் கடவதாக!. எமது அரசியல் தலைமைகள் தமக்குள் போட்டி போட்டுக் கொண்டு தமது வேறுபட்ட கருத்துகளை வெளியிடுவதைத் தவிர்ப்பார்களாக!.

எமது மக்களின் சக வாழ்வுக்கும் நிலைபேறான அரசியல் அந்தஸ்துக்குமாக யாவரும் ஒன்றிணைந்து பாடுபட இப்புத்தாண்டு வழிவகுப்பதாக! 2018 ஆம் ஆண்டு அனைவருக்கும் சுபீட்சத்தையும் சக வாழ்வையும் மன அமைதியையும் வழங்குகின்ற புதிய ஆண்டாகத் திகழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**நீதியரசர்**
**சி.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர்**
**வடமாகாணம்**

# இலக்கை அடையும் புத்தாண்டாய் மலர்க


இலக்கை நோக்கி நகரும் இனிய புத்தாண்டாய் மலர இனிய நல்வாழ்த்துக்கள் மீண்டும் ஓர் புதிய ஆண்டை வாழ்வில் சுவைக்கக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம்.

எமது வாழ்வை மகிழ்விக்க பலரது வழிகாட்டல் ஊக்கப்படுத்தல் யாவும் பல படிப்பினைகளைத் தந்தது. எமது சிந்தனைகள் செயல்களாக வழிபாடுகளை வாழ்வாக்கி சந்தர்ப்பங்களை சாதகமாக்கிக் கொள்ள புதிய ஆண்டை புத்தெழுச்சியான ஆண்டாக எதிர்கொள்வோம்.

"எல்லோர் மகிழ்விலும் இணைந்து மகிழும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்"

**செ.ஜோசப்பாலா**
**செயலாளர்**
**கத்தோலிக்க கலை**
**இலக்கிய வட்டம்**

# பிறக்கும் புத்தாண்டு அனைவருக்கும் சுபீட்சமான மங்கள வாழ்வை நல்கட்டும்



இன்று ஆங்கில புதுவருடப்பிறப்பு இற்றைநாள்வரை பட்ட துன்ப துயரங்கள் யாவும் நீங்கப்பெற்று இனி சமத்துவம் நிறைந்த சமாதானம் ததும்பும் நல்வாழ்வு கிடைக்கப் பெற்று எல்லோரும் வாழவேண்டும் என்ற பரந்த நோக்குடன் ஈழ நாட்டு மக்கள் ஆனந்தமாய் வாழ நல்லைக் கந்தப்பெருமானைப் பணிந்து வாழ்த்தி அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

இன்று பிறந்திருக்கும் 2018ஆம் ஆண்டானது அனைத்து மக்களுக்கும் ஆனந்தம் நிறைந்த மங்கள வாழ்வை நல்க வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து சிந்தித்து வந்தித்து சேவித்து நின்று உளம் புளகாங்கிதமடைந்து இறும்பூதெய்தி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இன்று முதலாவது எமது இலங்கை மணித் திருநாடு நன்மைகளை அளிக்கின்ற ஆன்மிக வாழ்வில் மங்களம் நிறைந்த நல்வாழ்விற் திழைக்க வேண்டுமென்று ஆசி வழங்கி மகிழ்ந்திருக்கிறோம்.

**"என்றும் வேண்டும்அன்ப அன்பு"**
**ஆதீன குருமுதல்வர்**

# எதிர்பார்ப்பை நிறைவேற்றட்டும் ஆங்கிலப் புத்தாண்டு – 2018



ஆங்கிலப் புத்தாண்டு 2018 இனை முழு உலகமும் இன்று பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. புதுத் திட்டங்கள், புது எண்ணங்கள் என்று அனைத்திலும் புத்தாக்கம் அனைவரினதும் மனங்களில் ஏற்படட்டும். ஈழத் தமிழர்களின் கோரிக்கைகள் பலவும், போராட்டங்கள் பலவும் கடந்த ஆண்டில் சொல்லிக்கொள்ளும் படியான வெற்றியை வழங்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைப்பாடு, வடக்கில் உள்ள இராணுவப் பிரசன்னம், காணி விடுவிப்பு உள்ளிட்ட பல விடயங்களில் தமிழ் மக்களாகிய நாம் பல்முறைப் போராட்டத்தில் சிக்கியுள்ளோம். மைத்திரி - ரணில் கூட்டு அரசின் அரசமைப்பு முயற்சி தொடர்பில் இந்த வருடம் கூடுதல் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் விரும்பும் வகையிலான அரசமைப்பும் அதன்மூலமான அதிகாரப் பகிர்வும் மலர்ந்துள்ள இந்தப் புத்தாண்டில் சாத்தியமாக வேண்டும் என்று வாழ்த்துகிறேன். எமது மக்களின் ஏனைய கோரிக்கைகளும் வெற்றியளிக்க இறைவனை மன்றாடி ஆசித்து நிற்கின்றேன்.

**ஈ.சரவணபவன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**
**யாழ். கிளிநொச்சி மாவட்டங்கள்**

# மனிதர்களுக்குரிய உரிமைகளை மாண்புடன் வழங்க வேண்டும்



மலரும் புத்தாண்டில் அனைவரும் மகிழ்வுடன் வாழ இறைவனை வேண்டுகிறேன். மனிதம் தினமும் சாதிக்கும் சாதனைகள் ஏராளம்.

புதிய ஆண்டில் இன்னும் பல புதுமைகள் நடக்கத்தான் போகிறது.

மனிதர்களாகிய நாம் மகத்தான வாழ்வை வாழ வேண்டும். மனிதர்களுக்குரிய உரிமைகளை மாண்புடன் வழங்க வேண்டும். இரக்கமுள்ள சமுதாயத்தை நாம் உருவாக்குவாக்குவோம். மனிதம் சிந்திக்க வேண்டிய காலம் இது.

புதிய ஆண்டு பிறக்கும் வேளையில் மனித மனங்கள் மாற்றம் பெற்று மனிதநேயம் வளரவேண்டும் என்று பிரார்த்திப்போம்.

2018 இல் இனிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கத் தயாராகுவோம். புதிய ஆண்டு நல்ல செய்திகளைத் தரவேண்டும் என்று எல்லாம் வல்ல துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து அனைவருக்கும் என் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர்**
**கலாநிதி.ஆறு.திருமுருகன்.**
**தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை**
**உப தலைவர்,**
**அகில இலங்கை இந்து மாமன்றம்.**

# மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வருடமாகட்டும்



மலரும் 2018 ஆம் ஆண்டு புதுவருடம் மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வருடமாக அமையட்டும். அதற்கு 2018 ஆம் ஆண்டு ஆரம்பமே அந்த உரிமைகளை வென்றெடுக்க உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஆரம்பமாகி களைகட்டியுள்ளது.

தலைமைத்துவங்களின் எண்ணிக்கைகளை அதிகரித்துக் கொள்ளவும் தற்போது உரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதை சரியாக வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் நம்மவர்களுக்கு வாக்களித்து தெரிவு செய்து எமது உரிமைகளைப் பெற்றெடுக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும். இதுவே சமூக வளர்ச்சிக்கு மலர்கின்ற 2018இல் நீங்கள் செய்யும் பாக்கியமான செயற்பாடாகும்.

**வே.இராதாகிருஸ்ணன்.**
**கல்வி இராஜாங்க அமைச்சர்,**
**மலையக மக்கள் முன்னணி தலைவர்,**
**தமிழ் முற்போக்கு கூட்டணி பிரதி தலைவர்**

# பிறந்திட்ட இந்தப் புத்தாண்டில் புதிய சிந்தனைகளை வளர்ப்போம்

ஆங்கிலப் புத்தாண்டு அனைத்து மக்களுக்கும், அற்புதமான, ஆனந்தமான நல்லதொரு புத்தாண்டாக அமைய எல்லாம் வல்ல இறைவனையும், குருநாதரையும் பிரார்த்தித்து, இந்தப் புத்தாண்டு தினத்திலே, நாங்கள் புதிய சிந்தனைகளை எங்களுக்குள்ளே வளர்த்துக் கொள்வோம்.

புத்துணர்ச்சியோடு, புத்தாக்கங்களை உருவாக்கி, புதுமையான ஒரு வாழ்வைப் படைக்க வேண்டும் என்கின்ற சிந்தனையில் 2018 என்பது மிகவும் ஒரு அற்புதமான இலக்கமாக இருக்கின்றது. 2000 வருடங்களை இந்தப் பூமியிலே, நாங்கள் கழித்து இருக்கின்றோம். இந்த 2000 வருடங்கள் முடிவடைந்து 18 வருடங்கள் ஆகியிருக்கின்றன.

நாங்கள் எங்களுக்குள்ளேயிருக்கின்ற நல்ல விடயங்களை வெளிக் கொண்டு வருவதற்கும் தீய விடயங்களை இல்லாது அழிப்பதற்கும் இந்த வருடத்தைப் பயன்படுத்துவோம். இந்தப் புத்தாண்டு தினத்திலே, அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்**

# மலரும் புத்தாண்டில் புதுப்பொலிவு பிறக்கட்டும்

2018ஆம் பொதுப் புத்தாண்டில் பெருந்தோட்டத்துறை மக்கள் உள்ளீட்டு ஒட்டு மொத்த தமிழர் வாழ்வியலில் சுபீட்சம் நிலவும் மங்களம் பெருகவும் வழி வகுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

கடந்த 2017ம் ஆண்டு பதியப்பட்ட எதிர்நோக்கிய சோகங்கள் மற்றும் துயரங்கள் முற்று முழுவதாக நீங்கப்பெற்று இப்புத்தாண்டில் புதுப்பொலிவுடன் எம் ஒவ்வொருவரின் வாழ்வியலும் அமைய வேண்டும். 2018ஆம் புத்தாண்டை கொண்டாடும், அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்"

**அ. அரவிந்தகுமார்**
**பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்**

# துன்ப துயரங்கள் நீங்கி நல்வாழ்வு பிறக்கட்டும்



இன்று புதுவருடம் பிறந்திருக்கிறது இதுவரை காலமும் நாம் பட்ட துன்ப துயரங்கள் நீங்கப்பெற்று இனிமேலேனும் ஈழம்வாழ் தமிழ் மக்கள் சுதந்திரமான சுபீட்சமான நல்வாழ்வு வாழ வழி பிறக்கட்டும் நாம் அனைவரும் மகிழ்ச்சியாக வாழவே விரும்புகிறோம் துன்பத்தை எவரும் விரும்புவதில்லை ஆனால் நாம் துன்பங்களையே பெரும்பாலும் அனுபவித்துக்கொண்டிருகிறோம் இன்று பிறந்துள்ள 2018 ஆம் ஆண்டு முழுவதிலும் சகல இன மக்களும் சுபீட்சமான மங்கல வாழ்வில் திளைக்கவும், அரசியல் கைதிகள் விவகாரம் காணாமற்போனோர் பிரச்சினை அனைத்துக்கும் ஒரு தீர்வு கிட்டவும் அனைவருக்கும் புதிய சிந்தனை மலரவும் அன்னையின் திருவடி தாமரை மலர்களை வணங்கி ஆசி வழங்குகிறோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**சிவஸ்ரீ சோமஸ்கந்ததண்டபாணிகதேசிகர் ஜே. பி.இந்துமதகுரு பீடாதிபதி**
**பிரதம குரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை**

# சகோதர உணர்வு பேணும் வருடமாக அமையட்டும்



அனைத்து இன மக்களுக்கும் 2018 ஆம் வருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். மலரும் புதுவருடம் சமூக நல்லிணக்கம் சகல இன மக்களும் தம் சமயம் சார்ந்த விழுமிய மரபுகளை பேணி சமாதானமாகவும் சகோதர உணர்வுகளைப் பேணும் வகையிலும் நல் வருடமாக அமைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

நல்லாட்சி அரசின் கீழ் மலரும் புத்தாண்டில் தமிழ் மக்களது அனைத்து உரிமைகளும் கிடைப்பதாகட்டும். சகல மதங்களும் போதிக்கும் "சனாதனதர்மவழியில்" "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு" எனும் முதுமொழிக்கு இணங்க ஒற்றுமையுடன் செயற்பட்டு வையகத்துள் வாழ்வாங்கு சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து குருமார்கள் சார்பான நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"**
**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் தலைவர்.**

# நன்மைகள் அதிகமாகி நாடு நல்லமுறையில் அபிவிருத்தியடையட்டும்

*நல்லை ஆதீன சமயப் பிரசாரகர்*

இன்று புத்தாண்டு பிறந்திருக்கின்றது. ஆங்கில ஆண்டின் 2018 வருகையை உளப்பூரிப்புடன் வருக வருக என முகமலர்ச்சியுடன் வரவேற்று, இனிமேல் எமது நாட்டில் நிம்மதியும் நல்ல நித்திரையும் கிடைத்து அனைத்து மக்களுமே ஆனந்த நல் வாழ்வில் மகிழ்ந்திருக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டிப் பிரார்த்தித்து ஆசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

புனித புண்ணிய பூமியையுடைய இலங்கை மணித்திருநாட்டில் இற்றை நாள் நிகழ்ந்த கவலை தரும் நிகழ்வுகள் யாவும் அறவே அகலவேண்டும். அனைத்து மக்களுமே ஆனந்தமும் அமைதியும் சந்தோஷமும் சமாதானமும் நின்று நிலைத்து வாழ்வில் மங்கலங்களை அள்ளி வழங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறையருளை யாசித்து புத்தியில் நினைந்தது கைகூடி மகிழ்ச்சியை நல்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

இனி நன்மைகள் அதிகமாகி நாடு நல்லமுறையில் அபிவிருத்தியடைந்து மாண்புடன் திகழவேண்டுமென்று ஆசி நல்கி வாழ்த்துகின்றோம். என்றும் நல்லதே நடக்கட்டும் நாடு வளம் பெறட்டும்.

# மனிதநேயம் மேலோங்கும் ஆண்டாக அமையட்டும்

பிறக்கும் 2018 புத்தாண்டு நாட்டில் நிம்மதியையும் ஆரோக்கியத்தையும் அனைத்து வளங்களையும் தந்து மகிழ்விக்க இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

நலிந்து போகும் மனிதநேயம் இவைகளெல்லாம் அற்ற நிம்மதியைத் தரும் பிரமிக்கத் தக்க ஆண்டாக பிறக்கும் 2018 அமையட்டும்.

**கலாநிதி நல்லையா குமரகுருபரன்**
**மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினர்**

## 2017ஆம் ஆண்டு 2,816 பேரைப் பலியெடுத்த விபத்துகள்

கொழும்பு, ஜன. 1

கடந்த ஆண்டு 2 ஆயிரத்து 816 பேர் வாகன விபத்துகளில் சிக்கி உயிரிழந்திருப்பதாக வீதிப் பாதுகாப்பு தேசிய சபை தெரிவித்துள்ளது.

வாகன விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, முச்சக்கர வண்டி மற்றும் கார் விபத்துக்களில் பலியானோரின் எண்ணிக்கை, கடந்த ஆண்டை விடக் குறைவாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.1

கடவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரன்முத்துகல பகுதியில் நபர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் வீட்டில் இருந்தவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

37 வயதான ரணவக லியனகே அஜித் புஷ்ப குமார எனும் நபரே உயிரிழந்தார். காயமடைந்தவர் அயலவர்களால் ராகம வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதும், அவர் உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொலையானது பணக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை ஒன்றில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (ற-31)

## வேட்பாளருக்கு அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன.1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளரான மு.உதயசிறி தனக்கு நேற்று முன்தினம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று தெரிவித்தார். தனது கட்சியைச் சேர்ந்த ஒருவரே அலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்தார் என்றும் அவர் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது மன்னிப்புப் கோரியதுடன், முறைப்பாடு இணக்கப்பாட்டுடன் மீளப் பெறப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-4,8)

# இனிதே மகிழ்ந்து நல்வாழ்வு வாழ இனிதாய் மலரட்டும் புத்தாண்டு

இன்று பிறந்திருக்கும் புதுவருடம் எமது நாட்டு மக்களிடையே நல்லதொரு மாற்றத்தைக் கொண்டுவந்து அனைத்து மக்களுமே நல்வாழ்வு வாழ வழிசமைக்க வேண்டுமென்று ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

எமது நாடு அமைதி பேணி, சந்தோஷமும் சமாதானமும் நிறைந்து மகிழ்ச்சியான மங்களகரமான மாண்பு நிறைந்த நல் வாழ்க்கையை உடையது. ஆதலால் நல்லதே நடந்து எல்லோரும் இன்ப வாழ்வில் இனிதே மகிழ்ந்து நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எமது வேணவா.

இன்று பிறந்துள்ள ஆங்கில புது வருடமானது எல்லோருக்கும் சுபீட்சத்தையும் மன நிம்மதி கூடிய நல்ல வாழ்க்கையையும் நல்கி, நாடு வளம் பெற ஆவன செய்ய வேண்டுமென்று வண்ணை வைத்தீஸ்வரனின் அருள் வேண்டிப் பிரார்த்தித்து உளமார மகிழ்ந்து வாழ்த்துவதில் பூரிப்படைகின்றோம்.

"நல்லதையே நினைப்போம் ! நன்மையே கிடைக்கும்!!

**ஈசான சிவாச்சாரியார்**
**சிவஸ்ரீ சொ.இ.விக்னேஸ்வரக் குருக்கள்**
**பிரதம குரு**
**யாழ் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலம்.**

# குர் ஆன் பிரதிகள் பொலிஸார் வசம்

தேர்தல் காலத்தில் வழங்குவதற்காகக் கொண்டு வரப்பட்டன என்று நம்பப்படும் 625 புனித அல் குர் ஆன் பிரதிகள் கற்பிட்டிப் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கற்பிட்டிப் பிரதேச சபைக்காக போட்டியிடும், ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளரின் வீட்டில் இருந்தே இவை கைப்பற்றப்பட்டன. புத்தளம் மாவட்டச் செயலக அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் தேர்தல் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமையவே இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே இவை கைப்பற்றப்பட்டன.

நேற்று மதியம் வரை இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளில் கற்பிட்டிப் பகுதியிலுள்ள பள்ளிவாசல்களை மையப்படுத்தி இந்த புனித குர் ஆன் பிரதிகள் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்துள்ளமை தெரிய வந்தது. (ற-5,31)

### இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள

# வற்றாப்பளை-கேப்பாபிலவு வீதி இன்று திறந்துவிடப்படும்

### முல்லை. மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு.ஜன.1
இராணுவத்தின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் உள்ள வற்றாப்பளை, கேப்பாபிலவு வீதி புதுவருடப் பிறப்பில் இருந்து மக்களுடைய பாவனைக்காக இன்று திறந்து விடப்படும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
கேப்பாபிலவு மற்றும் சீனியா மோட்டைப்பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த 133.34 ஏக்கர் காணிகள் மீள்குடியேற்றத்துற்காக அண்மையில் கையளிக்கப்பட்டது.
குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு விடுவிக்கப்பட்ட காணிகளை பெறுப்பேற்று மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது வற்றாப்பளை, கேப்பாபிலவு வீதியில் சுமார் 6 கிலோமீற்றர் தூர வீதி இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதனால் மக்கள் பல கிலோ மீற்றர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.
இந்த நிலையில் தற்போது ஒரு தொகுதிக் காணி விடுவிக்கப்படுகின்ற நிலையில் இந்த வீதியையும் முழுமையாக விடுவிக்க இராணுவம் இணங்கியுள்ளது.
இதன்படி எதிர்வரும் ஜனவரி மாதம் 1ஆம் திகதி (இன்று) அந்த வீதி மக்களுடைய பாவனைக்காக திறந்து விடப்படும் என்றார்.
(எ-21)

## 'லொக்' போடப்படாத மோட்டார் சைக்கிள் கீரிமலையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.1
கீரிமலை நகுலேஸ்வரர் கோவிலுக்குமுன்பாக கான்ரில் லொக் போடப்படாது நிறுத்தப்பட்டி ருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
மட்டுவிலைச் சேர்ந்த தாயும் மகனும் மோட்டார் சைக்கிளில் அங்கு சென்றிருந்தனர்.
கோவிலுக்கு முன்பாக அதை நிறுத்தி விட்டு திறப்பை எடுத்த போதும் மோட்டார் சைக்கிளுக்கு கான்ரில் லொக் போடவில்லை. அவர்கள் கோவிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு வெளியே வந்தபோது மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. காங்கேசன்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை இடம்பெறுகின்றது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
(எ-4-6)



வவுனியாவில் வியாபார நிலையம் இடம்மாற்றத்தால்

## புதுவருடத்துக்கான வியாபாரம் பாதிப்பு

வவுனியா,ஜன.1
அங்காடி நிலையம் இடம்மாற்றப்பட்டுள்ளதால் புதுவருடத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது என வவுனியா வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
வவுனியாவில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நகரசபைக்குச் சொந்தமான இடத்தில் வியாபாரம் செய்து வந்த அங்காடி வியாபாரிகள் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்காக அந்த இடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு நகரசபைக்கு முன்பாக இடமாற்றம் செய்யப்பட்டனர்.
இந்தநிலையில் வீதி ஓரங்களில் புதிதாக வியாபாரம் செய்வதற்கு வேறு நபர்களுக்கு வவுனியா நகரசபை அனுமதி வழங்கியுள்ளது. இதனால் புதுவருட தினத்துக்கான தங்களின் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது என அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
அத்துடன் நகரசபை வாக்குறுதி வழங்கியது போல் மிக விரைவாக பழைய இடத்தைச் செப்பனிட்டு மீண்டும் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
(எ-21)

## நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் நினைவுதினம்

*யாழ்ப்பாணம் ஜன.1*
*முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்ப்பாணம், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர். ரி.மகேஸ்வரனின் 10ஆம் ஆண்டு நினைவுதினம் தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று திங்கட்கிழமை நடை பெறவுள்ளது. நிகழ்வு ஆலயத்தில் சிறப்புப் பூஜை வழிபாடுகளும் பிராத்தனைகளுடன் ஆரம்பமாகும். அன்னாரின் நினைவாக விசேட அன்னாதானமும் இடம் பெறவுள்ளதோடு 90 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.*
*(எ-173)*

## திருவாசக முற்றோதல்

சுன்னாகம் பருத்தி கலட்டி வைரவர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.
(8)

## வீடு நிர்மாணத்தை விளக்கும் நூல்

யாழ்ப்பாணம்,ஜன.1
பதிப்பாசிரியர் நாகேந்திரம் நாராயணன். எழுதிய 'வீடுகள் நிர்மாணிக்கப்படும் நடைமுறைக் கண்ணோட்டங்களும், தொழில்நுட்ப ஆலோசனைகளும்' என்ற தலைப்பிலான நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
கடந்த யூன்மாதம் 8ஆம் திகதி கொழும்பு இராமகிருஸ்ணா மண்டபத்தில் நாடாளுமன்ற உறப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் இந்தநூல் வெளியீட்டு வைக்கப்பட்டது.
(ய)

## மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம்.ஜன.1
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயல்திட்டத்தின் கீழ், பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.
நிகழ்வில் மாவிட்டபுரம் தெற்கு அ.த.க பாடாசலை மாணவர்கள் 14 பேருக்கும், அரியாலைப் பகுதியைச் சேர்ந்த தாய் அல்லது தந்தையரை இழந்த 16 மாணவர்களுக்குமாக மொத்தம் 30 மாணவர்களுக்கு, தலா இரண்டாயிரத்து 500 ரூபா பெறுமதியான பாடசாலை கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன.
(எ-21)

## திருவெம்பா பூசையின் இறுதி நாள் நிகழ்வுகள்

சாவகச்சேரி, ஜன.1
சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவை பூசையின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு விசெட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும் என ஆலய முதன்மைக் குரு சிவஸ்ரீ. ந. இராஜேஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார்.
(9)



கடந்த 40 வருடங்களுக்கு மேலாக திருத்தி அமைக்கப்படாமல் இருந்த

## அச்சு. சரஸ்வதி வித்தியாசாலை வீதி சீரமைக்கப்படுகின்றது

அச்சுவேலி.ஜன.01
கடந்த 40 வருடங்களுக்கு மேலாக திருத்தி அமைக்கப்படாமல் இருந்து வந்த அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை வீதி திருத்தி அமைக்கப்படுகின்றது.
அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வாசலில் இருந்து பருத்தித்துறை, யாழ்ப்பாணம் முதன்மை வீதி வரை செல்லும் பகுதி 15 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படுகின்றது. குறித்த வீதி 40 வருடங்களுக்கு மேலாக திருத்தி அமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்பட்டது.
பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பொதுமக்களும் அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு செல்லும் அடியவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வந்தனர்.
விதியின் திருத்த வேலைகள் முடிவடைந்ததும் இந்த வாரம் பொதுமக்கள் பாவனைக்கு வீதி திறந்து வைக்கப்படும் என வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் யுகராசா ஜெலிபன் தெரிவித்தார்.
(எ-11)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 100 | 100 | 120 | 100 |
| கத்தரி | 200 | 200 | 200 | 200 | 240 |
| மரவள்ளி | 60 | 50 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 140 | 220 | 250 | 200 | 240 |
| பாகல் | 200 | 240 | 300 | 250 | 300 |
| க.கிழங்கு | 80 | 60 | 60 | 80 | 60 |
| பெ.வெங்காயம் | 140 | 140 | 150 | 160 | 140 |
| சி.வெங்காயம் | 400 | 400 | 300 | 280 | 180 |
| பூசணி | 60 | 60 | 70 | 60 | 60 |
| தக்காளி | 140 | 160 | 150 | 150 | 160 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 70 | 70 |
| கீரை | 50 | 50 | 50 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 50 | – | 40 |
| ப.மிளகாய் | 300 | 250 | 300 | 350 | 480 |
| புடோல் | 80 | 70 | 120 | 100 | 100 |
| கோவா | 120 | 180 | 100 | 120 | 120 |
| வெண்டி | 120 | 100 | 140 | 120 | 140 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 220 | 220 |
| லீக்ஸ் | 240 | 250 | 220 | 240 | 260 |
| தேங்காய் | 80 | 75 | 100 | 100 | 70 |
| உ.கிழங்கு | 70 | 60 | 70 | 80 | 70 |
| தேசிக்காய் | 80 | 40 | 60 | 40 | 70 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 240 | 250 | 450 | 240 | 320 |
| கரட் | 160 | 150 | 200 | 160 | 180 |
| முருங்கைக்காய் | 800 | – | – | – | 600 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 1000 | 11000 | 1000 | 1000 |
| நண்டு | 500 | 500 | 500 | 500 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 600 | 500 | 600 | 600 |
| சுறா | 500 | 700 | 800 | 700 |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 500 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 350 | 500 | 500 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 600 | – | 500 | – |
| ஓரா | 350 | 300 | 400 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | – |
| சூடை | 150 | 150 | 120 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 400 | 300 |
| மதனம் | 200 | 250 | 250 | 300 |
| கொய் | 100 | 100 | 50 | 100 |
| பாலை | 200 | 200 | 400 | 400 |
| வாளை | 200 | 200 | 300 | 300 |

# ஜி.சி.ஈ உயர்தரப் பெறுபேறுகள் 2017

யாழ்ப்பாணம்.ஜன.1

**யாழ்ப்பாணம் வட்டு மத்திய கல்லூரி**
**வணிகத்துறை**
ந.துஷாலினி 2ஏபி, சி.தர்சிகா 2பிசி, பா.தாரகி பி2சி, இ.சர்மினி பி2சி, ம.தர்சிகா 3சி, சு.அபிரா சி2எஸ், சி.விதுர்ஷன் 3சி

**கலைத்துறை**
க.தனுகாந் 2பிஎஸ், ர.அனோஜன் பி2சி

**யா. ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்**
**கலைப்பிரிவு**
த.சுஜிந்தினி 3ஏ, ஆ.சரண்யா 2ஏபி, மோ.ரபீனா 2ஏபி, சி.சுகந்தா ஏ2பி, வி.அஸ்மிதா 2பிசி, பா.கிருத்திகா 2பிசி, பி.ஜஸ்மின் பிசிஎஸ்.

**சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி**
**கணிதப்பிரிவு**
ப.தரணிகா 3ஏ, பி.சசிதரன் ஏபிசி, பு.ஜங்கரன் ஏபிசி, அ.சுபாஸ்கரன் ஏ2பி, சி.சனோஜன் பி2சி

**விஞ்ஞானப்பிரிவு**
இ.கார்திகாயினி ஏ2பி, க.யசோதா பி2சி, யோ.ஜங்கரன் பி2சி, ச.சாமினி பிசிஎஸ்

**வர்த்தகப்பிரிவு**
தெ.கிஜிதா 3ஏ, நி.கஜனி 2ஏபி, கி.பிரசாந் 2ஏபி, சி.ராகவன் 2ஏபி, சி.மாஜிந்தா ஏ2பி

**கலைப்பிரிவு**
நே.சிந்துஜன் 3ஏ, த.திவாசினி 2ஏபி, ர.றொசினி 2ஏபி, ம.மதுஷா 3பி, வி.ரேணுஜன் ஏ2பி, ச.கோகிலகபிலா ஏ2பி

**நெல்லியடி மத்திய கல்லூரி கரவெட்டி**
**கணிதத்துறை**
சி.பிரியராஜ் 2ஏபி, ம.துஷிதா 2ஏபி, கி.அபிநயன் ஏ2பி, கு.கிருஷாந் ஏ2பி, ச.சிவானுன் ஏபிசி, பு.சாருஜன் ஏபிசி, ச.வீரேஸ்வரன் ஏபிசி, ஜெ.ஜெயன் ஏபிசி, செ.சிந்துசன் ஏ2பி, சு.ஆர்த்திகன் ஏ2சி, த.அஜிந்தன் பி2சி

**உயிரியல் துறை**
ஸ்ரீ.நிவேதன் 3ஏ, சி.கிருஷாந் 3ஏ, தெ.அபிஷேகா 2ஏபி, வி.தனன் 2ஏபி, சு.வைஸ்ணவி ஏ2பி, சு.சுனேத் 3பி, சா.நிரோசா ஏபிசி, பு.கம்சன் ஏபிசி, சே.உ ஜானா பி2சி, ச.கிருஷிகா 2பிஎஸ்

**வணிகத்துறை**
சி.மிதுஷன் 3ஏ, அ.நிரூபன் 3ஏ, ர.கிருஷிகா 3ஏ, செ.துசிதா 3ஏ, ஞா.புவனலோஜினி 3ஏ, ச.சங்கீதன் ஏ2பி, மு.கார்த்திகா ஏ2பி, நா.யதுர்ஷன் ஏ2சி, சி.டிலக்சன் 2பிசி, சி.கோகுலன் 2பிஎஸ், சி.விதுஷன் ஏ2பி

**கலைப்பிரிவு**
ச.சங்கவி 3ஏ, த.சர்மிகா ஏ2பி, வே.வேணுசா ஏ2பி, கெள.சினேகா 2ஏசி, ர.பிரசாந்தினி 2எசி, க.கஜன் எபிசி, இ.கோபிகா எபிசி, பா.கலா 3பி, ச.கிருஸ்ணபிரியன் எ2சி, ர.சைனுயன் 2பிசி, ப.திவ்வியா 2பிசி, பா.தனுசிகன் 2பிஎஸ்

**பொருளியல் தொழில்நுட்பம்**
க.இளங்கரன் 2பிசி, நா.டிலக்ஸ 2பிசி, அ.திருபரன் 2பிசி, சி.பிரசாந் 2பிசி, ப.பகீதரன் எ2சி, வி.விதிசன் பி2சி, ச.பிரகலாதன் பி2சி

**உயிரியல் தொழில்நுட்பம்**
ர.சௌமியா 2பிசி, ர.அஸ்வினி பி2சி, வி.நிதர்சன் எபிசி, கு.மனோவேதினி பி2சி

**யா. வட்டு இந்துக் கல்லூரி**
**கணிதப்பிரிவு**
கே.சாரங்கன் ஏபிசி, எஸ்.அனுசன் ஏபிசி, மே.கந்தசொரூபன் ஏ2சி, ரி.நிதர்சன் பி2சி, ரி.திலக்சன் பி2சி, ஆர்.வினோதினி ஏசிஎஸ், என்.பிரதீபன் ஏசிஎஸ், கே.நிதுஷன் 3சி

**உயிரியல்பிரிவு**
எம்.அயூரன் 2ஏபி, ரி.கீர்த்தனா 2பிசி, பி.ரிசிகாந்தி ஏபிசி, எம்.றம்மியா பிசிஎஸ், ஜி.அபர்னா பிசிஎஸ், கே.மோகனா 3சி, எஸ்.மீரா 3சி, பி.பிரதா 2சிஎஸ்

**கலைப்பிரிவு**
வை.விஜிதா ஏ2பி, ரி.துலக்ஷனா ஏ2சி, கே.கலக்சனா ஏபிசி, எஸ்.தர்ஷனா ஏபிசி, ரி.எஸ்.நிருஜா ஏபிசி, ரி.அனுசா ஏ2பி, கே.பிரசாந்தினி ஏபிசி, எம்.சர்மினி ஏபிசி

**வணிகப்பிரிவு**
வி.கீர்த்தனா ஏ2பி, எஸ்.சரணிதரன் ஏ2பி

**பொறிமுறைத்தொழில்நுட்பவியல்**
ஜி.அச்சுதன் 3பி, எஸ்.நிரோசன் 3பி, கே.நிலோயிதன் 2பிசி, பி.குமரன் 2பிசி, ஆர்.வைஸ்ணவன் பிசிஎஸ், ரி.வேணுதர்சிகா ஏ2சி

**உயர்முறைமைத் தொழில்நுட்பப்பிரிவு**
ரி.இசைப்பிரிவு 2பிசி, எஸ்.தயாளன் பி2சி, பி.சரண்யா 3சி, என் கோகுலப்பிரியா 2பிசி

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**
**விஞ்ஞானப்பிரிவு**
த.பாசுபதன் 2ஏபி, தி.கிருசாந்தி 2பிசி, சி.யகானா 3சி, செ.துஷாந்தன் 3சி

**கணிதப்பிரிவு**
க.லக்சினி பி2எஸ்

**வர்த்தகப்பிரிவு**
த.மதுசா ஏபிசி, அ.நிவேதா 2ஏசி

**கலைப்பிரிவு**
ஜீ.கபில்ராஜ் 3ஏ, பா.தர்சிகா 2ஏபி, மா.நிவேதனன் 2ஏசி, ப.தர்சிகா 2ஏசி, ர.மைதிலி ஏ2பி, ர.பிரிந்தா ஏ2பி, செ.கிருஷா ஏ2பி, சி.ஜீவாசினி ஏ2பி, லோ.சிந்துஜா ஏ2பி, கு.பிரியங்கா 3பி

**ஹாட்லிக் கல்லூரி**
**கணிதப்பிரிவு**
சி.துவாரகன் 3ஏ, த.தயாறூபன் 2ஏபி, ர.ராகவன் 3ஏ, கா.புவின்தாஸ் 3ஏ, க.பிரதீஸ் 2ஏபி, ர.சானுஜன் 2ஏபி, ச.நிஷாங்கர் 2ஏபி, இ.கிருஸ்ணலோஜன் 2ஏபி, ஜெ.துஸ்யந்தன் ஏ2பி, சு.திலுக்ஷன் ஏ2பி, கா.தினேஸ் ஏ2பி, சி.துளசிகன் ஏ2பி, எ.எட்மன் லக்ஷன் 2ஏபி, யோ. பிரணவன் 2ஏபி, பு.கனிமாருதன் 2ஏபி,
ம.தயானந் ஏ2பி, க.றாகுலன் 2ஏபி, பி.கஜன் ஏ2பி, ம.றாகுலன் ஏபிசி, சி.அகல்யன் ஏ2பி, சி.லலிதாகாந்தன் ஏபிசி, சி.நீராஜன் ஏ2பி, க.கஜரூபன் ஏபிசி.

**உயிரியல் பிரிவு**
த.தயாநிதி 3ஏ, ம.மதுமிதன் 2ஏசி, கு.கவிதாஸ் ஏ2பி, சு.விதுஜன் 2ஏபி, n.அனோஜ் ஏபிசி, ம.குருதர்ஷன் ஏபிசி, சி.பிரதாஸ் 2ஏபி, ந.விதுஷன் ஏபிசி.
வர்த்தகப்பிரிவு
ச.ததிஷன் 2ஏபி, வி.மதன்குமார் 2ஏபி, வீ.அஜந்தன் ஏ2பி, க.துசியந்தன் ஏ2பி
பொறியியல் தொழில்நுட்ப பிரிவு
மை.பெராஸ் 2ஏபி, ப.தர்ஷன் ஏபிசி, சி.ஜதுர்ஷன் 2பிசி, யோ.பிருந்தன் 3சி, சா. சாருகாந் 3சி, கோ.குமரன் 3சி.

**உயிர்தொழில்நுட்ப பிரிவு**
சு.சுகந்தன் 2பிஎஸ்.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**
**கணிதப் பிரிவு**
பி.மாதங்கி 3ஏ, எஸ்.சயந்தினி ஏ2பி, எம்.இளமதி ஏபிசி, இ.கஜரனி ஏபிசி (ஆங்கில மொழி மூலம்) எஸ்.மேலனி ஏசிஎஸ்(ஆங்கில மொழி மூலம்)

**உயிரியல் பிரிவு**
ஏ.அமிர்தவர்சினி ஏ2பி, பி.கஜிசிகா ஏ2பி

**வர்த்தகப் பிரிவு**
எஸ்.அனோஜா 3ஏ பி.பிரேமி 3ஏ கே.தரணி 3ஏ பி.தயனிகா ஏ2பி ஜி.லக்ஷனா ஏ2பி

**கலைப்பிரிவு**
எல்.சங்கீதா 3ஏ, ஜே.துலக்சியா 3ஏ, ரி.பவித்திரா 2ஏபி, வி.கேஜிதா 2ஏபி, ரி.மேரிசுகந்தா 2ஏபி, எம்.மோகனசுந்தரி ஏ2பி, ரி.நிதியவாணி 2ஏசி, ரம்மியா 2ஏசி,
எஸ்.வைஷ்ணவி 2ஏசி, பி.லக்ஷனா 2ஏசி, ஆர்.பயமளா ஏ2பி, எஸ்.திலக்ஷனா ஏ2பி, என்.ல்க்ஷிகா ஏ2பி, பி.ஜெலானி ஏ2பி, எஸ்.மாதினி ஏபிசி



ஆண்களுக்கான புதிய ரீசேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 900 ரூபா தொடக்கம் ஆயிரத்து 200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



## இது புதுசு

## தவறவிடப்பட்ட பெறுபேறு

யாழ்ப்பாணம் ஜன.1
யாழ்ப்பாணம் சாவச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் ஒருவரின் ஜி.சி.ஈ உயர்தரப் பெறுபேறு பத்திரிகைக்கு அனுப்பும்போது தவறவிடப்பட்டுள்ளது என பாடசாலை அதிபர் என்.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
ம.கீதானந்த்-கணிதப்பிரிவு-பி2சி என்ற பெறுபேறே அவ்வாறு தவறவிடப்பட்டதாகும்.

(எ-21)



## பனைசார் கைப்பணி உற்பத்தி மையம் யாழில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்.ஜன.1
யாழ்ப்பாணத்தில் ஏற்றுமதி தரத்திலான பனைசார் கைப்பணிஉற்பத்திமையம் திறந்து வைப்பு.

பனை அபிவிருத்திச் சபையால் பனைசார் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பனைசார் கைப்பணி உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான நிலையமொன்று சபையின் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் கட்டடத்தொகுதியில் சபையின் தலைவர் மருத்துவக் கலாநிதி இராஜலிங்கம் சிவசங்கரால் கடந்த மாதம் 13ஆம் திகதி உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது என சபையின் பொது முகாமையாளர் கலாநிதி பாலசுப்பிரமணியம் சுதாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பனைசார் கைப்பணிப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் அதிகரித்த கேள்வி நிலவுகின்றமையால் சபையானது புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஏற்றுமதி தரத்திலான பனைசார் கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளது.

இதன் மூலம் பனைசார் கைப்பணி உற்பத்தியில் ஈடுபடும் பனையை நம்பி வாழும் குடும்ப அங்கத்தவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இது மட்டுமல்லாமல் தற்போது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையை அரசாங்கம் தடைசெய்துள்ளமையால் இயற்கைச் சூழலுக்கு ஏற்ற தன்மை கொண்ட பனைசார் கைப்பணிப் பொருள்கள் மீது உள்ளூர் வாடிக்கையாளர்களும் அதிக நாட்டம் கொண்டு அவற்றை கொள்வனவு செய்து வருகின்றனர்.

இந்த வகையில் பனை வளத்தின் உச்சப் பயன்பாட்டினை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சபையானது நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மிகவும் தரம் மிக்க பனை சார் உற்பத்திகளை வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற வடிவமைப்புகளில் தயாரித்து சந்தைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஏற்று மதி நோக்கத்துக்காக பனை சார் கைப்பணி உற்பத்திப் பொருள்களுக்கான கட்டளைகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் அக்கட்டளைகள் யாவும் உரிய காலப் பகுதியில்நிறைவேற்றப்படும் என்றார்.

(எ-21)

## முல்லைத்தீவு கடற்பரப்பில்

# வெளிமாட்டங்களைச் சேர்ந்த மேலும் 233 படகுகள் தொழிலில்

### கொந்தளிக்கின்றன மாவட்ட கடற்றொழில் சங்கங்கள்



முல்லைத்தீவு, ஜன.1
வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 305 படகுகள் முல்லைத்தீவு கடல் பகுதிகளில் தொழிலில் ஈடுபடுகின்றன. 72 படகுகளுக்கு அனுமதியளிக்கப்பட நிலையில் இவ்வளவு எண்ணிக்கையான படகுகளை தொழில் ஈடுபட அனுமதியளித்தமை மக்களிடம் கோபத்தை உண்டு பண்ணுகிறது.

இவற்றைவிட இந்திய மீனவர்களுடைய வருகையும் அதிகரித்துள்ளது. எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து எமது கடல்வளத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும். இல்லையெனில் மாவட்ட கடல்தொழில் நீரியல் வளத் திணைக்களம் இல்லாமல் செய்யப்படும் என மாவட்டத்தைச் சேர்ந்த கடல்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல்தொழிலாளர் சங்கங்களைப் பிரநிதித்துவப்படுத்தும் கடல்தொழில் அமைப்பின் ஆண்டிறுதிக் கூட்டம் முல்லைத்தீவு மணற்குடியிருப்பு பொதுநோக்கு மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஜெயா தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2012ஆம் ஆண்டு வெளிமாவட்ட மீனவர்களின் வருகை 32ஆக இருந்தது. அதன் பின்னர் இந்த ஆண்டு 377ஆக அதிகரித்துள்ளது. புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு மீனவர்களுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் செய்வதற்காக மத்திய கடல்தொழில் நீரியல் வளத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிலை தொடருமானால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தொழில் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இதனை 2018ஆம் ஆண்டில் இருந்து மட்டுப்படுத்தி நடைமுறைப்படுத்த சம்மந்தப்பட்ட அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளோம்.

முல்லைத்தீவு மக்கள் எந்தக் காலத்திலும் இடம்பெயர்ந்து போய் வேறு மாவட்டங்களில் தொழில் செய்தது என்று சொன்னால் மிக அரிது. என்ன காரணம் என்றால் எங்கள் கடலின் வளத்தை நாங்கள் பாதுகாத்து ஆண்டாண்டு காலமாக இங்கேயே தொழில் செய்து வருகின்றோம். வெளிமாவட்டங்களில் இருந்து தொழிலுக்காக வருகின்றார்கள். அதற்கான அனுமதிகளை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். நாங்களும் எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றோம். அதை அவர்கள் செவி மடுப்பதில்லை.

படைத்தரப்பு அதிகாரிகளும், அரச அதிகாரிகளும் கலந்து கொண்டு கேட்டுக் கொண்டதற்கு இணங்க எமது மக்கள் இந்த 32 படகுகளுக்கும் அனுமதி வழங்க ஏற்றுக்கொண்டனர். அதன் பின்னர் சில அரசியல் வாதிகளாலும், மீன்பிடி அமைச்சுக்களாலும் 40 படகுகள் அனுமதிக்கப்பட்டன. மொத்தமாக 72 படகுகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்தன. அதற்கும் நாங்கள் அனுமதி வழங்கியிருந்தோம். இந்த எண்ணிக்கை ஆண்டாண்டுகாலமாக அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. குறைந்ததாக இல்லை. இது தொடர்பில் கடந்த ஆண்டு மாவட்டத்துக்கு வந்த மத்திய மீன்பிடி அமைச்சருக்கு எடுத்துரைத்தோம். அவர் பொலீஸாருக்கு அறிவித்தார். சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தார். அவர்களை கைது செய்யுமாறு கூறினார். ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை.

இங்குள்ள கடல்தொழில் நீரியல் வளத் திணைக்களம் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு வேலை செய்வதற்கான திணைக்களம் அல்ல. அது வெளி மாவட்ட மீனவர்களுக்கு வேலைசெய்யும் திணைக்களமாகத்தான் உள்ளது. இப்படியான திணைக்களம் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் கூட எங்கள் மக்கள் இருக்கின்றார்கள். மக்களை அமைதிப்படுத்தி வைத்திருக்கின்றோம்.

எங்கள் மக்கள் இவற்றை மீறிப் பொங்கி எழுவார்களாக இருந்தால் திணைக்களம் இங்கு இயங்க முடியாத நிலை ஏற்படும். இந்த பிரச்சினைகளுக்கு அரசு மிக விரைவில் தீர்வுகளைத் தராவிட்டால் திணைக்களம் இயங்குவது கடினமாகத்தான் இருக்கும்-என்றனர்.

(எ-21-ரி3)

## வயாவிளானில்

# இராணுவத்தினர் பெயரளவிலேயே காணிகளை விடுவித்துள்ளனர்

### பகுதி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம் ஜன 1
வலி. வடக்கு வயாவிளான் பகுதியில் இராணுவத்தினர் பெயரளவிலேயே காணிகளை விடுவித்துள்ளனர் என்று மக்கள் குற்றச்சாட்டுகின்றனர். ஏனைய காணிகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது.

வலி. வடக்குப் பிரதேசத்தை நீண்டகாலமாக இலங்கை இராணுவம் ஆக்கிரமித்து வந்தது. போருக்கு பின்னர் காணி விடுவிப்பு தொடர்பாக பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் 27 வருடங்களாக இருந்த வயாவிளான் பகுதி அண்மையில் மக்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டது.

இவ்வாறு கையளிக்கபட்ட காணிகளில் பெரும்பாலானவை விவசாயக் காணிகளே. ஆனால் விடுவிக்கப்படாத காணிகளில் பல குடியேற்றக் காணிகள் காணப்படுகின்றன. அந்தக் காணிகளை விடுவிக்காமல் விவசாயக் காணிகளை மட்டும் விடுவித்துள்ளனர். அவர்கள் விடுவித்து முட்கம்பி எல்லை போட்டிருப்பதிலிருந்து அவர்கள் வசமுள்ள காணிகள் எமது காணிகள். எனவே எமது குடியிருப்புக் காணிகளை விடுவித்து எமது மீள்குடியேற்றத்துக்கு வழிவகை செய்ய வேண்டும் என்றனர்

(எ-8)



## தேர்தலில் தெரிவுசெய்யப்படவுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கான

# நவீன வசதிகொண்ட தனியான அறைகளை தயார்ப்படுத்த பணிப்பு

### வட மாகாண உள்ளூராட்சி அமைச்சால் சபைகளுக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.1
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கான தவிசாளர், உப தவிசாளர்களுக்கான தனி அறைகள், கூட்டத்துக்கான நவீன வசதிகொண்ட மண்டபங்களை உடன் தயார்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சால் 5 மாவட்டங்களின் கீழ் உள்ள பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள் ஊடாக வடக்கில் உள்ள 34 சபைகளுக்கும் இது தொடர்பான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேற்படி உள்ளூராட்சி சபைகளின் ஆணையாளர், செயலாளர்களுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த காலங்களைபோல் அல்லாது இந்த வருடம் வட்டார ரீதியான தேர்தல் இடம்பெறுகின்றது. இதில் ஒவ்வொரு சபைக்கும் தவிசாளர் உப தவிசாளர் ஆகியோருக்கான தனி அறைகள், உறுப்பினர்கள் ஓய்வு அறைகள், கூட்டங்களின்போது வழங்கப்படவுள்ள வசதிகள், தவிசாளர் இருக்கை வசதிகள், சபா மண்டபத்துக்கான போதுமான காற்றோட்ட வசதிகள், உறுப்பினர்களுக்கான தரமான இருக்கை வசதிகளை உடன் மேற்கொண்டு உதவுமாறு கோரப்படுகின்றது. அத்துடன் தவிசாளர், உப தவிசாளர்களுக்கான தனி தொலைத்தொடர்பு வசதிகள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளை உடன் மேற்கொண்டு அறிக்கையிடுமாறும் கோரப்படுகின்றது- என்றுள்ளது.

(எ-50)

துண்டுப் பிரசுரங்களை அகற்றுங்கள் என உத்தரவிடும் அதிகாரிகளின்

# கண்களில் படவில்லையா யாழ். மாவட்ட செயலகம் முன்புள்ள பதாகைகள்?

## கேள்வி எழுப்புகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்

யாழ்ப்பாணம்,ஜன.1

சிறு துண்டுப் பிரசுரங்களைக்கூட அகற்றுங்கள் என உத்தரவிடுபவர்களின் கண்களில் மாவட்டச் செயலகத்தின் முன்னால், பொருத்தப்பட்டுள்ள அரச தலைவர் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின் படங்களைத் தாங்கிய பெரும் பதாதைகள் படவில்லையா என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கேள்வி எழுப்பினார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுக நிகழ்வு நேற்றைய தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் முறைப்பாட்டுச் செயலகங்கள்ல் ஒன்றான மாவட்டச் செயலகத்தின் நேர் எதிரே ஆளுநர் செயகம் முன்பாக மிகப்பெரிய அளவில் அரசியல்வாதிகளைத் தாங்கிய பனர்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆனால் இதனை அகற்றவோ அல்லது அதுதொடர்பில் முறையிடவோ நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

பொலிஸாரின் உதவியுடன் சிறு துண்டுப் பிரசுரங்கள் அகற்றப்படுகின்றன. அதேபொலிஸாரின் உதவியுடன் உடன் இந்தப் பனர்களை அகற்றமுடியுமா? இது தொடர்பில் ஆளுநரிடம் நேரில் தெரியப்படுத்தியும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் கிடையாது.

முன்னர் அமைச்சர் ஒருவரின் படம் நல்லூர் ஆலயச் சூழலில் மாநகர சபையின் வரியும் இன்றிக் காணப்பட்டது. இந்த நிலையில் குறித்த பனர்களுக்கும் வரி செலுத்தப்படுகின்றதா என்பதற்கு மாநகர சபை பதில் அளிக்க வேண்டும். சட்டங்களை சாதாரண மக்களிடமும் பாமரர்களுக்கும் போதிக்காது சகலருக்கும் ஒரே தன்மையில் நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அதிகாரிகள் முன்வரவேண்டும். முன்னைய ஆட்சிக்காலத்தில் இத்தகைய பனர்களை அகற்றுவதற்று அரசியல்வாதிகளின் தலையீடுகள் இருந்தன.

ஆனால் அது தற்போது இல்லை எனச் சொல்லப்பட்டாலும் ஆளும் கட்சியினது பனர்களில் கை வைக்க அஞ்சுவது அதிகாரிகள் தற்போதும் ஆளும் கட்சி அரசியல்வாதிளுக்கு அஞ்சுகின்றனரா? என்ற ஐயத்தை ஏற்படுத்துகின்றது என்றார். (எ-21)



அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில்

## 13 இந்திய மீனவர்கள் நெடுந்தீவு கடலில் கைது

யாழ்ப்பாணம், ஜன. 1

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 13 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது,

காரைநகர் கடற்பரப்பை அண்டிய நெடுந்தீவுக் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து இரண்டு படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களைக் கைது செய்ததுடன் அவர்கள் பயன்படுத்திய இரண்டு படகுகள், மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றையும் கைப்பற்றியுள்ளோம்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை நேற்றைய தினம் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு சென்று அங்கு வைத்து யாழ்ப்பாண மாவட்ட கடல்தொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தோம். மீனவர்களைப் பொறுப்பேற்ற அதிகாரிகள் அவர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 143 இந்திய மீனவர்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒருதொகுதியினர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் விடுதலை செய்யப்படனர். மிகுதியாக 71 இந்திய மீனவர்கள் யாழ்ப்பாண சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தற்போது கைது செய்யப்பட்டுள்ள 13 இந்திய மீனவர்களையும் சேர்த்து மொத்தமாக 84 இந்திய மீனவர்கள் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்-என்றனர். (எ-8)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன,1

தங்கம்மா அப்பாக்குட்டியின் 93ஆவது பிறந்த நாள் அறக்கொடை நிகழ்வு துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் ஆறு.திருமுருகன் தலைமையில் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் நீதியரசர் க.சிறிபவன் கலந்துகொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

*யாழ்.மாநகரசபையில் இடம்பெற்ற 28 லட்சம் ரூபாமோசடி தொடர்பான*

# திணைக்கள ரீதியிலான விசாரணைகளில் தாமதம்

## மூல ஆவணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதே காரணமாம்

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஊழியரால் மேற்கொள்ளப்பட்ட 28 லட்சம் ரூபா மோசடிதொடர்பான மூலஆவணங்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் திணைக்கள ரீதியிலான விசாரணைகளில் தாமதம் ஏற்படுகின்றது என சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் 2016ஆம் ஆண்டு பெண் ஊழியர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட 28 லட்சம் ரூபா மோசடி தொடர்பில் சபையால் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது. அதன்போதான விசாரணைகளின்போது சபைக்குச் சொந்தமான மூல ஆவணங்கள் பொலிஸாரிம் வழங்கப்பட்டன.

திணைக்களம் ஒன்றில் இடம்பெற்ற மோசடிக்காக திணைக்கள ரீதியிலும் விசாரணைகள் இடம்பெறுவது வழமை. அவ்வாறான விசாரணையும்தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. இருப்பினும் இதில் பல மூல ஆவணங்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் அவை விசாரணைக்கு தடைகளை ஏற்படுத்துகின்றன.

இதனால் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளமூலஆவணத்தைபிரதிசெய்து அதனை உறுதிப்படுத்திவிசாரணைகளைமுன்கொண்டு செல்வது தொடர்பில் ஆராயப்படுகின்றது. என மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-21)

# தமிழகமீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்

## மீனவ அமைப்புகள் கடும் கண்டனம்

கச்சத்தீவு அருகே இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். இதற்கு மீனவ அமைப்புகள் கடும் கண்டனம்.

கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தி மீன்பிடி சாதனங்களை சேதப்படுத்திய இலங்கை கடற்படையினர், மீனவர்களை படகுடன் கைது செய்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மீனவர் ஒருவர் தெரிவித்ததாவது:

ராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து சுமார் 600க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் துறைமுக அதிகாரிகளிடம் அனுமதி டோக்கன் பெற்று நேற்றுமுன்தினம் காலை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். அவர்களை இரவு முழுவதும் மீன்பிடிக்க விடாமல் அச்சுறுத்தியது இலங்கை கடற்படை அச்சுறுத்தியதாகக் கூறப்படுகின்றது. இதனால் மீனவர்கள் வேறு பகுதிகளுக்குச் சென்று மீன்பிடித்தனர்.

மீன்பிடித்துவிட்டு கச்சத்தீவுக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே கரை திரும்பும்போது நேற்றுமுன்தினம் அதிகாலை அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளிலிருந்த பல லட்சம் மதிப்பிலான மீன்களையும் மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தினர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது.

அத்துடன் கற்கள் மற்றும் உருட்டுக்கட்டைகளால் மீனவர்கள் மீது தாக்குதலும் நடத்தினராம். மேலும் இருவருக்குச் சொந்தமான இரண்டு படகுகளையும் படகிலிருந்த 13 மீனவர்களையும் கைது செய்து காங்கேசன்துறை கடற்படைமுகாமுக்கு அழைத்துச் சென்றனர். விசாரணைக்கு பின்னர் மீனவர்களை யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இலங்கை கடற்படையினரின் அத்துமீறலால் படகுகளுக்கு தலா ரூ30 ஆயிரம் முதல் 75 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது -என்றார். (எ-21)

# தமிழ் சம உரிமை இயக்கத்தின் தேர்தல் முன்மொழிவு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.1

தமிழ்த் தேசியப் பேரவையுடன் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் களம் இறங்கியுள்ள தமிழர் சம உரிமை இயக்கத்தின் முன்மொழிவுகள் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன.



வலி. வடக்கு பிரதேச சபை வேட்பாளர் தா.நிகேதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கன் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். முன்மொழிவுகளை சட்டத்தரணி காண்டீபன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரனிடம் வழங்கிவைத்தார்.

நிகழ்வில் மன்னார் மாந்தை, பூநகரி, வலி. மேற்கு, வலி.வடக்கு மற்றும் காரைநகர் பிரதேச சபைகளுக்காக தமிழர் சம உரிமை இயக்கத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

மேலும் சட்டத்தரணிகளான மணிவண்ணன், ஜெயரூபன், திருக்குமரன், காண்டீபன், ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-21)

# பிள்ளைகளுக்கு தமிழில் பெயர் சூட்டுங்கள்

## கலாசார உத்தியோகத்தர் கோரிக்கை



மட்டக்களப்பு, ஜன. 1
தமிழில் பேசினால் நாகரீமற்றவர்கள் என்கின்றோம். பிள்ளைகளுக்குத் தமிழில் பெயர் வைக்கத் தயங்குகின்றோம். தூய தமிழில் பிள்ளைகளுக்கு பெயரை வையுங்கள். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டக் கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் த.மலர்ச்செல்வன் தெரிவித்தார்.
மண்முனை தென்மேற்குப் பிரதேச இலக்கிய விழா அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
அழியும் மொழிகளில் தமிழும் ஒன்றாக இடம்பிடித்திருக்கின்றது. இதற்குக் காரணம் தனித் தமிழை நாம் பேசுவதில்லை. அவ்வாறு பேசுவது நாகரீகமற்றது என்று எண்ணுகின்றோம். நாகரீகம் என்று நினைத்து ஆங்கிலத்தினை கலந்து பேசுகின்றோம். இதன் காரணமாகத் தமிழ்மொழி அழிவடைந்து செல்கின்றது. ஆங்கிலம் தெரியாது எனக்கூறுகின்றோம். ஆனால் ஆங்கிலம் இல்லாமல் தமிழ்பேசுபவர்கள் மிகமிக அரிது. பிள்ளைகளுக்கு பெயர் வைக்கும் போதும், தமிழில் பெயர் வைப்பதில்லை. பிள்ளைகளுக்கும் தூய தமிழில் பெயரை வையுங்கள்.
தாய், தந்தையருக்கு உபகதைகள் பற்றித் தெரியாது. இதனால்பிள்ளைகளுக்கும் உபகதைகளை கூறுவதில்லை. உபகதைகள் ஒவ்வொன்றினுள்ளும் பல்வேறு கருத்துக்கள் உள்பொதிந்துள்ளன. இவ்வாறானவற்றையும் வளர்க்க வேண்டும். பெரும்பாலான பிள்ளைகள் இன்றைய சூழலில் அறநெறி வகுப்புக்களுக்குச் செல்வதில்லை. ஒழுக்கத்தினை மாணவர்கள் பின்பற்றுவதும் மிகக்குறைவு. பிள்ளைகள் விளையாடும் வயதில், கல்வியைத் திணிக்கின்றனர். அதுவும் ஆங்கிலக் கல்வியை அதிகம் திணிக்கின் றனர். பிள்ளைகளை மகிழ்ச்சிகரமாக விளையாட விடாது, மனநோயாளர்களாக அவர்களை உருவாக்கி கொண்டிருக்கின்ற சூழலே தற்போது உள்ளது - என்றார். (5)

# வாழும்போது பாராட்டத் தவறுகின்றோம் இறந்த பின்னர் சிலை வைக்கின்றோம்

## தற்போதைய நிலை இதுதான் என்கிறார் மட்டக்களப்பு மாவட்டச் செயலர்



மட்டக்களப்பு, ஜன. 1
வாழுகின்ற போது பாராட்டுகின்ற தன்மையானது தற்போது எமது சமூகத்தில் அருகிக் கொண்டு செல்கின்றது. மாறாக இறந்தவுடன் சிலை வைக்கின்ற நிலமையைத்தான் காணமுடிகின்றது. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட செயலர் மா.உதயகுமார் தெரிவித்தார்.
போரதீவுப்பற்றுப் பிரதேச கலாசார விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வின் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
தமிழையும் தமிழர் பண்பாட்டையும் வளர்த்த வீரம் விளைந்த மண்ணில் இருந்து கலாசாரவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் நான் பெருமையடைகின்றேன். போரதீவுப்பற்று என்பது நாங்கள் கலையை வளர்க்க வேண்டிய இடமல்ல. கலையை அறிந்து கொண்டு நாங்கள் பயிற்சி பெறவேண்டிய இடம். அவ்வாறான இடத்தில் இவ்வாறான கலையுடன் கூடிய பண்பாட்டு விழா நடைபெறுவதென்பது பாராட்டக்கூடிய விடயமாகும்.
இந்த மண்தான் கலைகாலசாரத்தினைச் சிறப்பாகக் கட்டுக்கோப்புடன் பாதுகாத்து, குடும்ப உறவுபோன்று வளர்த்தெடுக்கின்ற பிரதேசமாக இப்பிரதேசம் காணப்படுகின்றது. இத்தகையதோர் பிரதேசத்தில் இருந்து மருதம் என்ற நூல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.
ஒரு பிரதேசத்திலே ஒரு இனத்தினுடைய, மொழியினுடை அல்லது ஒரு சமூகத்தினுடைய இருப்பு என்பது ஆவணப்படுத்தலூடாகவே செய்யப்படவேண்டிய விடயமாகும். இந்த விடயத்திற்கு, இங்கு வெளியிட்ட நூல் சிறந்த சான்றாகும் இந்த சேவையானது எமது சமூகத்தின் எதிர்கால சந்ததிக்கு விட்டுச் செல்லுகின்ற ஆவணப்பதிவாக அமைகின்றது. இவை இன்றைய நிகழ்வுகள் நாளைய வரலாறுகளாக இளம் சமூகத்தின் மத்தியில் இடம்பிடிக்க வழி சமைக்கும் என்பதில் ஐயமில்லை.
இன்று எமது மொழியிலே இருக்கின்ற பல்வேறு விதமான ஆளுமைகளை கலைகளின் ஊடாக வெளிக்கொணர்ந்து, அதனை எமது சமூகத்துக்குக் கொண்டு செல்லுகின்றவர்கள் கலைஞர்களேயாவர். அவர்கள் வாழ்நாள் முழுவதும் பாராட்ட படவேண்டியவர்கள். வாழ்கின்ற போது பாராட்டுகின்ற தன்மையானது தற்போது எமது சமூகத்தில் அருகிக் கொண்டு செல்கின்றது. மாறாக இறந்தவுடன் சிலைவைக்கின்ற தன்மையைத்தான் நாங்கள் தற்போது காணமுடிகின்றது. வாழும்போது பாராட்டுவதன் ஊடாகவே எமது இளம்சமூகம் எழுச்சியடையும். எழுச்சி அடைவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது - என்றார். (5,46)

# விவசாய உர கொடுப்பனவுக்கு 250 கோடி ரூபா விடுவிப்பு

விவசாய சமூகத்துக்குத் தேவையான உரத்தை பெற்றுக் கொள்வதற்காக 250 கோடி ரூபா நிதி கடந்த வெள்ளிக் கிழமை விடுவிக்கப்பட்டுள்ளதாக அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.
பொலநறுவைபெந்திவெள பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
விவசாய சமூகத்தினருக்கு உரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கிகளுக்கு நிதி கிடைக்கப் பெறவில்லை என்று எனக்குத் தகவல் கிடைத்தது. அது தொடர்பில் நான் நிதியமைச்சில் கேட்டறிந்தேன். அதன் பின்னர் அன்றைய தினமே அந்த நிதியை வங்கிகளின் விவசாய சமூகத்தினரின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பிவைக்க பணிப்புரை வழங்கினேன்.
கிராமிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அந்தப் பிரதேசங்களை அபிவிருத்திசெய்வதற்கு அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களும் முன்மொழிவுகளும் மிகவும் முக்கியமானவை. அபிவிருத்திக்குத் தேவையான நிதியில் எந்தவித குறைபாடும் இல்லை. தேவையாக இருப்பது அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்கள் பிரதிநிதிகளே.
இந்தப் பிரச்சினை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுடன் நிறைவுபெறும். இன்று நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுடன் இணைந்ததாக கிராமிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, அவர்களுக்கு அபிவிருத்தியின் நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது - என்றார். (5)

# போதைக்குள் மூழ்கியிருக்கும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்காதீர்

## மைத்திரி வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 1
போதைப் பொருளுக்கு அடிமையான எந்தவொரு வேட்பாளருக்கும் எந்தக் கட்சியிலும் வாக்குகளை வழங்க வேண்டாம். நாட்டுக்கும் எதிர்கால தலைமுறைக்கும் முன்மாதிரியை வழங்கக் கூடிய மக்கள் பிரதிநிதிகளை நாட்டுக்கும் கிராமத்திற்கும் தெரிவு செய்ய வேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.
உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பொலன்னறுவை நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்காக நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
இதுவரை காலமும் உள்ளூராட்சி நிறுவனங்கள் செயற்பட்டு வந்தது பௌதீகவள அபிவிருத்திக்காக மட்டுமே. இம்முறை உள்ளூராட்சி தேர்தலுடன் மக்களின் பண்புகள் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்தி சிறந்ததோர் சமூகத்தை கட்டியெழுப்பும் விரிவானதொரு நிகழ்ச்சித்திட்டம் அதனூடாக நடைமுறைப்படுத்தப்படும். புதிதாக தெரிவாகும் நகர சபை மற்றும் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளை ஒன்று சேர்த்து இதற்கு முன்பு எந்தவொரு அரசும் முன்னெடுக்காத நிகழ்ச்சித்திட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.
இன்று நாடு எதிர்நோக்கியுள்ள போதைப்பொருள் பிரச்சினையில் இருந்து சமூகத்தை விடுவிப்பதற்குத் தேர்தலில் போட்டியிடும் பெண் பிரதிநிதிகளை ஒன்று திரட்டி போதைப்பொருள் ஒழிப்பு செயலணியைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டின் நல்ல பெயருக்குப் பெரும் களங்கமாக உள்ள தற்கொலையைத் தவிர்ப்பதற்கு இளம் பிரதிநிதிகளை ஒன்று திரட்டி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.
நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கு சுற்றாடல் பாதுகாப்பிற்கு தலைமைத்துவம் வழங்க இந்த கற்ற இளம் தலைமுறையின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். தேர்தலில் வெற்றி பெறுபவர்களைப் போன்று வெற்றி பெறாதவர்ளையும் கட்சி பேதமின்றி இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு இணைத்துக்கொள்ள உள்ளோம். இன்று அனைவரும் நாட்டின் எதிர்காலத்துக்காகத் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்:
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் போட்டியிட்டு வெற்றிபெறும், வெற்றி' பெறாத அனைத்து வேட்பாளர்களையும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிராமத்தில் எனது பிரதிநிதியாக நியமித்துத் தற்போதைய அரசு முன்னெடுத்துள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் வினைத்திறன்மிக்க வகையில் முன்னெடுக்கவுள்ளேன் -என்றார். (5)

# பலஸ்தீன மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிக்கும் - மைத்திரி

கொழும்பு, ஜன. 1
பலஸ்தீன மக்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்துக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
கொழும்பு நகரில் பலஸ்தீன தூதரகத்தை அமைப்பதற்கு அரசு காணித்துண்டு ஒன்றை அன்பளிப்பாக வழங்கியிருந்தது.
இதற்கு நன்றி தெரிவித்துப் பலஸ்தீன அதிகாரசபையின் அதிபர் மஹ்முட் அப்பாஸ், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதத்தை அனுப்பியிருந்தார்.
அதற்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே, பலஸ்தீன மக்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்துக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.
'கொழும்பில் பலஸ்தீனத் தூதரகத்தை அமைப்பதற்குக் காணித்துண்டு ஒன்றை வழங்கியது, எங்கள் நீண்டகால நட்புறவுகளின் மற்றொரு மைல்கல் என்று குறிப்பிட்டுள்ளதை நான் ஒப்புக்கொள்கிறேன். பலஸ்தீன மக்களின் மறுக்கப்பட முடியாத உரிமைகள் மற்றும் ஐ.நா பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களுக்கு அமைய ஒரு சுதந்திரமான, இறையாண்மை அரசை உருவாக்குவதற்கான அவர்களின் உரிமையை இலங்கை தொடர்ந்தும் ஆதரிக்கிறது. இரு நாடுகளின் பரஸ்பர நன்மைக்காகப் பலஸ்தீன அரசுடன் தொடர்ச்சியான ஒத்துழைப்பை பேணிக் கொள்வதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளது' என்றும் அரச தலைவர் மைத்திரி குறிப்பிட்டுள்ளார். (5)



# ஆருத்ரா தரிசனம் முடிந்த பின்னரே கப்பல் சேவை சாத்தியமாகும்?

கொழும்பு, ஜன. 1

யாழ்ப்பாணத்திலிருந்து ஆருத்ரா தரிசனத்தைக் காணச் சிதம்பரம் செல்லும் யாத்திரிகர்களுக்கான கப்பல் சேவை அடுத்த வாரம்சாத்தியமாகும்என்றுவடக்குமாகாண ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டார்.

இது தொடர்பாகக் கொழும்பில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடப்பட்டது. துறைமுகங்கள் அதிகாரி சபையினர், அயலுறவுத் துறை அமைச்சு அதிகாரிகள், இந்து விவகார அமைச்சின் அதிகாரிகள், வடக்கு மாகாண ஆளுநர், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு கே.சச்சிதானந்தம் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி வரை சிதம்பரம் செல்வதற்கான அனுமதியை நீடிக்குமாறு இந்திய நடுவண் அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு, இந்து விவகார அமைச்சிடம் யாத்திரீகர்களுக்கான கப்பல் ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 13ஆம் திகதி கப்பல் ஒழுங்கு சாத்தியமாகும் என்று கூட்டத்தில் கலந்து கொண்டவர்களும் தெரிவித்துள்ளனர்.

இதுவரை சிதம்பரம் செல்வதற்காக 70 விண்ணப்பங்கள் யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்திற்குக் கிடைத்துள்ளதாகவும், கப்பல் ஒழுங்கு உறுதிப்படுத்தப்பட்டவுடன் மேலும் 300 பேர் வரை சிதம்பர யாத்திரைக்குக் கப்பல் மூலம் அழைத்துச் செல்வதற்குத் தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசன உற்சவம் நாளை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# வேட்பாளர்களை தக்க வைப்பதே மகிந்த அணிக்கு பெரும்பாடு

*துமிந்த கருத்து*

கொழும்பு, ஜன. 1

பொதுமக்கள் முன்னணியின் சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைக் கட்சியில் தக்க வைப்பதே அவர்களுக்கு பெரும்பாடாக இருக்கின்றது. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தனக்கு வாக்காளர்களை எப்படித் தேடிக் கொள்ளும் என்று தெரியாது. ஆனால் அந்தக் கட்சியினால் அவர்களது வேட்பாளர்களை தக்க வைப்பதே பெரும்பாடாக இருக்கும்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமை வேட்பாளராகப் பெயரிடப்பட்ட பலரும் அடுத்து வரும் நாள்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்வார்கள். இதுவரையில் 10பேர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கைகோர்த்துள்ளார்கள் - என்றார். (5)

---

## நினைவஞ்சலி



மறைவு 01 . 01 . 1985 | மறைவு 24 . 04 . 1987

### திரு. திருமதி ஏபிரகாம் மாணிக்கம்

(6/1 மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்)
(முன்னை நாள் சிறைச்சாலைகள் மேற்பார்வையாளர் - வெலிக்கடை/ போஹம்பரை / யாழ்ப்பாணம்)

தெய்வங்களே உங்கள் பாதம் பணிந்து ஆசி வேண்டுகின்றோம்.

(CS/12284)(11.17) பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 06 . 1931 | மறைவு 01 . 01 . 2017

### சின்னையா கந்தசாமி

(ஓய்வு நிலை அதிபர்)
திதி: திருதியை

ஆண்டொன்று காற்றைப்போல கரைந்து
போன போதிலும் கூட
உங்கள் நினைவுகள் - எம் நெஞ்சை
விட்டு அகல மறுக்கின்றது
என்றும் உங்கள் அன்பை சுமந்து
வாழும் இதயங்கள்.....

தம்பசிட்டி, பருத்தித்துறை (ACH/00286) (12-17) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### அருணாசலம் நமசிவாயம்

(இளைப்பாறிய ஆசிரியர், புல்லாங்குழல் வித்துவான் கலாபூஷணம், வேணுகானமணி)

தோற்றம் 17.02.1925 | மறைவு 17.12.2013

திதி: பூரணை (01.01.2018)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் பாதாரவிந்தங்களில்
சாந்தியுடன் சங்கமித்திருக்கும் எம் அன்புத்தெய்வமே!
உங்கள் உயரிய வழித்தடத்தில்
அன்புத் தந்தையாய், அறிவூட்டிய ஆசானாய்
அற்புதக் கலைஞனாய் நீங்கள் வாழ்ந்துகாட்டி
எங்களையும் வாழ வைத்து, நாங்கள் நல்வழியில்
வாழ வழிகாட்டிக்கொண்டிருக்கும் உங்களது
அன்புருவம் என்றென்றும் நிலைத்திருக்கும்
எம் மனத்திரையில்

*ஓம் சாந்தி!*

உங்கள் பாதங்களிற் பணிந்து பாசமுடன் நினைவுகூரும்

435/3, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

உதயன் விளம்பரத் தொடர்பு : 021 4930000

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டச் செயலகத்தில் மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் திரு.ச.செந்தூரன் அவர்களின் அன்புத் தந்தை

### வேலுப்பிள்ளை சண்முகதேவன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 01 . 05 . 1994 | இறப்பு 24 . 12 . 2015

### சிறீரஞ்சன் ஜதுர்ஷன்

(திதி: 01.01.2018)

ஈராண்டு ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால்
மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உனது சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில் குடியிருக்க
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.

இக்கிரானை, கந்தரோடை, சுன்னாகம் (CS.12223) (13.17) குடும்பத்தினர்.

---

## 3ஆம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி

அமரர்

### சின்னத்தம்பி இராஜரத்தினம்



தோற்றம் 21.09.1948

மறைவு 04.01.2015

திதி:- மார்கழி வளர்பிறை சதுர்த்தசி

எங்கள் பாசத்தின் ஒளிவிளக்கே! எங்கள் அன்பான அப்பாவே!
ஆண்டுகள் மூன்று ஆனதப்பா ஆனாலும் உங்கள் ஞாபகங்கள்
மீண்டும் மீண்டும் மனதில் உருண்டோட மீளாமல் தவிக்கின்றோம்
உங்கள் நினைவில்...

உயிரிலும் உணர்விலும் ஒன்றாகக் கலந்திருந்து உயிர் உள்ளவரை
உங்களோடு இருப்பேன் என்று சொன்னீர்களே அப்பா!
பல கனவுகள் ஒன்றாக நாமும் கண்டோம், கனவெல்லாம் நனவாகும்
காலம் வரும்முன்னே கண்மூடி மறைவீர்கள் என்று நாம்
கனவிலும் நினைக்கவில்லை...

ஈரைந்து மாதம் வயிற்றில் சுமந்தார் அம்மா ஆனால்
ஓர் ஐந்து வருடம் தோள்மேலும் ஈர்பத்து வருடங்கள்
நினைவோடும் சுமந்த நீங்களும் அம்மாவே...

தொலைந்துபோன இந்த மூன்று ஆண்டில் உங்கள் முகம் தேடாத
நாள்களே இல்லை அப்பா... கடைசி முகம் கூட வந்து பார்க்க
முடியாத வேளையில் சத்தம் இல்லாமல் கதறி அழவைத்து மொத்தமாய்
எங்களை மோசம் செய்ததென்ன எங்கள் கண் அறிந்த அன்புத் தெய்வமே...

பொத்திப் பொத்தி வைக்கும் எங்கள் நெஞ்சு குமுறல்களுடன்
மண்ணோடு மறையும் காலம்வரை எம் நினைவோடு இருக்கும்
உங்கள் நினைவுகளுடன், கண்ணீரில் கரையும் காலத்துடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்...

உங்கள் பிரிவால் துயருறும்

விஸ்ணுகோட்டம், A9 வீதி, பளை. (CS/12414)(11.17) அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகள், உறவினர்கள்

# புராதன பௌத்த சின்னம் என்ற பெயரில் சம்பூரில் முருகன் ஆலயம் ஆக்கிரமிப்பு



கொழும்பு, ஜன. 1
திருகோணமலை சம்பூர், சூடைக்குடாப்பகுதியில்புரா தன பௌத்த எச்சங்கள் இருப்பதாகக்கூறி, முருகன் ஆலயம் அமைந்துள்ள பகுதியை தொல்பொருள் திணைக்களம் விரைவில் சுவீகரிக்க வுள்ளது. தொல் பொருட் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் மந்தவெல, இதனைத் தெரிவித்தார்.

சம்பூர் சூடைக்குடா செதிய அமைந்துள்ள பகுதியை பாதுகாப்பதற்காக அந்தப் பகுதி விரைவில் தொல்பொருள் திணைக்களத்தினால் சுவீகரிக் கப்படவுள்ளது. கிழக்கில் மத மற்றும் தொல் பொருள் சின்னங்களை அடையாளம் காணும் நடவடிக்கையின் போதே, பழைமை யான பௌத்த வழிபாட்டு சின்னம் சம்பூரில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பிரதேசம் தொல்பொருள் மற்றும் வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்த பகுதி என்று திணைக்களம் பிர கடனம் செய்வதற்கு முன்னரே, பௌத்த வழிபாட்டுச் சின்னம் (செதிய) மற்றும் அதன் சுற்றுப் பகுதிகள் அழிக்கப்பட்டு விட்டன.

இந்தப் பகுதியைத் தொல்பொருள் திணைக்க ளம் பொறுப்பேற்ற பின்னர், வரலாற்று முக்கி யத்துவம் வாய்ந்த பழைமையான சம்பூர் செதிய தொடர்பாக மேலதிக அகழ்வாய்வு மற்றும் அளவீடுகள் நடத்தப்படும். இலங்கை யில் எல்லா சமூகங்கள் மற்றும் மதங்கள் தொடர்பாக இரண்டரை இலட்சம் வரையான மத, கலாசார, தொல்பொருள் முக்கியத்தவம் வாய்ந்த இடங்கள் உள்ளன. இவற்றைப் பாது காப்பது தொல்பொருள் திணைக்களத்தின் கடமையாகும். அடுத்த தலைமுறைக்காக இவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

சூடைக்குடாவில் உள்ள மத்தளமலையில் அமைந்துள்ள முருகன் கோவில் பகுதி யையே தற்போது, பழைமையான பௌத்த சின்னம் அமைந்துள்ளதாகத் தொல்பொருள் திணைக்களமும், பௌத்த பிக்குகளும் உரிமை கோரத் தொடங்கியுள்ளனர் என்று தமிழ் மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இந்த ஆலயத்தில் பொங்கலிட்டு வழிபாடு செய்து கொண்டிருந்த மக்களைச் சில வாரங் களுக்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநர் றோகித போகொல்லாகமவுடன் சென்ற அவ ரது மனைவி தீப்தி போகொல்லாகம அச்சுறுத் தல் விடுத்திருந்தார்.

ஆலய மரபுகளை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்ட அவருக்கு எதிர்ப்புத் தெரி வித்த பொதுமக்களை அவர் கோபத்துடன், உங்களை அழித்து விடுவேன் என்று எச்சரித் திருந்தார். அத்துடன், ஆலயத்தின் கட்டுமானப் பணிகளையும் இடைநிறுத்த ஆளுநர் றோகித போகொல்லாகம உத்தரவிட்டார்.

நூறு ஆண்டுகளுக்கு மேலாக பராமரிக்கப் படும் இந்த முருகன் ஆலயத்தில், ஏழு தலை முறைகளாகத் தமது முன்னோர்களால் பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கு பூசை நடத்தி வரும் குருக்கள் தெரிவித் தார். இந்த ஆலயம் 2014ஆம் ஆண்டு அர சில் பதிவு செய்யப்பட்டுள்ளதும் குறிப்பி டத்தக் கது. (5)

**ஆங்கில வகுப்பு**
தரம் - 06 தொடக்கம்
11 வரை.
தனிப்பட்ட வகுப்பு அல்லது
குழுவாகவோ வழங்கப்படும்.
077 785 8139
(J/8954)(11.1.17)

**தேவை**
மாத குத்தகைக்கு பேபி றோசா பஸ் அல்லது றோசா பஸ் தேவை. 077 470 1495
**விற்பனைக்கு**
மின்பிறப்பாக்கி (ஜெனரேட்டர்)
உயர் காற்றமுத்தி (கம்பிரேசர்)
தையல் இயந்திரம் (Juki) விற்பனைக்கு
077 470 1495
(CS 12412) (14.17)

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
**பண்டிகைக்கால ஏசியன் தளபாடத்தின்**
**மாபெரும் மலிவு விற்பனை**




**இல: 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
**021 791 6911, 076 821 9415, 077 358 3879**

## சேதமடைந்த நாணயத்தாளை மாற்றுவதற்கான கால எல்லையை நீடிக்க மைத்திரி அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 1
தூய நாணயத்தாள்களை பயன்படுத்துவது தொடர்பான கொள்கையின் கீழ் சிதைக்கப் பட்ட நாணயத்தாள்களுக்கு நேற்றைய தினத் துக்குப் பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள் ளப்படமாட்டாது என்று இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருந்த நிலையில், மக்களிட முள்ள அத்தகைய நாணயத் தாள்களை வர்த்தக வங்கிக் கிளைகளில் மாற்றிக்கொள் வதற்கு மேலும் சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் அந்தக் கால எல்லையை எதிர்வ ரும் மார்ச் 31ஆம் திகதி வரை நீடிக்குமாறு மைத்திரிபால சிறிசேன மத்திய வங்கிக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

சிதைக்கப்பட்ட நாணயத் தாள்கள் இருக்குமா யின் நேற்றைய தினத்துக்கு முன்னர் அதிகா ரமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக் கிளைகளில் மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற மத்திய வங்கியின் தீர்மானத்திற்கு ஏற்ப 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அது தொடர்பாக மக்களுக்கு அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது.

சிதைக்கப்பட்ட எந்தவொரு நாணயத் தாளும் இன்றைய தினத்தின் பின்னர் அரச அல்லது தனியார் வங்கியினால் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்று அறிவிவிக்கப்பட்டிருந்தது டன், நிதிச் சட்டத்திற்கு ஏற்ப விதிக்கப்பட்ட இந்த விதிமுறையின் கீழ் குறித்த நாணயத் தாள் கள் இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பில் வைக்கப்படும் என்பதுடன், அவற்றுக்கு எந்த விதமான கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட மாட்டாது.

நாணயத் தாள்களை அச்சிடுவதற்கு பெருந் தொகைப் பணத்தை அரசு செலவிட வேண் டியுள்ள காரணத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் செல்லுப டியாகும் நாணயத் தாள்களை வேண்டு மென்றே சிதைப்பவர்களுக்கு எதிராக 1949 ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நிதிச் சட்டத் தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண் டனை வழங்குவதற்குச் சந்தர்ப்பம் உள் ளது. (5)

## சந்திரிகாவுக்கு அதிகாரம் இல்லை!

*போர்க்கொடி தூக்கும் அமைச்சர்*

அரசுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் முன் னாள் அரச தலைவர் சந்தி ரிகா குமாரதுங்கவுக்கு இல்லை என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித் தார்.

கூட்டு அரசு தொடர்பில் சுதந் திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளுக்கு இடை யில் ஏற்படுத்திக் கொள்ளப் பட்ட இரண்டு ஆண்டுகளுக் கான புரிந்துணர்வு உடன்ப டிக்கை நேற்றுடன் நிறைவ டைந்துள் ளது. உடன்படிக் கையை தொடர்ந்தும் நீடிக்க நடவடிக்கை மேற்கொள்ளு மாறு சம்பந்தப்பட்ட தரப்பின ருக்கு முன்னாள் அரச தலை வர் சந்திரிகா பணித்துள்ள தாக நாடாளுமன்ற உறுப்பி னர் டளஸ் அளகப்பெரும தெரிவித்திருந்தார்.

டளஸின் கூற்றை நிராக ரித் துள்ள அமைச்சர் சுசில் பிரே மஜயந்த கூட்டு உடன்படிக் கையை நீடிப்பது தொடர் பான பணிப்புரைகளை வழங்க முன்னாள் அரச தலைவர் சந்திரிகாவுக்கு எந் தவித உரிமையும் இல்லை. அதே நேரம் எதிர்வரும் உள் ளூராட்சி மன்றத் தேர்தல்க ளின் பின்னர் 2018ஆம் ஆண்டுபெப்ரவரிமாதம்18ஆம் திகதி கூட்டு அரசின் புரிந்து ணர்வு உடன்படிக்கை நீடிப்பு குறித்துத் தீர்மானமெடுக் கப் படும் - என்றார் சுசில். (5)

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்
அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



**அருள் நாயகி**
**புத்தக நிலையம்**
(கொடிகாமம்)



பாடசாலை உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், மாதிரி வினா விடைகள், தினசரி பத்திரிகைகள், வாராந்த சஞ்சிகைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் யாவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இதுவரை எமக்கு ஆதரவு தந்துகொண்டிருக்கின்ற எமது அன்பான வாடிக்கையாளர்கள் மற்றும் எமது நலன் விரும்பிகளுக்கு எமது இதய பூர்வமான நன்றிகளை இந்நாளில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்று உதயமாகவிருக்கும் புதுவருடத்தில் (ஏவிளம்பி வருடம்) நீங்கள் அனைவரும் 'அருள் பேராற்றல் கருணையினால் உடல் நலம், நீளாயுள் நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞானம் பெற்றோங்கி வாழ்க வளமுடன்.

**கண்டி வீதி, கொடிகாமம்.**
(சி.3164)
(13.17)
Tel: 077 514 4093, 077 493 7585

# 1400 பக்க அறிக்கையை ஆராய்ந்த பின்னரே நடவடிக்கை குறித்த முடிவாம்!

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ள மத்திய வங்கிப் பிணை முறி மோசடி விசாரணை அறிக்கை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து முடிவெடுப்பதற்கு முன்னர், அரச தலைவர் செயலக அதிகாரிகள் அதனை முழுமையாக ஆராயவுள்ளனர்.

மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பாக விசாரணை நடத்த கடந்த ஜனவரி மாதம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் உருவாக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் கே.ரி.சித்ரசிறி தலைமையிலான ஆணைக்குழு தமது அறிக்கையை நேற்றுமுன்தினம் பிற்பகல் அரச தலைவரிடம் கையளித்துள்ளது.

இது தொடர்பாகத் தகவல் வெளியிட்டுள்ள அரச தலைவர் செயலக அதிகாரி ஒருவர்,

விசாரணை அறிக்கை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்று முடிவு செய்வதற்கு முன்னர், அறிக்கையை முழுமையாக அரச தலைவர் செயலக அதிகாரிகள் ஆராயவுள்ளனர்.

இந்த அறிக்கை விரிவான ஒன்று. அதிகாரிகள் இதனை ஆராய்வதற்குச் சற்றுக் காலஅவகாசம் தேவைப்படும்.

இந்த அறிக்கை, சாட்சியங்கள், இணைப்புகள், பரிந்துரைகளைஉள்ளடக்கியதாகஅமைந்துள்ளது. 100இணைப்புகளுடன்இந்தஅறிக்கை மொத்தம் ஆயிரத்து 400 பக்கங்களைக் கொண்டதாக உள்ளது. என்று தெரிவித்தார்.

அதேவேளை, 70 சாட்சிகளின் சாட்சியங்களையும் இந்த அறிக்கையில் உள்ளடக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. (5)

7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
13 . 06 . 1946

இறப்பு
20 . 12 . 2010

பஞ்சலிங்கம் செல்வராஜா
(முன்னாள் சாரதி. DI - இ.போ.ச)
திதி : பூரணை

ஆண்டுகள் ஏழு மறைந்துவிட்டது அப்பா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
காலங்கள் ஆயிரம் போனாலும் மறக்க
முடியுமா உங்கள் நினைவுகளை எங்கள்
உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும்

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வமஹால்,
மில்லேன்,
ஏழாலை மேற்கு.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

(CS 12435) (14.17)

75 ஆவது பிறந்த நாள்

ஆறுமுகம் இராஜகோபால்
(செம்பியன் செல்வன்)



மண்ணில் உன்னத பிறவி
எடுத் தீர்கள்
உங்கள் சேவையில்
ஏற்பட்ட சுவடுகளை
கேட்டேன் மறந்து விடுவேன்
பார்த்தேன் புரிந்து கொண்டேன்
பங்களித்தால் ஆழ பதிந்து
விடுவேன்

01.01.1946 20.05.2005

அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(CS.12368) (13.7)

ராகுலன்
புவனா



## ஜி.சி.ஈ. உயர்தரத்தில்

### பாடசாலை அனுமதி மறுத்த மாணவி மாவட்டத்தில் முதலிடம்

கொழும்பு, ஜன. 1

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலைப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு உயர் தரத்தில் கல்வியைத் தொடர பாடசாலையில் அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில், தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றி மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.


வணிகப் பிரிவில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஹரினி நிஹாரா கஜசிங்க என்ற மாணவியே இவ்வாறு முதலிடம் பெற்றுள்ளார்.

தங்காலை மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற ஹரினி நிஹாரா என்ற மாணவி உயர்தரத்தில் ஆரம்பத்தில் உயிரியல் பிரிவைத் தெரிவு செய்துள்ளார். ஒன்றரை ஆண்டுகளின் பின்னர் உயிரியல் கற்கையை தொடர அவருக்குக் கடினமாகியுள்ளது. அதன் பின்னர் வர்த்தகப் பிரிவை தெரிவு செய்துள்ளார். பாடசாலை நிர்வாகம் அதற்கு அனுமதி மறுத்துள்ளது.

இதனால் உயர் தரப் பரீட்சையைத் தனிப்பட்ட பரீட்சாத்தியாகவே எதிர்கொண்டுள்ளார். கடந்த 28ஆம் திகதி உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. அதில், வ்ணிகப் பிரிவில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார் ஹரினி. (5)

9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் S.K. தியாகராசா (தியாகு)



(பிரபல புகையிலை வர்த்தகர்)

தோற்றம்
01.01.1943

மறைவு
01.01.2009

திதி: சதுர்த்தி 22.12.2017

அன்பாலும் பண்பாலும் எல்லோரையும் அரவணைத்த
அன்புத் தெய்வமே ஐயா
ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
அழியாது உங்கள் நினைவுகள்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூசிப்போம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி !

நிரந்தர முகவரி:
தன்னை, களபூமி, காரைநகர்,
தற்காலிக முகவரி:
இல.58, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்,
077 183 6625

உங்கள் நினைவுகளுடன்
என்றும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(IN 8982) (17)

# போதைப் பாவனைக்கு எதிராக அனைவரும் போராடுவோம்

## முஹம்மட் பைசல் தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜன.1
போதைப்பொருள் பாவனைக்கு எதிராக போராடுவதற்கு இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கைகோர்க்க வேண்டும் என அட்டாளைச்சேனை முதலாம் பிரிவு கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் எம்.ஐ.முஹம்மட் பைசல் தெரிவித்தார்.

'போதையற்ற இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவோம், அதற்கு ஆதரவாக குரல் கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் நேற்று அட்டாளைச்சேனையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"போதையை ஒழிக்க வேண்டும், போதைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகின்ற எந்த அரசியல்வாதியாவது இவற்றை தடுப்பதற்கு இறுக்கமான சட்டங்களை நடைமுறைப்படுத்தியதுண்டா? அல்லது சட்டங்களை இயற்றும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்தில் உரையாற்றி அதுதொடர்பாக தீர்க்கமான சட்டத்தை இயற்ற யாராவது முயற்சித்ததுண்டா?

சில அரசியல்வாதிகளும், அரசியல் அதிகாரம் கொண்ட நபர்களும் தங்களது அரசியல் இலாபங்களுக்காக மாத்திரம் பயன்படுத்திக்கொண்டு எமது சமூகத்தைச் சீரழிக்கப் போதை மாத்திரை வியாபாரிகளுடன் துணை போகின்றனர்.

இதற்குத் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கும், போதைப்பொருள் பாவனைகளைத் தடுக்கும் செயலிலும் அதனை எதிர்த்துப் போராடக்கூடிய வகையில் இன்றைய இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்" என்றார். (ற-ரி5)




## உலர் உணவுப் பொருள்கள் வழங்கல்

வவுனியா.ஜன.1
வவுனியாவில் 15பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.
அன்னை சாந்தநாயகியின் 15ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு உதவும் கரங்கள் நற்பணி மன்றம் தமிழ் விருட்சம் அமைப்பினூடாகப் பொருள்கள் வழங்கப்பட்டன.
இதில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஸ். ஸ்ரீனிவாசன், அன்னை சாந்தநாயகியின் உறவினர்கள், மாண்வர்கள், பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற - ரி4)

## விசமிகளால் வீடுகள் சேதம்

ஹட்டன்.ஜன.1
ஹட்டன் தும்புறுகிரிய வீதிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு இரவு வேளையில் விசமிகள் கற்களால் வீடுகளை சேதப்படுத்துவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.
இவ்வாறான விசமிகளின் செயற்பாடு வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவாகியதாக வீட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு ஒன்றைப் பதிவு செய்தார்.
இரவு வேளையில் விசமிகள் குழுக்களாக நடமாடுவது மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை தோற்றிவித்துள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்தனர். (ற.ரி4)



## வாவியின் தூய்மை பேணும் விழிப்புணர்வுப் பரப்புரை

மட்டக்களப்பு.ஜன.1
மட்டக்களப்பு வாவியைத் தூய்மையாகப் பேணும் விழிப்புணர்வுப் பரப்புரை நேற்று ஏறாவூரில் நடைபெற்றது.
"நமது குப்பையை முகாமைத்துவம் செய்து நமது சூழல், நமது வாவியின் தூய்மையை உறுதிப்படுத்துவோம்" எனும் கருப்பொருளில் பரப்புரை நடைபெற்றது. ஏறாவூர் வாவிக்கரையோர சிறுவர் பூங்கா, மற்றும் பொழுது போக்கு கரையோரத்தில் விழிப்புணர்வுப் பரப்புரை ஆரம்பித்து வைக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா "ஷெட்" நிறுவனத்தின் தலைவர் கே. அப்துல் வாஜித் தெரிவித்தார்.
இந்த விழிப்புணர்வில் விநோதமாக வாவிக்கரைப் பூங்காவுக்கு வருகை தரும் சிறுவர்களுக்கும், சிறுமி களுக்கும் இனிப்பு மிட்டாய் வழங்கி அதன் கடதாசியை குப்பைத் தொட்டியில் இடச் செய்த பின்னர் சிறுமிகளுக்கு கூந்தல் அலங்காரக் கட்டு நாடாவும், வளர்ந்தோருக்கு திண்மக் கழிவு முகாமைத்துவ பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. (ற.ரி4,46)



பதுளைப் பகுதியின் மலங்காமை தோட்டத்தில் பதினைந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் கொங்கீறீற்றிலான பாதை வேலைகளை நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் நேற்றுப் பார்வையிட்டார்.

## வாகன விபத்தில் சாரதி படுகாயம்

கொழும்பு.ஜன.1
கொழும்பிலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற லொன்கினிகத்தேன பகுதியில் விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்தார். ஐயப்பபக்தர்கள் ஆலயத்துக்கு பொருட்கள் ஏற்றி வந்த வாகனமே பாதையை விட்டு விலகி கற்பாறையில் மோதுண்டதால் இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்துக்குள்ளான வாகனத்தின் சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற.ரி4)



## ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு.ஜன.1
நாவலகம பகுதியில் உருக்குலைந்த நிலையில் நீரோடையொன்றின் அருகே ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.
பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சடலம் மீட்கப்பட்டது.
சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (ற.ரி4)



## 27 வருடத்தின் பின்னர் கட்டடம் கையளிப்பு

மட்டக்களப்பு,ஜன.1
மட்டக்களப்பு மயிலம்பாவெளிப் பிரதேசத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் பாவனையிலிருந்த கட்டடம் சுமார் 27 வருடங்களின் பின்னர் நேற்று உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது. இந்தக் கட்டத்தை மீளக்கையளிக்க உதவிய அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன அத்துடன் ஒத்துழைப்பு வழங்கிய ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் மயிலம்பாவெளி கருணாலயம் சுவாமி ராமதாஸ் நிறுவனத்தின் முகாமையாளர் ராஜதுரை முருகதாஸ் நன்றி தெரிவித்தார்.
கட்டடத்தை 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இராணுவத்தினரும் அதையடுத்து 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பொலிஸ் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினரும் பயன்படுத்திவந்தனர்.
போர் முடிவுற்ற பின்னர் தர்ம செயற்பாடுகளுக்காக சுவாமி ராமதாஸ் நிறுவனம் கட்டடத்தை மீள வழங்குமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்ததுடன் கவனவீர்ப்புப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டது.
இறுதியாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவை அரசதலைவர் செயலகத்தில் சந்தித்து தமது கோரிக்கையை முன்வைத்ததையடுத்து கட்டடத்தை மீளக்கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி4)

## ஜி.எஸ்.பி. சலுகையை வழங்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும்

### மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் கோரிக்கை

பதுளை,ஜன.1
இலங்கைக்கான ஜி.எஸ்.பி. சலுகையை அமெரிக்கா நிறுத்தியமை குறித்து அமெரிக்கா மீள் பரிசீலனை செய்து அச்சலுகையை மீளவும் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். ஊவா மாகாண அமைச்சு கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்படும் முன்னுரிமைப்படுத்தலுக்கான வரிச்சலுகை திட்டமொன்றை நிறுத்தியுள்ளது. ஜி.எஸ்.பி. பயனாளி நாடுகள் அனைத்துமே அச்சலுகையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
இலங்கையானது அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி துரிதமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் அமெரிக்கா மேன்மேலும் எமது நாட்டுக்கு உதவுவதை விடுத்து வரிச்சலுகைகளை நிறுத்துவது இலங்கையின் அபிவிருத்திக்குப் பெரும் தடையாக அமைந்துள்ளது.
எமது நாட்டின் மலையகப் பெருந்தோட்டத்துறை மக்கள் மேம்பாட்டில் எமது அரசு முன்னோடி வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வரும்போது அமெரிக்கா அரசு எமது அரசின் திட்டத்துக்கு உதவுவதற்கு மாறாக வரிச்சலுகைகளை நிறுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.
எமது நாட்டின் நிலையை உணர்ந்து அமெரிக்க அரசு எடுத்திருக்கும் வரிச்சலுகையை நிறுத்துவதை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் - என்றார். (ற,ரி4)




## சாதனை செய்திட வந்ததடி

புத்தாண்டு வந்தது வந்ததடி- பூமி
பூரிக்க வைத்திட வந்ததடி
சத்தான வாழ்வு மலர்ந்திடவே நாட்டில்
சாதனை செய்திட வந்ததடி!

செய்தொழி தூக்கிட வந்ததடி- நாளும்
சேர்ந்து செயற்பட வந்ததடி
வையத்தை வாழ்விக்க வந்ததடி- நிதம்
வறுமை யொழித்திட வந்ததடி!

பேதம் அகற்றிட வந்ததடி- என்னும்
பெருமை பெருக்கிட வந்ததடி
கீதம் இசைத்திட வந்ததடி- பாரில்
கிருபை பொழிந்திட வந்ததடி!

புதுமை பொழிந்திட வந்ததடி- நின்னு
பூமியைக் காத்திட வந்ததடி
பதுமை பணித்திட வந்ததடி- நாட்டின்
பாரம் இறக்கிட வந்ததடி!

வி.சி.குஞ்சிதபாதம்

## தோற்காது பாருங்கள்

பாமர மக்களும் நன்றாகப்
படித்து விட்டார்கள்
பதினாறு பேறுகளும் பிறக்கும்
பதினெட்டில் (2018) வரமாகும்

ஏமாளியாக எவருமே இனி
இருக்க மாட்டார்கள்
இனியொரு விதிசெய்ய வேண்டியே
இந்தத்தேர்தல் தேடி வருகிறது

இருப்பதற்கு வீடுகள் வேண்டும்
என்று புதுவருடம் பிறக்கட்டும்,
இடம்பெயர்ந்தோர் படும் வேதனை
இனி வாராதென்று உருவாகட்டும்,

உழைப்பதற்கு உருப்படியான பல
தொழிற்சாலைகள் பெருகட்டும்,
உயர்மட்டங்களில் நிகழ்கின்ற
ஊழல்கள் அம்பலமாகட்டும்

சொகுசாக வாழ நினைக்கிற கூட்டம்
சோபிக்காது. இனி நீடிக்காது
சொத்துப் பத்து சேர்க்கும் கும்பலும்
சோக்காக வாழ முடியாது

வெகுவாக வாழ்வதென்பதும்
வெறிச் சோடிப்போயே விடும்
விஞ்ஞான கணித மேம்பாடு ஒன்றுதான்
வடபகுதியில் நீடு வாழும்

பெறுபேறுகளில் பெரும்பாலானவை
சாதனை படைக்கப்படுகிறது
போதைகளும் பெரும்பாலும்
பறிமுதலாகி அழிக்கப்படுகிறது

மறு வாழ்வு அளிக்கப்பட்டோரின்
மாறிய வாழ்வு வெற்றி பெறும்
மனித உரிமைகள் புதுவருடத்தில்
மறக்கப்படாது விழித்திருக்கும்

இளைஞர்களின் கரங்கள் வலுப்பெறும்,
எதிர்காலம் பெண்கள் வசமாகும்,
கலைஞர்களின் பெறுமதி உயர்வாகும்,
களவுகள் தானாகவே குறைந்துவிடும்

சிலைகளும் இனிமேல் உயிர் பெறும்
சமயங்களும் இனி அற்புதமாகும்,
விலைபோகும் அரசியல் இனிவெளிப்படும்
வீதிகளில் நீதிதேவதை அவதாரமாவாள்

கே.எஸ்.சிவஞானராஜா

## ஏதாவது செய்திடுவாய்...

வீதிகளில் உறங்குகின்றோம்
விடிவுக்காய் காத்திருந்து
அங்கலாய்த்து நிற்கின்றோம்
அரசமைப்பை எதிர்பார்த்து

இதுவரையும் ஏமாந்தோம்
இனியும் கதி அதுதானா?
எனினும் ஏதோ நம்பிக்கையில்
எதிர்பார்ப்புக் குறையவில்லை

கூட்டாட்சி அரசும்
கூட்டுக் களவாணிதான்
என் இனிய ஆண்டே
ஏதாவது செய்திடுவாய்

– லயனல்

சித்தம் மகிழ்ந்திட சிந்தை குளிர்ந்திட
சிறந்தாண்டே வருக - நாம்
புத்தம் புனிதராய் புவியினில் வாழ்ந்திட
பிறந்தாண்டே வருக
நித்தம் நிலையாக நிதம் வாழ்வில் நிம்மதி
நிறைந்தாண்டே வருக - போர்
யுத்தம் சத்தமென்று யுகங்கள் நீண்டிடா
புத்தாண்டே வருக

இந்நில மாந்தரின் இன்னல்கள் பாவங்கள்
கண்ணெதிரே ஒழிய - உயர்
நன்நில மானநாம் வாழ்ந்திடும் பூமியில்
நரகத்தனம் அழிய
எண்ணிய விதமாய் இன்பமு நன்மைகள்
ஏற்றமுடன் பெருக- என்றும்
பொன்நில மீதுவென புவியினர் போற்றிட
புத்தாண்டே வருக

இத்தனை காலமும் இருந்திட்டோம் பொம்மையாய்
இன்னொருவன் கையில் - தினம்
சுத்தனைப் போல்முகம் காணும் சுய நல
வாதிகளின் குகையில்
எத்தனை துயரங்கள் எம்வாழ்வில் சந்தித்தோம்
இதுகாலம் வரையில் - நல்
வித்தாக விளைந்து விருட்சமாய் எழுவோமிப்
புத்தாண்டின் வரவில்


கடந்த காலத்தில் நடந்தவை கெட்ட ஓர்
கனவாகிப் போகட்டும் - இனியும்
தொடர்ந்து அதுபோல் அல்லாமல்
அமைதி நிலையுரு வாகட்டும்
பிறந்த இவ் வாண்டினில் ஆவது கொடுமைகள்
தீமைகள் ஒழியட்டும் - மக்கள்
சிறந்த மனிதராய் வாழ்ந்திட ஆண்டவன்
நல்லருள் பொழியட்டும்

டே.த.எட்வின்

# புத்தாண்டே வருக வருக...



# அரசியலுக்கு வந்தார் 'சுப்பர் ஸ்டார்' ரஜினி



"அரசியலுக்கு வருவது உறுதி. தனிக்கட்சி ஆரம்பித்து அடுத்துவரும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவேன்" என்று தெரிவித்தார் தமிழ் திரையுலகின் 'சுப்பர் ஸ்டார்' என்று அறியப்படும் ரஜினி காந்த்.

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவாரா? வர மாட்டாரா? என்ற விவாதம் சமிப காலமாக உச்சக்கட்டத்தை எட்டியிருந்தது. தமிழகத்தின் தற்போதைய அரசியல் நிலவரங்களை ரஜினியும் கடுமையாக விமர்சித்து வந்தார். ரசிகர்கள் சந்திப்பையும் அவர் தொடர்ச்சியாக நடத்தி வந்தார். இதனால் ரஜினியின் அரசியல் பிரவேசம் குறித்து பல்வேறு கருத்துக்கள் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருந்தன. இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் 31ஆம் திகதி அதாவது நேற்று தனது இறுதி அறிவிப்பை வெளியிடுவேன் என்று ரஜினி தெரிவித்திருந்தார். இந்த நிலையில் ரசிகர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பில் தனது அரசியல் வருகையை அவர் உறுதி செய்தார்.

"ரசிகர்கள் இந்த அளவுக்கு கட்டுப்பாட்டோடு இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த கட்டுப்பாடும், ஒழுக்கமும் இருந்தால் எதையும் சாதிக்கலாம். நான் அரசியலுக்கு வருவது உறுதி.

இது காலத்தின் கட்டாயம். வரப்போகிற சட்டமன்றத் தேர்தலில் தனிக்கட்சி ஆரம்பித்து தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளிலும் போட்டியிடுவோம். நான் பணம், பெயர் மற்றும் புகழுக்காக அரசியலுக்கு வரவில்லை. கனவில்கூட நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு ஆயிரம் மடங்கு அதை மக்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அரசியல் கெட்டுப்போய்விட்டது. ஜனநாயகம் சீட்கெட்டுப் போய்விட்டது. எல்லாவற்றையும் மாற்ற வேண்டும்" என ரஜினி மேலும் தெரிவித்தார். (ம)



# மோர்சிக்கு சிறை

கெய்ரோ. ஜன. 1

நீதித்துறையை அவமதித்தார் என்று தொடரப்பட்ட வழக்கில் எகிப்தின் முன்னாள் அதிபர் மோர்சிக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனையும் 20 லட்சம் பவுண்டுகள் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

எகிப்தில் ஜனநாயக முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட முதலாவது அதிபர் மோர்சி. முப்பதாண்டுகளுக்கும் மேலாக பதவியில் இருந்த முபாரக்கை கடந்த 2012ஆம் ஆண்டில் பதவியிலிருந்து இறக்கிவிட்டு அதிபர் பதவியைப் பிடித்த மோர்சியால் ஓராண்டுக்கு மேல் அந்தப் பதவியில் நீடிக்க முடியவில்லை. எகிப்தின் இராணுவத் தளபதியாக இருந்த அப்டெல் சிசி என்பவர் மோர்சியைப் பதவியிலிருந்து இறக்கி கைது செய்து சிறையிலும் அடைத்தார். அவர்மீது பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

கட்டார் நாட்டுக்காக உளவு பார்த்ததார் என்று தொடரப்பட்ட வழக்கில் 25 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், தன்னை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை கொல்லுமாறு கலவரத்தை தூண்டி விட்டமைக்காக தொடரப்பட்ட வழக்கில் 20 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நீதித்துறையை அவமதித்ததாக தொடரப்பட்ட வழக்கிலும் போர்சிக்கு மூன்றாண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம)



# அலெக்சிக்குத் தடை நேற்று உறுதியானது

மொஸ்கோ. ஜன. 1

ரஷ்ய அதிபர் தேர்தலில் எதிர்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி போட்டியிடுவதற்கு விதிக்கப்பட்ட தடையை அந்த நாட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உறுதிசெய்தது.

கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் விளாடிமிர் புடின். அவரது ஆறாண்டு பதவிக்காலம் எதிர்வரும் மே மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில் அடுத்த ஆண்டு மார்ச் 18ஆம் திகதி அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் புடின் போட்டியிடுவதை உறுதி செய்துள்ளார். அவருக்கு எதிர்கட்சித் தலைவரான நவால்னி கடும் சவால் வழங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் நவால்னி தொடர்புபட்டிருப்பதால் தேர்தலில் போட்டியிட அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையை எதிர்த்து ரஷ்ய உயர் நீதிமன்றத்தில் நவால்னி வழங்குத் தொடர்ந்தார். இந்த வழங்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. நவால்னியின் தடை உறுதிப்படுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. (ம)



இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்த அமெரிக்காவின் முடிவை எதிர்த்து கிழக்கு ஜெருசலேமில் பலஸ்தீனர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அது தொடர்பான இந்த ஒளிப்படம் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

# சூடானின் மாநிலங்களில் அவசர நிலை அறிவிப்பு

டர்பர். ஜன. 1

சூடானில் உள்ள கஸ்ஸாலா மற்றும் வடக்கு குர்டுபான் மாநிலங்களில் ஆறு மாதங்களுக்கு அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சூடான் நாட்டின் டர்பர் மாநிலத்தின் பெரும் பகுதி போராளிகளின் வசம் சிக்கியுள்ளது. அங்கு நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த ஐ.நா. சபையின் சார்பில் பன்னாட்டுப் படையினரும், அமைதிப் படையினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இருந்து அங்கு கடும் போர் நடைபெற்று வருகிறது. போர் இன்னும் தீவிரப்படுத்தப்படவுள்ளதை அடுத்து டர்பர் மாநிலத்தின் அருகில் உள்ள கஸ்ஸாலா மற்றும் வடக்கு குர்டுபான் மாநிலங்களில் அடுத்த ஆறு மாத காலத்துக்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# அமெரிக்காவுடன் நல்லுறவு; இது ரஷ்யாவின் விருப்பம்



மொஸ்கோ. ஜன. 1

அமெரிக்காவுடன்நல்லுறவைத்தொடர ரஷ்யாவிரும்புகிறதுஎன்றுரஷ்யாஅறிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியனில் இணைய விரும்பிய உக்ரைன் நாட்டின் ஒரு பகுதியை ரஷ்யா தனது இராணுவ பலத்தால் தனியாகப் பிரித்து கடந்த 2014ஆம் ஆண்டு கிரிமியா என்ற தனிநாட்டை உருவாக்கியது. இந்த விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே கருத்து முரண்பாடுகள் இருந்து வந்தன. சிரியா, ஈரான் ஆகியநாடுகளின் விவகாரத்திலும் ரஷ்யாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே அமெரிக்கா கொண்டுள்ளது. இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் அறிவிக்கப்பட்ட விவகாரத்திலும் அமெரிக்காவுக்கு ரஷ்யா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்த நிலையில் அமெரிக்காவுடன் எதிர்காலத்தில் நல்லுறவைப்பேணுவதற்குரஷ்யாவிரும்புவதாக ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்து புடின் அனுப்பியுள்ள கடிதத்தில், 'சம மரியாதை மற்றும் பரஸ்பர நன்மதிப்புடன் கூடியநீண்டகாலநடைமுறைச்சாத்தியமான நல்லுறவை அமெரிக்காவுடன் தொடர ரஷ்யா விரும்புகிறது. உலகை அச்சுறுத்தும்சவால்களைஎதிர்கொள்ளவும், நிரந்தரத்தன்மை உருவாகவும் அமெரிக்கா - ரஷ்யாவுக்கு இடையிலான ஆக்கப்பூர்வமான பேச்சுக்கள் முக்கியமானதாகும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# பிறந்திருக்கும் ஆண்டில் தீர்வுக்காக உழைப்போம்

புதிதாகமீண்டும்ஒருஆண்டுபிறந்துள்ளது.மகிழ்ச்சியோடும் எதிர்பார்ப்போடும் இந்த ஆண்டை வரவேற்றுக்கொண்டாடுவோம்.கடந்துபோனஆண்டுகளைப் போலல்லாமல் இந்த ஆண்டு எல்லோருடைய எதிர்பார்ப்புகளையும் நிவர்த்தி செய்வதாக, எல்லோருக்கும் சுபீட்சத்தைக் கொடுப்பதாக அமையவேண்டும் என்று பிரார்த்திப்போம்.

ஒவ்வொரு ஆண்டும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மிகுந்த எதிர்பார்ப்போடுதான் புதிய வருடங்களைஎதிர்கொள்கிறார்கள்.அரசியல், பொருளாதார, சமூக முன்னேற்றம் ஏற்பட்டுவிடாதா என்கிற ஏக்கத்தோடுதான் புத்தாண்டை வரவேற்கிறார்கள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்கிற அவர்களின் நம்பிக்கை இதற்கொரு முக்கிய காரணம்.

இந்த ஆண்டும் அத்தகைய எதிர்பார்ப்போடுதான் புத்தாண்டைவரவேற்கிறார்கள்.அரசியல்தீர்வுஒன்று இந்தஆண்டுகிடைத்துவிடவேண்டும்என்பதுஅவர்களின்வேணவா.அதிலும்தாம்திருப்திப்படும்விதத்திலான தீர்வாக அது அமைந்துவிடவேண்டும் என்ற பேராசையும் அவர்களுக்கு இல்லாமல் இல்லை.

புதிய அரசான மைத்திரி –ரணில் கூட்டு அரசு பதவியேற்ற 2015ஆம் ஆண்டில் இந்த எதிர்பார்ப்பு உச்சமடைந்திருந்தது.வரலாற்றில்இல்லாதவாய்ப்புஇது என்று எல்லோரும் புகழ்ந்துரைத்தனர். தமிழ் பேசும் ம க்களும் பெரும் எதிர்பார்ப்போடு இருந்தனர். 2016, 2017 என்று அடுத்தடுத்த வருடங்களில்தீர்வு வந்துவிடும்என்றுஒவ்வொருபுத்தாண்டையும்அதே எதிர்பார்ப்போடுஎதிர்கொண்டனர். ஆனால்போகப் போகஅந்தஎதிர்பார்ப்புகள்காற்றில்கரையத்தொடங்கிவிட்டனஎன்பதையும்ஏற்றுத்தான்ஆகவேண்டும்.

இதோ, 2018ஆம்ஆண்டுவந்துவிட்டது.இந்தஆண்டிலாவது தீர்வு வந்துவிடாதா, விடிவு கிட்டிவிடாதா என்கிற எதிர்பார்ப்புடன் மீண்டும் ஒரு புத்தாண்டை வரவேற்கின்றனர் மக்கள்.

எதிர்பார்ப்புகள், தேவைகள் அதிகரித்துச் செல்லும் உலகில்நாம்மட்டும்ஒரேபுள்ளியில்நின்றுகொண்டிருக்கின்றோமேஎன்கிறஅச்சம்ஏற்படுகின்றது.இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டுவிட்டால் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிடலாம் என்கிற நம்பிக்கையில் தீர்வுக்காக மீண்டும் மீண்டும் மக்கள் காத்திருக்கிறார்கள் என்பதை அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

பிறந்திருக்கும் புத்தாண்டிலாவது இந்த விடயம் அரசியல்வாதிகளுக்கு உறைத்து அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் விதத்தில் அவர்கள் நடந்துகொள்ளக் காலம் கனிய வேண்டும் என்று மன்றாடுவோம்.

உள்நாட்டுப்போர்முடிவடைந்து 8 வருடங்களுக்கும் மேலானகாலம்கடந்துவிட்டநிலையிலும்தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சிகள் தேங்கிக்கிடப்பது அரசியல்வாதிகளின்மனச்சாட்சிகளைஉறுத்தட்டும் என்றும் வேண்டிக்கொள்வோம்.

தேர்தல்களில் வென்று தாம் மட்டும் பதவி, பவுசு என்று வளர்ந்து செல்வதோடு மட்டும்நின்றுவிடாது ஒவ்வொருகுடிமகனுக்கும்வளர்ச்சிகிட்டட்டும்என்கிற விடயம் அரசியல்வாதிகளின் புத்தியில் உறைக்கட்டும் என்று இறைஞ்சுவோம்.

இந்த ஆண்டை அத்தகையதோர் ஆண்டாக மாற்றியமைப்போம் என்பதுடன் அதற்காக அரசியல்வாதிகளையும்.நிர்ப்பந்திப்போம் என்று இன்றைய நாளில் நாம் ஒவ்வொருவரும் உறுதிபூணுவோம். உறுதியெடுப்போம். தீர்வுக்காக ஒவ்வொருவரும் உழைப்போம் என்று திடசங்கற்பம் கொள்வோம்.

## ராஜ தந்திர அணுகுமுறை

# தோல்விக்கு முகம் கொடுக்க நேர்ந்த அவலம்

சிங்கள மூலம்: திசரணி குணசேகர
தமிழில்: வீ.எஸ்.ரி.

> ‘அஸ்பெஸ்டஸ் உற்பத்தியை ‘றொட்டர்டாம்’ தீர்மானத்துக்குள் உட்புகுத்தி தடை செய்யும் முயற்சி இந்த முறையும் தோல்வியில் முடிவடைந்தது. ‘அஸ்பெஸ்டஸ்’ உற்பத்தியில் ஈடுபடும் நாடுகளில் ஆறு நாடுகள் மேற்குறிப்பிட்ட முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. ரஷ்யா, கசகஸ்தான், இந்தியா, சிம்பாப்வே, கிஸ்கிஸ்தான் மற்றும் பெலாரஸ் ஆகியவையே அந்த ஆறு நாடுகளுமாகும்.

அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள் உற்பத்தி தொடர்பான நோய்களால் உலகளாவிய ரீதியில் வருடாந்தம் உயிரிழக்கும் தொழிலாளர்களது எண்ணிக்கை ஒரு இலட்சத்து 7 ஆயிரம் வரையிலாகும் என பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO) தெரிவித்துள்ளது. அது மட்டுமன்றி ‘அஸ்பெஸ்டஸ்’ பாவனை காரணமாக வருடமொன்றுக்கு மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் புற்று நோய்ப்பாதிப்பாலும் மற்றும் பல்வேறு நோய்களாலும் உயிரிழக்க நேர்வதாக உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவித்துள்ளது. இதனாலேயே சகல வகைகளிலுமான அஸ்பெஸ்டஸ் தயாரிப்பு, ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் பயன்படுத்துதல் என்பவற்றைத் தடைசெய்ய வேண்டுமென இவ்விரு அமைப்புக்களும் கடந்த பல ஆண்டுகாலமாக வலியுறுத்தி வருகின்றன.


புகையிலைப்பாவனை மனித உடலுக்குத் தீங்கு விளைவிப்பதாக பலர் பல்லாண்டுகள் காலமாக நம்பி வந்துள்ளனர். ஆயினும் அது உடல் நலத்துக்கு எந்த அளவுக்கப் பாதிப்பை ஏற்படுத்துகிறதுஎன்பதுதொடர்பாகவிஞ்ஞானஆய்வுகளுடாக நிரூபிக்கப்பட்டதை யடுத்து, புகைத்தலுக்கு எதிரான கருத்து, குறிப்பாக அபிவிருத்தி அடைந்த பல நாடுகள் மத்தியில் உருவாகியது. அத்தகைய நாடுகள் புகைத்தலுக்கு எதிரான பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதையடுத்து, புகைப் பொருள்களைஉற்பத்திசெய்யும்நிறுவனங்கள் இலங்கையைப் போன்ற மூன்றாம் உலக நாடுகள் மத்தியில் புகைத்தல் பொருள்கள் தொடர்பான தமது வர்த்தகச் சந்தைகளை உருவாக்கும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட்டன.

### அஸ்பெஸ்டஸ் மனித பாவனைக்கு கேடு விளைவிக்குமென பன்னாட்டு பொது நிறுவனங்கள் உறுதிப்படுத்தின

‘அஸ்பெஸ்டஸ்’ கூரைத் தகடுகள் உற்பத்தி தொடர்பான விடயமும் இதனை ஒத்ததென்றே. அது மனித ஆரோக்கியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக உலக சுகாதார நிறுவனம் முதன் முதலில் 1987 ஆம் ஆண்டில் தான் உலகுக்கு தெரியப்படுத்தியிருந்தது. ‘அஸ்பெஸ்டஸ்’ உற்பத்திகள் புற்றுநோய்க்குக் காரணமாக அமைவதாக புற்றுநோய் ஆராய்ச்சி தொடர்பான பன்னாட்டு நிறுவனம் (I.A.R.C) தனது ஆராய்ச்சிமூலம் கண்டறிந்தது.

மனித உடலுக்குத் தீங்கு பயக்கும் இரசாயனப் பொருள்கள் மற்றும் விஷத்தன்மைகொண்ட பொருள்களது பயன்பாட்டைத் தடை செய்யும் முதலாவது நடவடிக்கையெனக் கொள்ளப்படும்’ றொட்டர்டாம் தீர்மானத்தில் அஸ்பெஸ்டஸ் தயாரிப்பையும் உள்ளடக்கும் முயற்சி இற்றைக்குப் பல ஆண்டுகள் காலத்துக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டதொன்று. அது மனித ஆரோக்கியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றென இவ்வாண்டு மே மாதத்தில் ஜெனிவாவில் இடம்பெற்ற மாநாடொன்றில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. வெள்ளை நிற அஸ்பெஸ்டஸ் எனக் குறிப்பிடப்படும் கிறிசோட்டைல் (Chrysotile) என்றவர்க்க அஸ்பெஸ்டஸ், மனித ஆரோக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என அஸ்பெஸ்டஸ் உற்பத்தியில் ஈடுபடும்நாடுகள்மற்றும்நிறுவனங்கள் முன்வைத்த கருத்தை உலக சுகாதார நிறுவனம் நிராகரித்திருந்தது.

ஆயினும்‘அஸ்பெஸ்டஸ்உற்பத்தியை ‘றொட்டர்டாம்’ தீர்மானத்துக்குள் உட்புகுத்திதடைசெய்யும்முயற்சிஇந்தமுறையும் தோல்வியில் முடிவடைந்தது. ‘அஸ்பெஸ்டஸ்’ உற்பத்தியில் ஈடுபடும் நாடுகளில் ஆறு நாடுகள் மேற்குறிப்பிட்ட முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. ரஷ்யா, கசகஸ்தான், இந்தியா, சிம்பாப்வே, கிஸ்கிஸ்தான் மற்றும் பெலாரஸ் ஆகியவையே அந்த ஆறு நாடுகளுமாகும். அஸ்பெஸ்டஸ் உற்பத்திகள் தடை செய்யப்பட வேண்டுமென பல ஆபிரிக்க நாடுகள் முன்வைத்த பிரேரணையை 2019 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள அடுத்த மாநாட்டிலேயே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. றொட்டர்டாம் தீர்மானத்தில் அஸ்பெஸ்டஸ் உற்பத்தியையும் உள்ளடக்கும் முயற்சி வெற்றி பெற்றிருந்ததால், அது இலங்கையிலும் அஸ்பெஸ்டஸ் உற்



பத்திகளுக்குத்தடைவிதிக்கும்திட்டத்துக்கு உதவியாக அமைந்திருக்கும். அந்த வகையில் அந்த முயற்சிக்கு இடையூறு ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியது உலகலாவிய ரீதியில் அஸ்பெஸ்டஸ் உற்பத்தியில் முன்னணி வகித்த ரஷ்ய நாடேயாகும்.

**வாலற்ற மாடு போன்றதான நிலை**

தற்போது உலக நாடுகளில், 55 நாடுகள் அஸ்பெஸ்டஸ் உற்பத்தி, ஏற்றுமதி இறக்குமதி, மற்றும் பாவனை ஆகிய செயற்பாடுகளை முற்றுமுழுதாகத் தடை செய்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், மற்றும் ஆஸ்திரேலியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் போன்று, மூன்றாம் உலக நாடுகள் பலவும் இதில் அடங்குகின்றன. 2018 ஆம் ஆண்டில் அஸ்பெஸ்டஸ் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் கனடா மற்றும் அதன் இறக்குமதி மற்றும் பாவனையில் கணிசமான பங்களிப்பு வழங்கும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் அஸ்பெஸ்டஸ் பாவனையை தடைசெய்யத் தீர்மானித்திருந்தன. அந்த வகையில் கனடா தனது தீர்மானத்தை திட்டமிட்டபடி நடைமுறைப் படுத்தக்கூடும். ஆனால் இலங்கை அத்தகைய தனது முடிவைக் கை

**சுற்றுச்சூழல் பாதிப்பை பேணுவதாக உறுதியளித்தே கூட்டு அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியது**

சுற்றுச்சூழல் பாதிப்பால் நாட்டு மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது பாதுகாப்பதாக உறுதி வழங்கியே இன்றைய கூட்டு அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது. ஆயினும் சுற்றுச்சூழல் பாதிப்பால் பல்வேறு பேரழிவுச் சம்பவங்கள் இடம்பெற்ற பின்னரே அரசு விழித்துக் கொண்டு ஒப்புக்குச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்கு மீதோட்டமுல்ல குப்பை மேட்டுச்சரிவு, காட்டுயானைகளைத் தந்தத்துக்காகக் கொன்றமை போன்றவை உதாரணங்களாகின்றன.


மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் சிலவற்றுக்கான இறக்குமதிக்கு இன்றைய அரசு தடைவிதித்ததென்னமோ உண்மைதான். ஆனால் அஸ்பெஸ்டஸ் இறக்குமதி விடயத்தில் அரசால் அதனைத் தடைசெய்ய இயலாத அளவுக்கு அது அழுத்தங்களுக்கு அடிபணிய நேர்ந்துவிட்டுள்ளது.

தமது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்குசாதகமாகவகையில்தமது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கைகளைத் தீர்மானிப்பது இன்று சகல நாடுகளதும் வழக்கமாக ஆகியுள்

**ரஷ்ய நாட்டு ஆட்சிமுறை முதலாளித்துவ நடைமுறைக்கு மிக நெருக்கமான விதத்திலான தொன்று**

ரஷ்யா நாட்டில் முதலாளித்துவத்துக்கு நெருக்கமான விதத்திலான ஆட்சி முறையே நடைமுறையில் இருந்து வருகிறது அந்நாட்டு அதிபர் மற்றும் அவரது உதவியாளர்களது விருப்பத்துக்கு ஏற்றவாறான முடிவுகளே அங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அஸ்பெஸ்டஸ் இறக்குமதி மீதான தடை குறித்து இன்றைய கூட்டு அரசு தீர்மானம் மேற்கொண்டவேளை, ரஷ்யாவில் நிலவும் நிர்வாக நடைமுறை குறித்த யதார்த்தத்தைக் கருத்தில் எடுத்துச் செயற்பட்டிருந்தால் இத்தகைய சிக்கலுக்கு முகம் கொடுக்க நேர்ந்திருக்காது.

அஸ்பெஸ்டஸ் இறக்குமதிக்கான தடையை மேற்கொண்டதன் பின்னர் அதன் பாவனையால் ஏற்படத்தக்க பாதிப்புக்கள் தொடர்பாகவோ, வெள்ளைஅஸ்பெஸ்டஸ்ரகம்மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்காது என்ற கருத்தை விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கும் விதத்தில் நாட்டு மக்களுக்கு உறுதிப்படுத்தவோ, அல்லது அதற்கு மாற்றீடான உற்பத்தி குறித்து யோசனை எதனையும் முன்வைக்கவோ இன்றைய கூட்டு



விட்டுள்ளது. உலகின் முன்னணி அஸ்பெஸ்டஸ் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யும் நாடொன்றான ரஷ்யாவினால் மேற்கொள்ளப்பட்ட கடும் அழுத்தமே இலங்கையின் அந்தத் தீர்மானத்துக்கு முக்கிய காரணமாகும்.

அந்த வகையில் இலங்கையில் இருந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைக்குள் ஒரு வித வண்டு இனம் காணப்பட்டது என்ற குற்றச்சாட்டின் அடிப்படை நோக்கம் என்ன என்பது தற்போது பரகசியமாகி உள்ளது. தான் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யும் தேயிலை மீது மட்டுமென்றல்லாது, வேறு சில பொருள்கள் மீதும் ரஷ்யா இறக்குமதித்தடை விதித்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதே வேளை இது குறித்துக் கருத்து வெளியிட்டிருந்த அமைச்சர் நவீன் திசநாயகவே, வெள்ளை நிற அஸ்பெஸ்டஸ் தகடுகள் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கா எனத் தெரிவித்ததும், இந்தப் பிரச்சினையில் அரசு எத்தகைய தீர்வை எட்டும் என்பதை அனுமானிக்க வழி செய்தது. இதன் மூலம் குறித்த வெள்ளை நிற அஸ்பெஸ்டஸ் வகைக்கான இறக்குமதிக்கு அனுமதி வழங்க இலங்கை அரசு தீர்மானித்தமை உறுதியாகியது. அந்த வகையில் ரஷ்யாவுக்கு தேவைப்பட்ட விதத்தில், ரஷ்யப் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், ரஷ்யாவின் அழுத்தத்துக்குப் பணிந்து செயற்படும் வகையில் இலங்கை அரசு அஸ்பெஸ்டஸ் இறக்குமதிக்கான தனது தடை உத்தரவை நீக்கிக்கொண்டது.

வெள்ளை நிற அஸ்பெஸ்டஸ் 'மெசொபோலியோமிஸ்' வகை புற்றுநோய் பிரச்சினையை ஏற்படுத்தும்வரை, அதன் தாக்கத்தால் உயிரிழப்புக்கள் ஏற்படும் வரை வெள்ளை அஸ்பெஸ்டஸ் பாதிப்பை ஏற்படுத்தாது என்ற நிலைப்பாட்டை அரசு முன்னெடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ளது. அவை அவ்விதம் செயற்பட்டுத்தானாக வேண்டும். ஆனால் ஜனநாயக ரீதியிலாக நிர்வாக நடைமுறை நிலவும் வளர்ச்சியடைந்த நாடுகளது அரச தலைவர்கள் தாம் நினைத்தவாறு தமது நாட்டு வெளியுறவுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பல்வேறு அரசியல் மற்றும் சட்ட ரீதியான முட்டுக்கட்டைகள் உள்ளன. உலகின் சக்தி வாய்ந்த வல்லரசான அமெரிக்காவின் அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேல் நாட்டின் தலைநகராக ஜெருசலேமை ஏற்றுக்கொள்வதென, அண்மையில் மேற்கொண்ட தீர்மானம் பன்னாட்டு மக்களின் எதிர்ப்புக்கு உள்ளானதோடு ஐ.நா. சபையின் கண்டனத் தீர்மானங்களுக்கும் உள்ளாக நேர்ந்தமை மேற்குறிப்பிட்ட கருத்தை உறுதிப்படுத்தப் போதுமான உதாரணமொன்றாகும். அமெரிக்க அதிபரது குறிப்பிட்ட அந்த முடிவைக் கண்டித்து ஐ.நா. பொதுச்சபை அண்மையில் பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானம் நிறை வேற்றியமை சகலரும் அறிந்ததொன்றே. குறித்த அந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டாம் என அமெரிக்கா, ஏனைய உலக நாடுகளுக்கு பகிரங்கமாக அச்சுறுத்தல் விடுத்திருந்தது. தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கும் நாடுகளுக்கான அமெரிக்க அரசின் உதவிகள் முற்றாக நிறுத்தப்படுமென அமெரிக்க அரச அதிபர் எச்சரிக்கை விடுத்திருந்தார். ஆயினும் இலங்கை உட்பட உலக நாடுகளில் பெரும்பாலானவை ஐ.நா. பொதுச்சபையின் அமெரிக்காவின் முடிவுக்கு எதிரான கண்டனத் தீர்மானத்துக்கு ஆதரவாகவே வாக்களித்தன. அமெரிக்க அதிபரது தன்னிச்சைப் போக்கான தீர்மானத்தக்கு ஆதரவளிக்காமை காரணமாக தன்னிச்சைப் போக்கான தீர்மானத்துக்கு ஜனநாயக நடைமுறையில் இடமில்லை என்பது, உலக நாடுகள் அமெரிக்க அதிபரது மிரட்டலுக்கு மசியாது தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கியமை மூலம் உறுதியாகிறது

அரசு எது வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அத்தோடு குறித்த தனது தடை காரணமாக ரஷ்ய அரசால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது குறித்த முன்னேற்பாட்டுத் திட்டமெதுவும் இலங்கை அரசிடம் இருந்திருக்கவில்லை. இதனாலேயே தான் மேற்கொண்ட சரியான முடிவிலிருந்து பின்வாங்கி, தான் மேற்கொண்ட இறக்குமதிக்கான தடை உத்தரவை மீளப்பெற்றுக் கொள்ளும் பரிதாபகரமான நிலை இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருந்தது.

குறித்த பிரச்சினையில் ரஷ்யாவுக்குச் சாதக பயன்கள் கிட்டும் வகையிலான முடிவை இலங்கை அரசு மேற்கொண்டிருக்கத் தேவையில்லை. ஆனால் ரஷ்யா இலங்கைத்தேயிலையைக் கொள்வனவு செய்வதை நிறுத்திக் கொண்டால் அதனால் இலங்கையின் தேயிலை உற்பத்தித்துறைக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் பலத்த பாதிப்பு ஏற்படும் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால் அஸ்பெஸ்டஸ் இறக்குமதிக்குத் தடை விதிக்காமலேயே அதன் பாவனையை நாட்டில் இயன்ற வரை குறைப்பதற்கும் அதனூடாக இறக்குமதி செயற்பாடுகளை நலிவுபடுத்தவும் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றைக் கையாண்டு படிமுறையில் அஸ்பெஸ்டஸ் பாவனையை நாட்டில் குறைவடையச் செய்வதற்கான வழிமுறைகளை திட்டமிட்டு முன்னெடுக்க அருசுக்கு வாய்ப்பிருந்தும், அது குறித்து அரசு கவனம் செலுத்தாமையே, இன்று இந்த விடயத்தில் இலங்கை அரசு, ராஜதந்திர அணுகுமுறைத்தோல்விக்கு முகம் கொடுக்கக் காரணமாக ஆகி விட்டுள்ளது.

■

## ஆசிரியருக்கான கடிதம்

### தட்டாதெரு சந்தியில் ஒரு குட்டிக் குளம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சனநெரிசல் மிகுந்த இடங்களில் அல்லது போக்குவரத்துப் பயன்பாடு அதிகம் உள்ள இடங்களில் தட்டாதெருச் சந்தியும் ஒன்றாகும். சிறு மழைபெய்தாலும் தண்ணீர் தேங்கி போக்குவரத்துக்குக்கு முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக குறித்த பகுதி தற்போது அமைந்து காணப்படுகிறது.

தட்டாதெருச் சந்தியில் இருந்து மானிப்பாய் வீதி ஆரம்பமாகும் இடத்தில் ஏகப்பட்ட குன்றும் குழியும் காணப்படுகின்றன. தினமும் நூற்றுக் கணக்கானவர்களால் இந்த வீதி பயன்படுத்தப்படுகிறது. எனினும் இன்று வரை எந்தப் புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளவில்லை. வெள்ளத்தால் வீதியின் குழிகள் மூடப்பட்டிருக்கும் நிலையில், துவிச்சக்கர வண்டியில் செல்வோர் அவ்விடத்தில் குழி உள்ளதென்று தெரியாது அதில் அகப்பட்டு விழுந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பின்னர் இதுபோன்ற சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக குழிகள் இருந்த இடத்தில் லொறி ரயர்களை வைத்து சில நலன்விரும்பிகள் அடையாளப்படுத்தியிருந்தனர். மழை வெள்ளம் தற்போது வற்றி வீதியும் ஓரளவு காய்ந்து புனரமைப்புச் செய்யக்கூடிய ஏதுநிலை தற்போது உள்ளது. மீண்டும் மழைபெய்து பயணிகள் ஏகப்பட்ட அசௌகரியங்களை எதிர்கொள்ள முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே குறித்த வீதியைப் பயன்படுத்துபவர்களினதும் எனதும் எதிர்பார்ப்பு.

இப்படிக்கு
விழுந்தெழும்பியவன்

# மூலதனச்சந்தை

## அனுபவத்துடன் கூடிய அறிவார்ந்த முதலீட்டுச் செயற்பாடுகளை அறிவுறுத்தும் கருவி



மு.திலீபன்

நாம் அனைவருமே முதலீடு சார்ந்து ஆர்வமுடையவர்களாக இருக்கிறோம். அதுவிதமே வாழ்வாதாரத்தை சமனிலைப்படுத்தவும் இயந்திரத் தனமாக இயக்கமுறுகிறோம். இது பொதுமைப்பாடுடைய உண்மையாக விளங்குகிறது.

**முதலீடு**
இந்தநிலையிலே சில முதலீட்டுச் செயற்பாடுகளால் நாம் கவரப்படுவதுடன் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். அல்லதுபோனால் முதலீடு செய்வது குறித்த தீர்மானங்களைக் கொண்டிருக்கிறோம். இங்கு, எமக்குப் பரீட்சயமற்ற முதலீடுகளில் மூலதனம் குறித்து உத்தேசிக்கின்ற போது, அது குறித்து தகுதியானவர்களுடன் கலந்தாலோசனை மேற்கொண்டு அவற்றின் சாதக மற்றும் பாதக நிலமைகள் குறித்து தீர்மானம் மேற்கொள்ளுதல் ஆரோக்கியமான செயல்நிலையாக அமைந்திருக்கும். மாறாக முன்அனு பவமுடைய அல்லது பாரம்பரிய தொழில் முயற்சியைப் பொறுத்தவரையில் எனக்கு நிகர் நானே என்ற தன்னம்பிக்கையின் மன உறுதியோடு முதலீட்டுச் செயற்பாடுகளை ஆரம்பிக்கலாம்.

**வெற்றியை மதிப்பீடுசெய்யும் முதன்மைக் காரணி**
ஒரு முயற்சியின் வெற்றியை மதிப்பீடுசெய்யும் முதன்மைக் காரணியாக வருமானம் விளங்குகிறது. முதலீடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தைப் பொதுவாக நாம் எதிர்வுகூறமுடிந்தாலும் அதனை முன்னராக உறுதிப்படுத்திக் கொள்வது கடினம். அதாவது முதலீடு என்பது பணத்தினை, வருமானத்தினை தோற்றிவிக்கக் கூடிய சொத்தாக அல்லது முயற்சியாக மாற்றுவதனைக் குறித்து நிற்கிறது.

**சேமிப்பும் வாழ்வாதாரமும்**
முதலீட்டுக்கான பிறப்பிடமாக சேமிப்பு அமைகின்றது. சேமிப்பு பொதுவாக, "பணத்தினை வங்கிசார் நிதி நிறுவனங்களில் பணச் சந்தைக் கருவிகளில் பேணும்" தன்மையை குறிக்கின்றது. செலவிடத்தக்க வருமானத்திலிருந்து நாளாந்த நுகர்வுக்குச் செலவுசெய்தவை போக எஞ்சிய வருமானத்தைச் சேமிப்பாக கொள்ளலாம். தவிர, நிகழ்கால நுகர்வினை தியாகம் செய்வதன் மூலமாக அல்லது காலம்தாழ்த்திச் செலவு செய்வதன் ஊடாக சேமிப்பினை நாம் பெருக்கிக் கொள்ள முடியும்.
இன்றைய காலகட்டத்தில் செலவுக்குப் பின்பான வருமானம் என்பது ஓர் வகையில் இடர் தரும் சோதனை ஸ்தானமாக அமைந்துள்ள தன்மையை நாம் ஒவ்வொருவரும் அனுபவப் பாடமாக கொண்டுள்ளோம். இத்தகைய சேமிப்புக்கள் இன்றி எமது வாழ்க்கைத்தரத்தினை உயர்வாகப் பேணிப்பாதுகாப்பது என்பது சாத்தியமான விடயமல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஆக, இன்று தொடக்கம் வருமானத்தில் சிறு பகுதியை சேமிப்பாக்கிய பின்பு எஞ்சியுள்ள வருமானத்தைச் செலவு செய்யும் நடைமுறையைப் பின்பற்றுவோம்.




**நிதிச்சுதந்திரம்**
பல முதலீட்டுத் தெரிவுகள் சரியான முறையில் பலம் வாய்ந்ததாக அமையினும் அவை உங்களுக்கு பூரண நிதிச்சுதந்திரத்தைப் பெற்றுத் தருகின்றதா என்பது பற்றிச்சிந்தித்து செயலாற்றுதல் நன்று. திட்டமிட்டுச் செலவினங்களைக் குறைத்து அல்லது காலம் தாழ்த்திப் பணத்தைச் சேமிக்க முடியும். அதிலிருந்து சிறுதொகையினை கிரமமாக முதலீடு செய்யப் பழகிக் கொள்வதன் ஊடே, நாம் ஒவ்வொருவரும் நிச்சயமாக நிதிச்சுதந்திரத்தினை அடைந்துகொள்ளலாம்.
உண்மையில் இங்கு நிதிச்சுதந்திரம் என்பது எம்மிடமுள்ள சேமிப்புத் திரட்டினைக் கருதவில்லை என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒருவர் தனது வாழ்நாள் சம்பாத்தியமாக 50 இலட்சம் பெறுமதியான வங்கிசேமிப்பினையோ அல்லது அதற்கு நிகரான பெறுமதியுடைய தங்க ஆபரணத்தினையோ கொண்டிருத்தல் நிதிச்சுதந்திரமாக அமைந்துவிடுமா என்ற கேள்வி நிலை எழின், அதற்குரிய பதில் இல்லை என்றே அமையும்.

> “ பல முதலீட்டுத் தெரிவுகள் சரியான முறையில் பலம் வாய்ந்ததாக அமையினும் அவை உங்களுக்கு பூரண நிதிச்சுதந்திரத்தைப் பெற்றுத் தருகின்றதா என்பது பற்றிச்சிந்தித்து செயலாற்றுதல் நன்று. திட்டமிட்டுச் செலவினங்களைக் குறைத்து அல்லது காலம் தாழ்த்திப் பணத்தைச் சேமிக்க முடியும்.

**வரையறை**
உண்மையில் நிதிச்சுதந்திரம், "முயற்சியின்றி உங்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்வாகப் பேணக்கூடிய வகையில் நாளாந்த தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யக் கூடிய நிலையானதும், நிலைத்திருக்கக் கூடியதுமான வருமானத்தினை வழங்கக் கூடிய முதலீட்டுத் தேக்கத்தினை (Portfolio investment) கொண்டிருத்தல்" என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது. தெளிவாக குறிப்பிடுவதானால், நாம் பணத்துக்காக வேலை செய்வதனைப் படிப்படியாகக் குறைத்து பணத்தை எமக்காக வேலை செய்யக்கூடிய வகையில் முதலீட்டு மூலமாகக் கொண்டு எமது முதலீட்டுத் தேக்கத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும். இது காத்திரமான முதலீட்டுத் திரும்பல்களை உச்சப்படுத்துவதுடன், இடர்நேர்வுகளை இழிவுபடுத்தி முதலீடுகளைப் பன்முகப்படுத்த உதவும்.
நிதிச் சுதந்திரத்தினை அடைந்து கொள்ளும் வகையில் எமது முதலீட்டுத் திட்டமி டல்கள் முறைமைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு பின்வருவனவற்றை நாம் குறிப்பிடலாம்.

**இயற்கையினால் வரையறுக்கப்பட்ட எமது உடல் மற்றும் உளரீதியான இயலுமை**
இங்கு பணம் உழைக்க வேண்டும் என்ற விருப்பம் அல்லது தேவைகள் இருந்தும் எம்மால் ஓர் எல்லைக்கு அப்பால் தொடர்ச்சியாக முயற்சி செய்ய இயலாமை தாக்கம் செலுத்துகிறது.

**எதிர்கால நிச்சயமற்ற தன்மைகள்**
பல்வேறுபட்டதான நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில் எமது வாழ்க்கைப் பயணத்தினைத் தொடர்கின்றோம். ஆனாலும் நாம் எதிர்பார்ப்பது போன்று எல்லாம் அமைந்து விடுவதில்லை. இவ்வாறான நிலமைகளைச் சமாளிக்க அல்லது எதிர்கொள்ள நாம் எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**தங்கிவாழ்வோர் நலன்**
எம்மைச் சார்ந்துள்ளவர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எம்மில் பலருக்கும் உண்டு. அக்கடமைகளை திருப்திகரமாக நிறைவு செய்வதற்கு அர்ப்பணிப்புக்கள் அவசியம்.

**நிரந்தரமான மற்றும் சமாதானமான ஓய்வு**
ஓய்வூதிய காலத்தில் வாழ்க்கையினை வசதியாகவும், கௌரவமாகவும் வாழவேண்டும் என்ற தன்னம்பிக்கை போன்ற சிலவற்றை இங்கு குறிப்பிட முடியும். இவற்றினை திருப்திகரமாக அடைந்துகொள்ள நிதிச்சுதந்திரம் எமக்கு வேண்டும். எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்வது எப்படி என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். நடுத்தர வயதில், குறிப்பாக 25 தொடக்கம் 50 வயது வரையான காலப்பகுதியை வாழ்க்கையில் மிக உயர்ந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் பொற்காலம் என்று குறிப்பிடலாம். இக்காலத்தில் உடல் ரீதியான மற்றும், உள ரீதியான ஆற்றல்களைப் பயன்படுத்தி செயற்படு வருமானமாக (Active income) அதாவது, கூலி அல்லது ஊதியம் அல்லது இலாபத்தினை பெறுகிறோம்.

**செயற்படு மற்றும் செயலற்ற வருமானம்**
இந்த வருமானம் உடல் இயக்கத்துடன் இணைந்து உருவாக்கப்படுகிறது. இதனை உணர்ந்துகொண்டுள்ளோம். ஆக, எமது இயக்கமின்றி இவ்வகையான செயற்படு வருமானங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. நாம் உழைக்கக் கூடிய அதாவது செயற்படு வருமானமான கூலி அல்லது இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் காலத்தில் செயலற்ற வருமானத்திற்கான (Passive income) விதையினை விதைக்க வேண்டும். எமது முயற்சியின்றி முதலீட்டின் மூலமாக வருமானம் பிறப்பிக்கப்படுவதனால் அதனை நாம் செயலற்ற வருமானம் என்கிறோம்.
உதாரணமாக, கட்டடத் தொகுதி ஒன்றினை வாடகைக்கு விடுவதன் ஊடாகக் கிடைக்கும் வாடகைப்பணம் அல்லது பங்குச்சந்தையில் கம்பனியின் பங்குகளை முதலீடுசெய்து கிடைக்கும் பங்குலாபம் போன்ற வருமானங்களை உங்கள் செயற்பாட்டு வருமானத்துக்கு மேலதிகமான ஓர் செயலற்ற வருமானமாக கருதலாம்.

**சிறந்த தனியாள் திட்டமிடல் வேண்டும்**
எமது பிரதேசத்தில் அதிகளவான மக்கள் அரசதுறைசார்ந்த நிறுவனங்களில் வேலைசெய்ய விரும்புவதனை நாம் அறிவோம். அதற்குப் பலகாரணங்கள் இருப்பினும் ஓய்வூதியமே முக்கிய பங்கினை கொண்டுள்ளது. அவ்வாறான ஓர் ஓய்வூதியரின் நிதிச் சுதந்திரம் என்பது ஓய்வூதிய கால நிதியத்தினை (Retirement Fund) தமது நாளாந்த தேவைகளுக்காக செலவு செய்து தொடர்ச்சியான வருமானத்தைத் தரக்கூடியதும், வளரக்கூடியதுமான சிறந்த பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தேக்கங்களினைத் தெரிவுசெய்து முதலீடு செய்வதை சார்ந்துள்ளது. இதனூடே ஓர் சிறந்த ஓய்வூதியகால முதலீட்டுத் தேக்கத்தினை (Retirement Portfolio) பேணமுடியும்.
எமது இளமைக்காலம் தொடக்கம் வருமானத்தினைத் திட்டமிட்டு, செலவுகளை முன்னுரிமையடிப்படையில் வகைப்படுத்தி, வருமானத்தினை மிச்சப்படுத்தக்கூடிய சிறந்த தனியாள் நிதித்திட்டமிடல்களை (Perosoanl Financial Planning) ஒவ்வொருவரும் தமக்கென பிரத்தியேகமாக தயாரித்துக் கொள்ளல் நன்று.

# தாமோதரம்பிள்ளை

## தமிழ் தாய் பெற்றெடுத்த தவக்குழந்தை

■ புத்தூர் விஸ்வம்

1965 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக்கல்லூரியில்க.பொ.த.உயர் தர வகுப்பில் கல்வி பயின்ற காலத்தில் தமிழ்மொழியை ஒரு பாடமாகப் படித்தேன். ஆவரங்கால் பண்டிதர் ச. சுப்பிரமணியம், அச்சுவேலி சைவப்புலவர் வி.சண்முகம் ஆகியோர் தமிழ் கற்பித்தனர். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை எழுதிய 'இலக்கிய வழி' என்ற நூலும் தமிழ் பாடநூற்பரப்பில் பரீட்சை தயார்ப்படுத்தலுக்குரிய வழிகாட்டியாக விளங்கியது.இந்த நூலுருவில் இடம்பெற்றுள்ள "தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை" என்ற கட்டுரை அவர் கொண்ட தமிழ் பணிகள் குறித்த விவரமான விளக்கவுரையாக அமைந்துள்ளது.

தாமோதரனார் பதிப்பாசிரியராக, 'தொல்காப்பியம்' மற்றும் 'கலித்தொகை' போன்ற நூலுருக்களை முதன் முதலில் பதிப்பித்தவராக திகழ்கிறார். அவருக்குப் பின்பாகவே தமிழ் நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பதிப்பாசிரியர்கள் தமது பணியைத் தொடங்கினர் எனலாம். இங்கு, "தாமோதரம் பிள்ளையின் பணிக்கு முந்தியது தம்பணி" என்ற கருத்துருவாக்கத்துக்கு பண்டிதமணி பலத்த எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

1965 ஆம் ஆண்டு பண்டிதமணி அவர்களும், கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர்.சி.க்திரவேற்பிள்ளையும், அக்காலத்தின் முக்கிய பிரமுகர்கள் பலர் என சமூகம் தந்து இடம்பெற்ற பொதுக் கூட்டத்தின் போது, சிறுப்பிட்டியில் சி.வை.தாமோதரம்பிள்ளைக்கு சிலை எழுப்புவதாகவும், மணி மண்டபம் ஒன்றை நிறுவுவதாகவும் முடிவு செய்திருந்தனர். அதற்கான குழுவும் தெரிவு செயயப்பட்டது. உயர்தர வகுப்புத் தமிழ் மாணவர்கள் என்ற வகையிலும், எங்கள் தமிழ் ஆசிரியர்கள் பண்டிதமணியிடம் கொண்ட விசுவாசத்தின் பிரகாரமும் கூட்டத்துக்குச் சென்று பண்டிதமணியை நேரில் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வ மேலீட்டை கொண்டிருந்தோம். அதன்படியே புத்தூரிலிருந்து பொடி நடையாக பயணம் மேற்கொண்டு கூட்டத்துக்கு சமூகமளித்தோம்.

உண்மையில், எங்களுக்கு சி.வை.தாமோதரம் பிள்ளையின் சிலை திறப்புவிழா என்றே தகவல் தரப்பட்டிருந்தது. ஆர்வத்துடன் பண்டிதமணியின் சிலையைத் தரிசிக்கச் சென்றிருந்தோம். ஆனால் அங்கு சிலையைக்



கண்டுகொள்ள முடியவில்லை. தனித்து சீலைதான் காண்பியம் தந்தது. அதாவது, ஒரு திரைச்சீலையில் பண்டிதமணி கதிரையில் அமர்ந்திருப்பது போன்ற படம் வரையப்பட்டிருந்தது.அப்போதுதான் அது போலவே ஒரு சிலையை எதிர்காலத்தில் வைக்கப் போகிறார்கள் என்பதை தெரிந்தும்,அறிந்தும் கொண்டோம். சி.வை.தாமோதரம்பிள்ளை அமரத்துவம் அடைந்தது 1901 ஆம் ஆண்டு. இவர்கள் சிலை வைக்க முயன்றது 1965 ஆம் ஆண்டு.

இவர்களுடைய காலத்துக்கு முன்னரும் சிறுப்பிட்டி இந்து தமிழ் பாடசாலைக்கு அப்பால், பருத்தித்துறை வீதியின் கிழக்குப் புறமாக ஒரு நினைவுத் தூபி அடிக்கல் நீண்ட காலமாகக் காணப்பட்டது. பின்னர் இருந்த இடம் தெரி

**இன்று இவரின்
118 ஆவது நினைவு தினம்**

யாது அடிக்கல் பெயர்க்கப்பட்டு, அத்திவாரமும் இல்லாமல் செய்யப்பட்ட தன்மைகளும் குறிப்பிடத்தக்கது. துர்அதிர்ஷ்டமாக சி.வை. தாமோதரம்பிள்ளையின் சிலை சிறுப்பிட்டியில் அமைக்கப்படுவதற்கான சாத்தியம் ஏற்படவில்லை. தமிழுக்கு சேவை செய்த தங்கத் தாத்தாவுக்கு சிலை அமைப்பது குறித்த விடயத்தில் சுய நலங்களும், சுத்துமாத்துகளும் இருப்பதான தகவல் கவலை தரும் விடயம்.

அடிக்கல்லாக இருந்து அழிந்த வற்றை வீதியால் போவோரும், வருவோரும் கண்டு அது குறித்து விசாரித்து நகைத்தனர். இந்த நிலையயை எண்ணுகையில் பாரதியார் பாடிய, "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை சொல்லாரடி கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி" என்ற 'நடிப்புச் சுதேசிகள்' பற்றிய பாடலே ஞாபகத்தை எட்டுகிறது.1901 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மறைந்த தமிழ் முனிவனுக்கு. சங்கீத தமிழ் இலக்கியங்களை அழியாது அச்சேற்றிக் காப்பாற்றிய பெருமகனுக்கு ஏறாத்தாழ ஒரு நூற்றாண்டும் 17 ஆண்டு காலமும் கடந்து சென்றதன் பிற்பாடாக, பண்டிதமணியின் தந்தையார் ஊரிலே சிலை எழுப்புவது என்பது எமது சமூகம் பற்றிய கழிவிரக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தநிலையில் தமிழ் அபிமானம் ஊட்டி சிறுப்பிட்டி மண்ணுக்கும், தமிழ் அன்னைக்கும் பெருமை சேர்த்த சி.வை. தாமோதரப்பிள்ளையின் பெருமைகளை உணர்ந்த சிறுப்பிட்டி வாழ் பெரியவர்கள், இளம் உள்ளங்களில் தோன்றிய மேற்படி சிந்தனையை வரவேற்றுக் கொண்டனர். அவர்களுடன் இணைந்து கடந்த 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதியன்று சிறுப்பிட்டி வாழ் மக்கள் அனைவரையும் ஒருசேர ஒன்றிணைத் சி.வை தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த மன்றம் ஒன்றை உருவாக்கினர். புலம்பெயர் தமிழ் ஆர்வலர்கள் மற்றும் யாழ் பல்கலைக் கழக தமிழ் பேராசிரியர்களின் ஆசியோடு பணியாற்றத் தொடங்கினர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி சித்திரைப் புது வருட தினத்தன்று உரிய நல்ல நேரத்தில் சிலை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டது.பண்டிதமணி வாழ்ந்த மண்ணிலேயே 3 காணித்துண்டங்கள் தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த மன்றத்துக்கென வழங்கப்பட்ட கைங்கரியமும் இனிதே இடம்பெற்றது.

இவ்வகையில் எதிர்வரும் 20 ஆம் திகதி சி.வை.தாமோதரம்பிள்ளையின் சிலை அங்குரார்ப்பணம் இடம்பெறவுள்ளது.

ஆக, "தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா, அமிழ்தின் இனியதடி பாப்பா, எங்கள் ஆன்றோர்கள் தேசமடி பாப்பா" என்று பாடிய பாரதியாரின் வழிநின்று சிறும்பிட்டி மண்ணின் பெருமகனைப் பாடிப் பணிவோம்.பேணுவோம். ■

---

# "இல்லங்கள் தோறும் எழுந்தருளும் சேவகன்"

■ இராசையா ஸ்ரீதரன்

பண்ணின் கனிவோடு நெஞ்சில் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தி, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குகின்ற தித்திக்கும் திருவெம்பாவைப் பாடல்கள் தருகின்ற அருள் ஒளி எங்கும் வீசிப் பிரகாசிக்கும் இறையருளை சித்திக்கும் தன்மையுடையவை. அந்தவகையிலே அவை தருகின்ற ஒப்பற்ற சுவையை உணர்ந்திருப்போம்.

**பதினேழாவது பாடல்**

***செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்காரமுதை
நங்கள் பெருமானைப்பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.....!***

இங்கு, "வாசனைத் திரவியங்களால் நறுமணம் வீசும் கூந்தலையுடைய தோழி, சிவப்பு நிறக் கண்ணுடைய ஸ்ரீ மகாவிஷ்ணுவிடத்திலும் மற்றும் நான்முகனான பிரமாவிடத்திலும் மற்றும் தேர்வகளிடத்திலும் வேறெங்கும் இல்லாத ஒப்பற்ற பேரின்பம் நம்மைச் சேரும்படியாகச் சிறியவர்களாகிய நம்மைப் பாராட்டி,

இவ்வுலகிலே நம் வீடுகள் தோறும் எழுந்தருளி வந்து தன்னுடைய செந்தாமரை மலர் போன்ற அழகிய திருப்பாதங்களைக் காட்டியருளும் அண்ணலை, அழகிய கருணை நோக்குடைய மன்னனை,அடிமைகளாகிய எமக்குக் கிடைத்தற்கரிய அமுதத்தை எங்களுடைய தலைவனை நாம் பாடி அழகு மிகுந்து விளங்கும்படியாகத் தாமரைத் தடாகத்தின் புதிய நன்னீரிலே வீழ்ந்து மூழ்கி இன்



**மங்கலம்
தரும்
மார்கழி**

புற்றிருப்போமாக." என்று மணிவாசகப்பெருமான் சிவ பக்தியை எங்கும் எழுந்தருளச் செய்கிறார்.

**பதினெட்டாவது பாடல்**


***அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றார்
போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணாரமுதமுமாய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணெ இப்பூம்புனல் பாய்ந்தாடேலார் எம்பா
வாய்..!***

இங்கு, "ஓ பெண்ணே...! அண்ணாமலையுறையும் அண்ணலின் திருவடித் தாமரைகளின்பாற் போய் வணங்கும் வானவர் மகுடங்களிலுள்ள இரத்தினக் கற்களின் தொகுதி இறைவனின் பேரொளி முன்சிறப்பு விளக்கமிழந்தாற் போல வானிலே இடம் நிறையும் கதிரவனது கதிர்கள் தோன்ற, இருட்டு மறைய, நட்சத்திரங்கள் குளிர்ச்சிபொருந்திய தமது ஒளி மங்கிப் பொழிய, அந்த நேரத்திலே ஆணாகிப் பெண்ணாகி அலியாய் விளக்கமிக்க ஒளி பொருந்திய வானுலகமாகிய மண்ணுலகமாகிய இவ்வளவுக்கும் வேறாகிய பொருளாகி அன்பர்க்கு பெருமைமிக்க அமுதமுமாய் நின்ற பெருமானது திருவடிகளைப் பாடி இப்புதுப் புனலில் வீழ்ந்து, மூழ்கி இன்புற்றிருப்போமாக" என்று சிறப்புற இறை அழகியலை மாணிக்க வாசகர் விதந்துரைக்கிறார்.

இப்பாடலின் ஊடே திரு வண்ணாமலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானும் உமாதேவியாரும் தம்மை வணங்கும் அடியவர்களைப் புண்ணிய உலகில் இன்புற்றிருக்க வாழ்த்தும் தன்மை குறிப்பிடப்படுகிறது.



# 2018 புத்தாண்டு பலன்கள்



2017 முடிந்து 2018 பிறக்கிறது. இந்தாண்டு ஒவ்வொரு ராசிக்காரர்களுக்குமான பலன்கள் பற்றியும் பரிகாரத் தலங்கள் பற்றியும் விரிவாக பார்ப்போம்.



## மேடம்

**அசுவினி, பரணி கிருத்திகை 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு தனஸ்தானத்தில் சந்திரன் நிற்கும் இடத்தில் புத்தாண்டு பிறப்பதால், வரவேண்டிய பணம் வந்து சேரும். வாங்கிய கடனைத் கொடுத்து முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். புது வாகனம் வாங்குவீர்கள்.

**பார்வைப் பலன்கள்**

2.10.2018 ஆம் ஆண்டு வரை குருபகவான் 7இல் அமர்ந்து ராசியைப் பார்ப்பதால், உடல் ஆரோக்கியம் மேம்படும். திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வாழ்க்கைத்துணைவி உங்கள் முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருப்பார். திருமணம் கூடி வரும். தந்தை வழியில் ஆதரவு பெருகும். ஆனால், 14.2.18 முதல் 10.4.2018 ஆம் ஆண்டு வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிசார வக்கிரத்திலும், 3.10.2018 ஆம் ஆண்டு முதல் வருடம் முடியும் வரை ராசிக்கு 8இல் சென்று மறைவதாலும் சின்னச் சின்ன விடயங்களையும் போராடித்தான் முடிக்கவேண்டி இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் தோன்றக்கூடும். பணப் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்பதால் சிலர் கடன் வாங்கவும் கூடும். வீட்டிலும் பயணத்தின் போதும் விலையுயர்ந்த பொருள்கள் களவு போகக்கூடும் என்பதால் கூடுதல் கவனம் தேவைப்படும். அடிக்கடி தாழ்வு மனப்பான்மை ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கட்டுபாட்டுடன் இருக்கவேண்டியது அவசியம்.

வருடம் பிறக்கும்போது ராசிநாதன் செவ்வாய் 7இல் இருப்பதால், கணவன் மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடன் பிறந்தவர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். சொத்துகள் வாங்குவது விற்பதில் வில்லங்கம் ஏற்பட்டு நீங்கும்.

உங்கள் ஜீவனாதிபதியும் இலாபாதியுமான சனிபகவான் வருடம் முழுவதும் 9ஆம் இடத்திலேயே தொடர்வதால், தன்னம்பிக்கை கூடும். பெரிய பதவிகளில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். தெளிவாகச் சிந்தித்து பழைய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். தடைப்பட்ட சுபநிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நடைபெறும். புதுப் பதவி மற்றும் பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். அரச விஷயங்கள் சாதகமாக முடியும். வெளிநாடு செல்ல நுழைவிசைவு கிடைக்கும். பிற மொழி பேசுபவர்களால் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படக்கூடும். மகளின் திருமணத்தை விமர்சையாக நடத்தி முடிப்பீர்கள். ஆனால், தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புத்தாண்டின் தொடக்கத்தில் சூரியன் பகை கிரகமான சனியுடன் இணைந்திருப்பதால், பிள்ளைகளின் உயர் கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட கவலைகள் வந்து போகும். பூர்வீகச் சொத்து பிரச்னையில் பொறுமை காப்பது அவசியம்.

10.3.2018 ஆம் ஆண்டு முதல் 2.5.2018 ஆம் ஆண்டு வரை சனியும் செவ்வாயும் சேர்ந்திருப்பதால், தந்தை வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் தோன்ற வாய்ப்பு உள்ளது. மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம்.

2.8.2018 ஆம் ஆண்டு முதல் 29.8.2018 ஆம் ஆண்டு வரை சுக்கிரன் 6இல் மறைவதால், கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றக்கூடும் என்பதால், ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. விலையுயர்ந்த ஆபரணங்கள் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை.

வருடம் முழுவதும் ராகு 4லும் கேது 10லும் இருப்பதால், சிலருக்கு வீடு மாறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும். தாயாரின் அறிவுரைப்படி நடப்பது மிகவும் அவசியம். அவருடைய உடல் நலனிலும் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. புறநகர்ப் பகுதியில் இருக்கும் சொத்துகளை மற்றவர்கள் ஆக்கிரமிக்கக்கூடும் என்பதால் கூடுதல் கவனத்துடன் இருக்கவும். வழக்குகளில் வழக்கறிஞரின் ஆலோசனைப்படி நடப்பது நல்லது.

வியாபாரத்தில் புது வியூகம் அமைத்து கூடுதல் இலாபம் ஈட்டுவீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். சிலர் வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரிகள் சங்கத்தில் முக்கியப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். பணியாளர்களின் குறைகளை பக்குவமாக சுட்டிக் காட்டித் திருத்துவீர்கள். பிரபலங்களும் வாடிக்கையாளர்களாக அறிமுகமாவார்கள். உணவகம், தங்கும் விடுதி, சிமெண்ட் வகைகளால் ஆதாயம் உண்டாகும். வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். ஆனால், ராகு 4இல் இருப்பதால், கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் ஜீவனாதிபதி சனி சாதகமாக இருப்பதால், அலுவலகத்தில் மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். புதிதாக வரும் அதிகாரி உங்களுக்கு ஆதரவாகச் செயல்படுவார். கேது 10இல் தொடர்வதால் பணிச் சுமை அதிகரிக்கும். உங்கள் உழைப்பைப் பயன்படுத்தி வேறு சிலர் முன்னேறுவார்கள். அலுவலகத்தில் ஆதரவும் எதிர்ப்பும் கலந்துதான் காணப்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் சற்று தாமதமாகத்தான் கிடைக்கும். சிலருக்கு பணியின் காரணமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மாணவர்களே!** ஆசிரியரிடம் நல்ல பெயர் வாங்குவீர்கள். படிப்பில் மட்டுமல்லாமல் கலைப் போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசும் பாராட்டும் பெறுவீர்கள். உயர்கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெற்று விரும்பியப் பாடப்பிரிவில் சேருவீர்கள்.

**கலைத்துறையினரே:** உங்களின் நீண்டநாள் கனவு நனவாகும். பெரிய நிறுவனங்களில் இருந்து வாய்ப்புகள் வரும். புகழ், மதிப்பு உயரும். இந்தப் புத்தாண்டு உங்களை முன்னேற வைப்பதுடன் எதிர்காலத் திட்டங்களையும் நிறைவேற்றுவதாக அமையும்.




## விருதுகள் படும்பாடு

ஏதோவொரு துறையில் சிறப்புடன் செயலாற்றுபவர்களுக்கு விருது வழங்கி மதிப்புறுத்துகின்ற செயற்பாடுகள் இடம் பெறுவதைப் பாராட்டியே தீர வேண்டும். விருதுகள் ஒருவரின் திறமைக்குக் கிடைக்கின்ற அங்கீகாரம் என்றே கூற வேண்டும். சிலருக்குத் தேசிய ரீதியில் விருது வழங்கி மதிப்பளிக்கப்படுகிறது. வேறு சிலர் வெவ்வேறு மட்டங்களில் விருதுகளைப் பெறுகின்றனர். இந்த விருதுகள் ஒவ்வொருவரும் தாம் சார்ந்த துறையில் முத்திரை பதித்தனர் என்பதற்கு தக்க சான்றாதாரமாகவும் அடையாளாகவும் உள்ளன. விருதுகளைப் பெறுபவர்கள் ஏனையவர்களுக்கு சிறந்த முன்னுதாரணங்கள் என்பதற்கும் இந்த விருதுகள் தக்க சான்றாதாரங்கள்.

ஆனால் இவ்வாறான விருதுகள் ஒருவரின் தகைமைக்குக் கிடைக்கின்றதா? என்பதில் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது. விருதுக்குத் தகுதியானவர்களை ஒதுக்கி வைத்துவிட்டு வேறு சிலருக்கு விருதுகள் வழங்கப்பட்ட, வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் நிகழ்ந்தன, நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதுவே இந்தச் சந்தேகத்துக்குரிய முதன்மைக் காரணமாகும்.

விருது என்பது ஒருவரைத் தேடி வருவது. ஆனால் சிலர் விருதுகளைத் தேடி அலைகின்றனர். இதற்காக எதையும் செய்வதற்கும் இவர்கள் தயாராக இருக்கின்றனர். மற்றவர்களின் கால்களைப் பிடித்தாவது விருதுகளைப் பெற்றுவிட வேண்டும் என்பது இவர்களின் இலட்சியமாகக் காணப்படுகின்றது. இத்தகையவர்கள் விருதுகளை பெற்றதன் பின்னர் அவற்றைக் காட்டியே தமது பெருமைகளை மற்றவர்களிடத்தில் பறைசாற்றிக் கொளவார்கள். இத்தகைய குணம்படைத்தவர்கள் விருதுபெறுவதற்கே தகுதியற்றவர்கள்.

வேறுசிலர் தகுதியிருந்தும் விருது வழங்கப்படாது புறக்கணிக்கப்படுகின்ற வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு விருது வழங்கப்படாதுவிட்டாலும் இவர்களது திறமைகளுக்காக மற்றவர்களால் மதிக்கப்பட்டுப் போற்றப்படுவார்கள். ஒரு சில தனிப்பட்ட நிறுவனங்கள் தகுதியில்லாதவர்களுக்குக் கூட விருதுகளை வழங்கித் தம்மைச்சிறுமைப்படுத்திக் கொள்கின்றன. தகுதியானவர்களுக்கு விருதுகளை வழங்குவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் அவை தவறானவர்களைச் சென்றடைந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருத்தல் வேண்டும். எவரது மனமும் புண்படாத வகையில் சரியான முறையில் விருதுகள் வழங்கப்படுமாயின் அவற்றின் பெருமையும் காப்பாற்றப்பட்டுவிடும். விருதுகள் திறமைக்கானதும், அனுபவத்துக்கானதுமான அங்கீகாரமாக இருத்தல் வேண்டும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 01.01.2018




1651 இரண்டாம் சாள்ஸ் ஸ்கொட்லாந்து அரசரானார்.
1899 - கியூபாவில் ஸ்பானிஸ் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
1901 - நைஜீரியா, பிரிட்டனின் ஆட்சிக்குள் வந்தது.
1956 - எகிப்து மற்றும் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து சூடான் சுதந்திரம் பெற்றது.
1960 - பிரான்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து கமரூன் சுதந்திரம் பெற்றது.
1993 இனப்பிர[illegible]னைக்கு முட்டுக்கட்டை போடாது ஒத்துழைக்கக் கோருகிறார் அரச தலைவர் பிரேமதாஸ.
1995 - கொழும்பில் தமிழர்களின் வீடுகள் நான்கு எரிந்து நாசம்.
2008 - நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் படுகொலை.

## நாளை

**02.01.2018**
செவ்வாய்க்கிழமை

**மார்கழி 19**

திதி: பூரணை மு.ப. 09.21 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப. 01.37 வரை
சுபநேரம்: 11.00–12.30 வரை
ராகுகாலம்: 03.30–05.00 வரை



## ஏப்ரல் 14இல் 2.0 திரைக்கு

சங்கர் இயக்கத்தில் ரஜினியின் நடிப்பில் உருவாகியுள்ள 2.0 படம் ஏப்ரல் 14ஆம் திகதி திரைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ரஜினிகாந்த் இதுவரை நடித்த படங்களிலேயே அதிக செலவில் தயாராகியுள்ள படம் 2.0. இந்திய மதிப்பில் சுமார் 450 கோடி ரூபா செலவில் இந்தப் படம் தயாராகியுள்ளது. ரஜினியின் ஜோடியாக எமி ஜக்சனும், வில்லனாக ஹிந்தி நடிகர் அக்சய் குமாரும் நடித்துள்ளனர்.
இந்தப் படத்தின் படப்பிடிப்பு முற்றாக முடிவடைந்துள்ளது. படம் எப்போது திரைக்கு வரும் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி படம் திரைக்கு வரும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. ரஜினியிடம் இருந்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.

**ஏதோ புதுவருசம் பிறந்திருக்காமே...**



**எந்த ஆஸ்பத்திரியில பிறந்திருக்கு எண்டு கேட்டா அடிக்க வாராங்க...**

**எமக்குப் பிடிச்ச பாட்டு எல்லாம்...**



**பக்கத்து வீட்டில தான் கேட்கும்**

**வருசத்துக்கு மூனு செருப்பு மாத்த வேண்டியதா இருக்கு... இனி எப்படி செருப்பு தேயுதெண்டு பாத்திடலாம்...**



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராத தொந்தரவு வரலாம். தொழில், வியாபார நடைமுறை சீராக, புதிய உத்தியைப் பயன்படுத்துவது நல்லது. மிதமான அளவில் பணவரவு இருக்கும்.

**இடபம்:** பேச்சில் அன்பு மிகுந்திருக்கும். நண்பர், உறவினர் மதிப்புடன் நடத்துவர். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் முயற்சியுடன் பணிபுரிவீர்கள்.

**மிதுனம்:** மன சஞ்சலம் தவிர்த்தல் நல்லது. யாருக்கும் வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழில், வியாபார இடையூறை தாமதமின்றி சரிசெய்வது அவசியம்.

**கடகம்:** செயல்களில் நிதானம் கடைப்பிடிப்பது நல்லது. எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**சிங்கம்:** கலை உணர்வு அதிகரிக்கும். தாமதமான பணி ஆதாயம் தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தின் வளர்ச்சியை பார்த்து, பலரும் வியப்படைவர்.

**கன்னி:** தவறான விமர்சனங்களை கண்டுகொள்ள வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு உதவும். சேமிப்புப் பணம் முக்கிய செலவுக்குப் பயன்படும்.

**துலாம்:** முரணாக உள்ளவரிடம் வீண் பேச்சு வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சிக்கு கூடுதல் முதலீடு தேவைப்படும். உணவு விஷயத்தில் நேரம் கடைபிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தாமதமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். கொடுக்கல், வாங்கல் சீராகும். புதிய சொத்து வாங்கும் வாய்ப்பு உருவாகும்.

**தனுசு:** அறிவுத் திறன் பரிமளிக்கும். சிரமமான பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மகரம்:** பணிகளில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சிலமாற்றம் செய்வது அவசியம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். குடும்ப உறுப்பினர்களிடம், வாக்குவாதம் வேண்டாம். புதிய வழிகளில் பணச்செலவு ஏற்படும்.

**மீனம்:** செயலில் நேர்த்தி நிறைந்திருக்கும். பிறரின் மனம் அறிந்து பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலக்கு நிறைவேறும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

## 2018

### நம்பிக்கையே வாழ்க்கை !

நீர்குமிளி போன்ற இந்த வாழ்க்கையில் ஒவ்வொரு வினாடியும் கடப்பது நம்பிக்கை என்னும் கனவுடனேயே...
அடுத்த விநாடி எப்படி இருக்கும் என்று கற்பனையில் கூட காண முடியாதொரு வாழ்க்கை. ஆனாலும் எம் மனதில் அநேக எதிர்பார்ப்புகள் எதிர்காலத்தைப் பற்றி, எதிர்கால சந்ததிகளைப் பற்றி , இந்த உலகத்தையே ஆதாயபடுத்திக்கொண்டாலும் அடங்காத பேராசை! இந்த நீர்குமிளி வாழ்க்கையில்!
எம்மோடு பிறந்தவர்கள், நமக்கு தெரிந்தவர்கள், எம்மைவிட வயதில் குறைந்தவர்கள், அநேகர் இவ்வுலகை விட்டு கடந்திருந்தாலும், எம் மனதில் மட்டும் சாவு என்னும் ஒன்று இருப்பதையே மறந்தவர்களாய் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் !
இத்தனை வருடங்களாக வாழ்ந்துவிட்டோம் ! இனி வரும் வினாடிகள் , நிமிடங்கள், மணித்துளிகள், நாட்கள் , வாரங்கள், மாதங்கள், வருடங்கள் எம்முடயதாய் இருக்கட்டும் என நினைத்து, நன்றியுடன் இவ்வருடத்தை வழியனுப்புவதுடன், எம்பிக்கையுடன் வரும் புதிய வருடத்தை வருக வருக என வரவேற்கத் தயாராகுவோம் !!

சாவடையப் போவதில்லை என்பதுபோல வாழ்கிறான்; வாழுவே இல்லை என்பது போல் சாவடைந்து விடுகிறான்.


## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 7 | | 3 |
| 2 | 5 | | | | | | 1 | |
| | | | 5 | 6 | | 9 | | |
| 3 | | 9 | | | | 5 | | |
| | | | 1 | 9 | 8 | | | |
| | | 7 | | | | 2 | | 8 |
| | | 6 | | 8 | 4 | | | |
| | 1 | | | | | | 4 | 5 |
| 4 | | 2 | | | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 8 | 3 | 5 | 9 | 7 | 4 | 6 |
| 7 | 5 | 4 | 1 | 6 | 2 | 8 | 3 | 9 |
| 3 | 9 | 6 | 8 | 7 | 4 | 2 | 1 | 5 |
| 8 | 4 | 5 | 2 | 1 | 6 | 9 | 7 | 3 |
| 1 | 7 | 9 | 5 | 4 | 3 | 6 | 8 | 2 |
| 6 | 2 | 3 | 9 | 8 | 7 | 4 | 5 | 1 |
| 9 | 6 | 1 | 4 | 3 | 8 | 5 | 2 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 9 | 5 | 1 | 6 | 8 |
| 5 | 8 | 7 | 6 | 2 | 1 | 3 | 9 | 4 |



வாழ்க்கையில்
தேவையைக் குறைத்துக் கொண்டு
சமாளித்தால் நீ புத்திசாலி

தேவையை
அதிகரித்துக் கொண்டு
அதை சமாளிக்க முடிந்தால்
நீ திறமைசாலி...





# புத்தாண்டுப் பண்டிகை




- இன்று புத்தம் புதிய ஆண்டு ஒன்று மலர்ந்திருக்கிறது.
- இந்தப் புதுவருடப் பண்டிகையை உலக மக்கள் அனைவரும் மதவேறுபாடுகள் இன்றி ஒன்று பட்டு கொண்டாடுகிறார்கள்.
- இந்தத் தினம் ஆங்கிலப் புத்தாண்டு என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது.
- உலக மக்கள் கிறிஸ்த்து பிறந்த நத்தார் தினம் முதல் வாரகாலமாக இந்த புதுவருடப் பிறப்பையும் வரவேற்கத் தயாராகி விட்டனர்.
- வீடுகள், ஆலயங்கள் மற்றும் நிறுவனங்கள் யாவும் வர்ணம் பூசப்பட்டு புதுப்பொலிவு பெறத் தொடங்கின.
- இன்று நள்ளிரவில் ஆலயங்களில் ஆராதனைகளுடன் புத்தாண்டு பிறந்தது.
- புத்தாண்டை வரவேற்க எல்லோரும் கண் உறங்காது விழித்திருந்து, நள்ளிரவு 12மணிக்கு பட்டாசுகளும் வாணவெடிகளும் கொழுத்தி வரவேற்றனர்.
- கிறிஸ்தவ ஆலயங்களில் பலர் நள்ளிரவு ஆராதனைகளிலும், அதிகாலை ஆதாரனைகளிலும் கலந்துகொண்டு நண்பர்கள் உறவினர்கள் என்று எல்லோருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பர்.
- வீடுகளில் உடன்பிறப்புக்கள் உறவினர் அயலவர் நண்பர்கள் எனப் பலரும் சென்று சுவையான சிற்றூண்டிகளையும், உணவுகளையும் உண்டு மகிழ்வர்.
- புத்தாடைகள் அணிந்து புதுபொலிவுடன் சிறுவர் முதல் பெரியோர் வரை உலாவருவர்.
- ஆண்டின் இறுதிநாளானான நேற்றைய தினம் பழையன கழிந்து இன்று புதியன புகுவதில் எல்லோரும் கண்ணும் கருத்துமாக இருப்பர்.
- இன்றைய தினம் நாமெல்லோரும் புதிய புதிய முறைகளில் புத்தாண்டை வரவேற்று மகிழ்வதோடு இன்றிலிருந்து இந்த வருடம் முழுவதும் ஒழுங்காக கடைப்பிடிக்கவென்று சில நல்ல தீர்மானங்களையும் மனதில் எடுத்துக்கொள்வோம்.
- இவ்வருடத்தில் நடப்பனவெல்லாம் நன்றாய் நடக்க பிரார்த்திப்போம்.
- பெற்றோரையும் பெரியோரையும் மதித்து நல்லாசிகள் பெறுவோம்.



# இறைவன் இருக்குமிடம்

ஓர் ஊரில் ஒரு ஆன்மிகப் பெரியவர் இருந்தார். அவர் பக்கத்து ஊர்களுக்குச் சென்று அடிக்கடி ஆன்மிகச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவார். சில வேளைகளில் அவ்வூர்களில் நடைபெறும் பூசை வழிபாடுகளிலும் பங்குபற்றுவார்.

ஒருநாள் மாலை நான்கு மணி. அந்தப் பெரியவர் பல இறை அடியவர்கள் சூழ அடுத்த ஊருக்கு வீதி வழியே நடந்து சென்று கொண்டிருந்தார். வழியில் ஏராளமான அடியவர்கள் எதிரே வந்து பெரியவரை வணங்கி ஆசீர்வாதம் வாங்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.



அப்போது அந்த வீதியின் அருகில் இருந்த ஒரு சிறிய வெளியில் சுமார் 10 வயதுக்குட்பட்டபத்துப் பதினைந்து சிறுவர்கள் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் அணிந்திருந்த சட்டைகள் எல்லாம் அழுக்காகவும், கிழிசல்கள் நிறைந்ததாகவும் இருந்தன. ஒரு சில குழந்தைகளின் உடலில் ஆடைகள் எதுவும் இல்லை. பிறந்த மேனியாக காணப்பட்டார்கள். இந்தக் குழந்தைகளின் பரிதாபமான நிலையைப் பார்த்த அவரால் மேற்கொண்டு தொடர்ந்து நடக்க முடியவில்லை. அங்கேயே வீதியின் ஓர் ஓரமாக நின்று விட்டார்.

இவர் செயலைப் பார்த்த இவரது உதவியாளர் அவருக்கு மேற்கொண்டு நடக்க முடியாமல் போய் விட்டதோ? ஏதாவது நோய் நொடியோ எனப் பதறி அவரிடம் வந்து, அவர் அங்கே தரித்து நிற்பதற்கான காரணத்தை மெதுவாக வினவினார். "அப்படி எதுவும் இல்லை" என்று பதிலளித்த பெரியவர் உதவியாளரின் காதோடு காதாக ஏதோ சொல்லியனுப்பினார். உதவியாளரும் இன்னும் சிலரும் அங்கிருந்து வேகமாகப் புறப்பட்டு வந்த வழியே திரும்பிப் போயினர்.

அவர்கள் போன பின்னர் பெரியவர், அந்தச் சிறுவர்களையும் குழந்தைகளையும் அன்புடன் தனது அருகில் அழைத்து அவர்களைப் பாடச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருந்தார். மாலை மணி ஆறாகியது. உதவியாளர்களும் அவர் கூடப்போனவர்களும் நிறையத் துணி மூட்டைகளுடன் வந்து சேர்ந்தனர்.

உடனே பெரியவர் அவற்றை யெல்லாம், எடுத்து ஒவ்வொரு குழந்தைக்கும் கொடுத்தார். அந்தப் பிள்ளைகளும் மிகுந்த உற்சாகத்தோடு அவற்றை அணிந்து கொண்டு மிக மகிழ்ச்சியாக இருந்தனர். இந்த நிலையில் உதவியாளர் உட்பட பெரியவரோடு கூட வந்தவர்கள் தவிப்போடு காணப்பட்டனர். பெரியவர் சிறுவர்களுடன் பேசிக்கொண்டே இருந்தார். சிறிது வேளையில் உதவியாளர் பெரியவரிடத்தில் போய், அவரை அணுகி "ஐயா பெரியவரே, இனி சீக்கிரம் புறப்பட்டால் நல்லது. பக்கத்து ஊரில் பூசை இருக்கிறதே... என்று !" இழுத்தார்.

"பூசையா? அதுதான் இங்கேயே ஆகிவிட்டதே. இந்த ஏழைக்குழந்தைகளுக்கு ஆடைகள் கொடுத்தோமே! அதுதான் பூசை! இது போதும்" என்று கூறி எழுந்து அந்தச் சிறுவர்களிடம் விடைபெற்று வந்த வழியே திரும்பி நடக்கத் தொடங்கினார் அந்தப் பெரியவர்.






# வர்ணம் தீட்டுவோம்



# வாழ்வில் சிறந்திட

- வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம்; கடமையைச் செய்தால் அது வெற்றி: கடமைக்குச் செய்தால் அது தோல்வி.
  ***மாவீரன் அலெக்ஸ்சாண்டர்***
- முயற்சி இல்லை என்றால் உன்னால் வெற்றி பெற முடியாது. முயற்சி இருந்தால் உன்னால் தோற்க முடியாது.
  ***ஏ.பி.ஜே.அப்துல்கலாம்***
- தன் மீது விழும் ஒவ்வொரு அடியும் தன்னை ஒரு சிற்பம் ஆக்கும் என்று கல்லுக்குத் தெரியாது.
  ***ஐன்ஸ்டீன்***
- உலகம் எப்பொழுதும் பளபளப்பைக் கண்டு ஏமாறுகிறது.
  ***ஷேக்ஸ்பியர்***
- உன்னை ஒருவன் தாழ்த்திப்பேசும் போது ஊமையாயிரு; உயர்த்திப்பேசும்போது செவிடனாய் இரு: வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய்.
  ***விவேகானந்தர்***
- நீராவி போன்றது புகழ். அது வந்த வேகத்தில் ஆவியாகி விடும்.
  ***ஆபிரகாம் லிங்கன்***
- மரியாதையாகக் கேட்டால் கோட்டைகளும் உனக்கு வழிவிடும்.
  ***செனிகா***



# ஜோர்ஜ் வொஷிங்டனின் கட்டளை

அமெரிக்காவின் முதல் அதிபரான ஜோர்ஜ் வொஷிங்டன் 18ஆம் நூற்றாண்டில் அமெரிக்க குடியரசை நிறுவியவர்களில் முக்கியமானவர். ஒரு சமயம் அவர் நேரம் கழித்து அலுவலகம் வந்த தமது செயலாளரை அழைத்து "தாமதத்துக்கு என்னகாரணம்" என்று கேட்டார். அதற்கு அந்தச் செயலாளர் காலதாமதம் ஆனதற்கு தன்னிடம் இருக்கும் கைக்கடிகாரம்தான் காரணம் என்றும் தன்னை மன்னிக்கும் படியாக்வும் வேண்டினார். அதற்கு வொஷிங்டன் "அப்படியா? இந்தத் தவறு நீடிக்காமல் இருக்க வேண்டுமானால், இரண்டில் ஒரு காரியத்தை உடனே நடத்தியாக வேண்டும். ஒன்று நீங்கள் உங்கள் கைக்கடிகாரத்தைத்திருத்த வேண்டும். அல்லது நான் வேறு செயலாளரை அமர்த்திக்கொள்ள வேண்டும்" என்று சாந்தமாகக் கூறினார்.

அன்று முதல் அந்தச் செயலாளர் தினமும் சரியான நேரத்துக்கு அலுவலகம் வரத் தொடங்கினார்.

# கரை ஏறும் நேரம்



மீனவன் ஒருவன் ஆற்றில் முழங்கால் அளவு ஆழத்தில் நின்றுகொண்டு தூண்டில் போட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்தான். அவ்வழியே வந்த துறவி அவனின் கொடுமையான வாழ்க்கையைக்கண்டுஇரக்கப்பட்டார். அவனைப்பார்த்து "நீ எப்போதுகரை ஏறப்போகிறாய்?" என்று கேட்டார். துறவி கேட்டதன் குறிப்பை உணராத அவன் "சாமி இந்தப்பை நிரம்பியதும் கரை ஏறி விடுவேன்" என்றான்.

## காணவில்லை



124, பலாலி வீதி இலுப்பையடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **செல்லப்பா நடராசா** (வயது -85), 31.12.2017 பிற்பகல் முதல் காணவில்லை **(வெள்ளை சரமும், கறுப்பு ரிசேட்டும் அணிந்திருந்தார்)**
இவர் மனநிலை பாதிக்கப்பட்டவர். இவரை கண்டவர்கள் பின்வரும் T.P மூலம் அறியதரவும்.
தொடர்பு - **077 899 7263, 021 222 7769**

(CS12464)(17.8)

Galaxy Star

வெற்றி வாரம் 225 | திகதி 31.12.2017

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
02 15 28 43 58

அடுத்த புதன் கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 6, 222, 644/-

விசேட இல.

| | | | | |
|---|---|---|---|---|
| 8312712 | 5693120 | 4567600 | 5067113 | 8940223 |

03.01.2018 ஆம் திகதி புதன் கிழமை
நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி சனிதா

சீட்டிழுப்பு வாரம்: 235
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 31.12.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 80,074,492/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
L 05 10 12 41

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 123
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.12.31
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 51,386,535/-

வெற்றி இலக்கங்கள்
22 31 35 49
ஆங்கில எழுத்து
U

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 31.12.2017 | 2231 | ஊதா |


மிதுனம்
வெற்றி இலக்கங்கள்
12 21 28 32

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 6,240,968/=

2018.01.02 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 . 08 . 1933 | 31 . 12 . 2017 |

## செல்லையா இராசையா

சங்கானையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் தற்போது பண்ணாகத்தில் வசித்தவருமான செல்லையா இராசையா 31.12.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஐயாத்துரை அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் நிமலானந்தராணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் ராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, பூரணசற்குணம் மற்றும் கனகேஸ்வரன், மகேஸ்வரி, விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ராசகுமார், சுரேந்திரன், கபில்தாஸ் ஆகியோரின் அருமைத் தந்தையும் புஸ்பராணி, இந்திரப்பிரியா ஆகியோரின் மாமனும் சுகிர்தன், சுகிர்தா, திவாகர், உமாசங்கர், மதுஷாந், அபிஷாந், மோகனப்பிரியா, அட்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பண்ணாகம், சுழிபுரம்.**
**077 873 7202**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 12463/15/17)

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் பொது அறிவித்தல் 2018

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும் 2018.01.01ம் திகதியிலிருந்து எமது சபையால் நடைமுறைப் படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**01.ஆதனவரி செலுத்தல்**
2018ம் ஆண்டிற்கான ஆதனவரியை கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் மற்றும் அச்சுவேலி ஆகிய உப அலுவலகங்களில் செலுத்திசபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் ஜனவரி 31ம் திகதிக்குமுன்னர் செலுத்துவோரிற்கு வருட மொத்தவரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்கு முரியவரியை அந்தகாலாண்டின் முதல் மாதமுடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டுவரியில் 5% கழிவு வழங்கப்படும்.

**02.ஆதனப் பெயர் மாற்றம் செய்தல்**
எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உபஅலுவலகங்களுடன் தொடர்புகொண்டு உரிய நடைமுறைகளைப் பின்பற்றி பெயர் மாற்றத்தினையும், ஆதனத்தில் பௌதீகமாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**03.கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதி வழங்கல்**
1)பிரதேசசபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரேதங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், மதில்கள், முட்கம்பிவேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்தவேலைகளை மேற்கொள்ளல் வேண்டும்.
2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருடகாலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் காலநீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3)அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருந்தால் உரிய உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கட்டட தகைமைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்
4)சபையின் அனுமதியின்றி சபைஎல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள் மதில்கள், முட்கம்பிவேலிகள், எல்லைத்தூண்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகளை மேற்கொள்ளல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.
5)சபையின் அனுமதியின்றி அமைக்கப்படுகின்ற கட்டடங்கள் மற்றும் சட்ட விரோதமாக விதிமுறைகளை மீறி அமைக்கப் படுகின்ற கட்டிடங்கள் தொடர்பில், உரிய கட்டணங்களிற்கு மேலதிகமாக சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற தண்டப பணம் அறிவிடப்பட்ட பின்னரே உரிய அனுமதி வழங்குவது பற்றிபரிசீலிக்கப்படும்..

**04.வீதி ஒழுங்கு முறை பேணல்**
எமது பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லைவேலி மற்றும் எல்லைச் சுவரிற்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள மரக்கன்றுகள் மற்றும் புல்பூண்டுகள், வளவிலிருந்து வீதியை நோக்கி வெளியே வளர்ந்திருக்கின்ற தாவர மற்றும் மரக்கிளைகள், சீமெந்துக் கட்டுக்கள் போன்றவற்றை சம்பந்தப்பட்டோர் உடனடியாக அகற்றியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்கேதுவாக உரியவீதி ஒழுங்கைப் பேணுமாறும் உரிய அறிவுறுத்தல்களை அனுசரித்துநடக்கும் படியும் பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர்.

**05.வியாபார அனுமதிப்பத்திரம் - 2018**
இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், முச்சக்கரவண்டிதரிப்பட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2018ம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பத்தை 2018.01.31ம் திகதிக்குள் பெற்றுஅதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரியகட்டணங்களை 2018.03.31ம் திகதிக்குள் செலுத்தி 2018ம் ஆண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் சபையின் பொதுச்சந்தைகள், மீன்சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் ( ½ கிலோமீற்றர்) சுற்று வட்டபிரதேசத்திற்குள் மரக்கறி, மீன் வகைகள், இறைச்சிக் கோழி,கோழி இறைச்சி என்பன விற்பனை செய்யப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறி செயற்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**06.துவிச்சக்கரவண்டி மற்றும் மிருக உரிமம்**
2018ம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை 2018.03.31ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**07.சூழல் பாதுகாப்பு உரிமம்**
மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 1980ம் ஆண்டின் 47ம் இலக்கதேசிய சூழல் பாதுகாப்புசட்டத்தின் 26ம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் நிர்வாக பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.22ம் திகதியமற்றும் 1534/18 இலக்க 2008.02.01ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களிற்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்புசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவேசம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் கிழக்குபிரதேசசபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக்கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனை புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

**08.படவரைஞர்களைப் பதிவுசெய்தல்**
2018ம் ஆண்டுபுதிதாக படவரைஞராகப் பதிவுசெய்ய விரும்புவோரும், 2018ம் ஆண்டிற்காக படவரைஞர் பதிவினைப் புதுப்பிக்க விரும்புவோரும் எதிர்வரும் 2018.03.31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் புதுப்பித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளமுடியும்.

**09.விளம்பரங்களை அமைத்தல் மற்றும் காட்சிப்படுத்தல்.**
வலிகாமம் கிழக்குபிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள சகல பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் சகல விளம்பரங்கள் மற்றும் வளவுகளிலிருந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரங்கள் ஆகியவற்றிற்கான கட்டணத்தை 2018.02.28 ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்விடயம் உரியவிளம்பரம் காட்சிப்படுத்தபட்டுள்ளஆதனம் மற்றும் வர்த்தக நிறுவன உரிமையாளர்களது பொறுப்பாகும். அத்துடன் உரிய அனுமதி பெறப்படாது காணப்படுகின்ற சகலவிளம்பரங்களும் வேறு எந்த அறிவித்தலுமின்றி உரிய இடத்திலிருந்து 2018.03.01ம் திகதிக்குபின்னர் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை பிரதேசசபையினால் மேற்கொள்ளப்படும். இவ்விடயம் தொடர்பில் மேன்முறையீடுகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**10.திண்மக்கழிவுகளை அகற்றுதல்**
ஆதன உரிமையாளர்கள் தம்து ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற் கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப் பொருட்களை பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றிகொட்டுதல் மற்றும் கொண்டுசெல்லல் ஆகியன பொதுச் சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. எனவேஅவற்றினை இயலுமானவரை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பு இல்லாத வகையில் புதைத்து அல்லது எரித்து சுத்தத்தை பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்றமுடியாதுள்ள கழிவுப்பொருட்களைத் உரிய முறையில் தரம் பிரித்து பிரதேசசபையினது கழிவகற்றல் வாகனதில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். நடைமுறையிலுள்ள கழிவகற்றல் வாகன ஒழுங்குமுறை பற்றி சபை அலுவலகங்களைத் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம். அரசமற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தகநிலையங்கள் ஏனைய தொழில்முறை நிறுவனங்கள் தங்களது கழிவுப்பொருட்கள் அகற்றுவது தொடர்பில் சபையினது உரிய உபஅலுவலகத்துடன் தொடர்புகொண்டு மாதாந்தகட்டணங்கள் அல்லது தடைவகளிற்கான கட்டணங்களை செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை காண்பித்தே சபையினது கழிவகற்றல் வாகனம் மூலம் கழிவகற்றலை மேற்கொள்ளமுடியும். உரிய நடைமுறைகளை பின்பற்றி கழிவகற்றலை மேற்கொள்ளாது சுட்டவிரோதமாக கழிவகற்றலை மேற்கொள்கின்றவர்கள் தொடர்பில் உடனடியாகவே சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**11.நீர்வழங்கல் சேவை**
பொதுமக்கள் மற்றும் வியாபாரநிலையங்கள், அரசதனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேசசபையில் கட்டணம் செலுத்தி குடி நீரைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**12.திரவகழிவகற்றல் மற்றும் கனரகவாகன சேவை**
மலசலகூடகழிவுகள் மற்றும் திரவக்கழிவுகளை அகற்றும் வாகனத்தின் (குலிபௌசர்) சேவை தேவைப்படுவோர் எமது அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி உரிய சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும். வீதி உருளை வாகனத்தினையும் தேவைப்பட்டால் எமது அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

**13.பிரதேச மண்டபபயன்பாடு**
பொதுமக்கள் மற்றும் வியாபாரநிலையங்கள், அரசதனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேசசபையில் கட்டணம் செலுத்தி மண்டபவசதியினை சபையின் நிபந்தனைகளிற் கமைய பெற்றுக்கொள்ளமுடியும்.

**14.பொதுப்பயன்பாட்டுச் சேவைகள்**
எமதுசபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள், ஆயுர்வேத மருத்துவநிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலை என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் இலவசமாக வழங்கி வருகின்றன. எனவே அச்சேவையினை முழுமையாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**15.மயானங்களின் பாவனை**
எமது பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட மயானங்களில் (இடுகாடு, சுடுகாடு) ஈமக்கிரியைகளை மேற்கொள்பவர்கள் குறித்த மயான அபிவிருத்திச் சபையினருடன் தொடர்புகொண்டு அவர்களின் அறிவுத்தலின் பிரகாரம் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலே வழங்கப்பட்டுள்ள அறிவித்தல்களிற்கு மாறாக செயற்படுவோர் மீது1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்
இவ் அறிவித்தல் தொடர்பானமேலதிகவிபரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் கட்டண விபரங்களை தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**யுகராஜா ஜெலீபன்**
**செயலாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை**
**புத்தூர். 2018.01.01**

(C5288)(17.8)

**சேவை**

இலங்கையில் பிரசித்தி பெற்ற Sky wood man power நிறுவனத்தினால் தொழிற்சாலைகள் , தனியார்நிறுவனங்கள்மற்றும்கடைகள்போன் றவற்றிற்கு சகல விதமான வேலையாள்களை யும்பெற்றுக் கொள்ளலாம்.

(CS112460)

E-mail : skywoodmanpower@gmail.com

T.P:- 077 903 0408 / 0214595888

**வேலைவாய்ப்பு**

இலங்கையில் பிரசித்தி பெற்ற Skywood man power நிறுவனத்திற்கு சகல விதமான வேலையாள்களும் தேவை. முற்பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

(ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**" இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள் "**

(CS112461/16/17)


T.P:- 077 903 0408 / 0214595888

# தொப்பையைக் கரைக்கும், இதயநோயைத் தடுக்கும் பழங்கள்

வாழை, பப்பாளி, கொய்யா, அன்னாசி, மாதுளை போன்ற எளிதாகக் கிடைக்கும் பழங்கள் பலவித நோய்களில் இருந்து நமக்கு விடுதலை தரக்கூடியவை. மலச்சிக்கல் தொடங்கி இதயநோய் வரை அனைத்தையும் குணப்படுத்த க்கூடியவை.

**வாழைப்பழம்**

இயற்கையாகவே வாழைப்பழத்தில் அமில எதிர்ப்புச் சக்தி அதிகம். அதனால், தினமும் வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் நெஞ்செரிச்சல் பிரச்சினையில் இருந்து விடுதலை கிடைக்கும். உடல் பருமன் உள்ளவர்கள், மெலிந்த தேகம் உள்ளவர்கள் என அனைவருமே வாழைப்பழத்தைச் சாப்பிட்டு அதன் பலன்களை அடையலாம். புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் அந்தப் பழக்கத்தில் இருந்து விடுபட, வாழைப் பழத்தைச் சாப்பிடலாம். வாழைப்பழத்தில் உள்ள பி 6, பி 12 போன்றவை புகை பிடிக்கத் தூண்டும் நிகோட்டினை சிறிது சிறிதாகக் குறைக்க உதவும். இதன் மூலம் புகைப் பழக்கத்தில் இருந்து விடுபட முடியும்.



**பப்பாளிப்பழம்**

ஆண்டுமுழுவதும் கிடைக்கும் பழங்களில் ஒன்று, பப்பாளி. இதில் விற்றமின் 'ஏ' உயிர்ச்சத்து நிறைந்துள்ளதால், பல் தொடர்பான குறைபாட்டைத் தீர்க்கவும், சிறுநீர்ப் பையில் ஏற்படும் கற்களைக் கரைக்கவும் உதவுகிறது. மேலும், இது நரம்புகள் வலுப்பெறவும், ஆண்மைப் பலம் கிட்டவும், குருதி விருத்தி பெறவும், ஞாபக சக்தி அதிகரிக்கவும் துணைபுரிகிறது.

பெண்களை அவதிப்படுத்தும் மாதவிடாய்க் கோளாறுகளைச் சரி செய்ய நல்லதொரு மருந்தாகிறது. மேலும் இதில் உள்ள கரோட்டின் சத்து, புற்றுநோய்க்கு எதிரியாகும். நுரையீரல், உணவுக்குழாய், இரைப்பை மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய்கள் வராமல் தடுக்கக்கூடியது. பழுக்காத பப்பாளிப்பழத்தை தினமும் 250 கிராம் அளவு உணவுக்கு முன்னர் சாப்பிட்டு வந்தால், சிறுநீரில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும். மேலும் சமிபாட்டுக்கு கோளாறு, வயிற்றுக்கடுப்பு, மலச்சிக்கல் போன்ற தொந்தரவுகளுக்கும் நல்ல மருந்தாகும்.

**கொய்யாப்பழம்**

கொய்யாப்பழத்தில் விற்றமின் 'சி' அதிகம் இருப்பதால், வளரும் சிறார்களின் எலும்புகளுக்கு பலமும் உறுதியும் தரும். மலச்சிக்கல் கோளாறு இருப்பவர்கள் நார்ச்சத்து நிறைந்த கொய்யாப்பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும். கொய்யாவுடன் ஒரு கரண்டி தேன் சேர்த்தும் சாப்பிடலாம். சொறி, சிரங்கு மற்றும் குருதிச்சோகை இருப்பவர்கள் கொய்யாப்பழம் சாப்பிடுவது நலம் பயக்கும். விற்றமின் 'பி', கல்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்துகள் நிறைந்த கொய்யா தோல் வறட்சியைப் போக்கும், முதுமைத் தோற்றத்தைக் குறைத்து இளமையை மிளிரச் செய்யும்.

**அன்னாசிப்பழம்**

அன்னாசிப்பழத்தில் விற்றமின் 'பி' உயிர்ச்சத்து உள்ளது. இது உடலுக்குப் பலம் தருவதுடன்,குருதியை விருத்தி செய்யக்கூடியது. வெள்ளைப்படுதல் பிரச்சினை உள்ள பெண்கள் தொடர்ந்து அன்னாசிப்பழம் சாப்பிட்டு வந்தால், நிவாரணம் கிடைக்கும். அன்னாசியில் பொட்டாசியம், கல்சியம், மங்கனீஸ், தாது உப்புகள் போன்ற முக்கிய சத்துகள் அடங்கியுள்ளன. தாது உப்புகள் உடலில் ஏற்படும் வளர்சிதை மாற்றத்துக்கு மிகவும் முக்கியமாகும்.

கொழுப்புச்சத்து குறைவாகவும், நார்ச்சத்து அதிகமாகவும் உள்ள அன்னாசி இதய நோய் வராமல் தடுக்கக்கூடியது. தொப்பையைக் கரைக்க முடியாமல் கஷ்டப்படுபவர்களுக்கு அன்னாசி ஒரு நல்ல மருந்து. அன்னாசிப்பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி, நான்கு டேபிள்ஸ்பூன் பொடியாக்கிய ஓமம் சேர்த்து நீர் ஊற்றிக் காய்ச்ச வேண்டும். அதை ஒரு பாத்திரத்தில் இரவு முழுவதும் ஊறவைத்து காலையில் எழுந்து வடிகட்டி, வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இப்படி தொடர்ந்து 10 நாள்கள் பருகிவந்தால், தொப்பை குறையும். மிளகு ரசத்துடன் அன்னாசிப்பழம் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் உடல் நிறைக் குறையும்.

**மாதுளம்பழம்**

இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என மூன்று ரகங்கள் உள்ள மாதுளம்பழம், இதயம், மூளை போன்றவற்றுக்கு சக்தி தரக்கூடியது. புளிப்பு மாதுளை வயிற்றுக்கடுப்பைப் போக்கும். குருதிப்பேதிக்கு நல்ல மருந்தான மாதுளை, தடைபட்ட சிறுநீரை வெளியேற்றவும் செய்யும். குடல்புண்ணை ஆற்றும். கர்ப்பகாலத்தில் ஏற்படும் வாந்தியை நிறுத்த மாதுளம்பழத்தின் சாறை அருந்தலாம். மேலும் இது, கர்ப்பகால குருதிச்சோகையைப் போக்கும். உடல்சோர்வைப் போக்க மாதுளம்பழத்தின் சாறுடன் கற்கண்டு சேர்த்துச் சாப்பிடலாம். மாதுளை கடுமையான இதய வலியைப் போக்கக்கூடியது. பழங்கள் எல்லாமே நற்பலன்களைத் தருபவைதான். அவற்றிலும், மேற்கண்ட 5 பழங்களை அன்றாடம் நம் உணவில் சேர்த்துவந்தால், நோய்களை வராமல் பார்த்துக்கொள்ளலாம்.

## குழந்தைகள் மண் சாப்பிட காரணம் என்ன?



குழந்தைகள் மண் சாப்பிம் பழக்கம் PICA என்று அழைக்கப்படுகிறது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளிடமே இந்தப் பழக்கம் அதிகம் காணப்படுகிறது. பெற்றோரின் அன்பு மற்றும் அரவணைப் பின்மை, பாதுகாப்பற்ற உணர்வு, பெற்றோர் உணவூட்டும் பழக்கங்களிலுள்ள குறைபாடுகள், குருதிச்சோகை, மனவளர்ச்சிக் குறைபாடு போன்ற காரணங்களால் மண் சாப்பிடும் பழக்கம் உருவாகி, வளர்ந்து நீடிக்கிறது. குழந்தைகளின் தோற்றம் செயல்பாடு, மனநிலைகளுக்கேற்ப, கல்கேரியா கார்ப், சிலிகா, சிகூடா, அலுமினா, பெர்ரம்மெட், நேட்ரம்மூர், சினா, கல்கேரியாபாஸ், நைட்ரிக் ஆசிட், நக்ஸ்வாமிகா போன்ற ஹோமியோபதி மருந்துகள் மண், சாம்பல் சாப்பிடும் பழக்கத்தை மாற்றியமைக்க உறுதியாக உதவும். மலர் மருந்துகளில் வால்நட், வொய்ட் செஸ்ட்நட் பட், சொர்ரிப்பழம், சிக்கரி போன்ற மருந்துகள் குழந்தைகளிடம் வியக்கத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும்.

மேலும் வளரும் குழந்தைகளில் காணப்படும் பொறாமை, சந்தோஷம், பயம், தாழ்வு மனப்பான்மை,கோபம், எரிச்சல், பிடிவாதம், மந்தம், சோம்பல், ஞாபகக் குறைபாடு, பிறரைக் குறை கூறும் சுபாவம் போன்ற இயற்கைக்கு மாறான பல்வேறு குணக்கேடுகளையும் மாற்றி குழந்தைகளிடம் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், குழந்தைகளின் மன ஆற்றல்களை அதிகரிக்கவும் செய்ய வேண்டும்.

**மரண அறிவித்தல்**

**சிவசாமி காளிதாஸ்**

*(நாதஸ்வர வித்துவான்)*



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி காளிதாஸ் (நாதஸ்வர வித்துவான்) நேற்று (31.12.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசாமி - சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிங்காரவேலு - காமாட்சி அம்மாள் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கலாதேவியின் அன்புக் கணவரும் கார்த்திகன், சுபாங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரூபனின் அன்பு மாமனும் கோவர்ஷியின் அன்புப் பேரனும் சுசீலாதேவி, கருணாநிதி, ஜெயாநிதி, கலாநிதி (கனடா), பாலசரவணபவன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகேந்திரன், ஜெயராசா காலஞ்சென்ற சண்முகதாஸ் மற்றும் சிவகுருநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**63/2, சங்கிலியன் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 635 4197**

(CS 12453/15/17)

**மரண அறிவித்தல்**



பிறப்பு
29
08
1939

இறப்பு
31
12
2017

**இளையதம்பி கனகசபாபதி**

**(ஓய்வுபெற்ற உப அதிபர்)**

நயினாதீவு, 5' ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.76, மணியகாரன் வீதி, கொக்குவிலைவசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கனகசபாபதி 31.12.2017 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மனோன் மணி தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னபூரணியின் அன்புக் கணவரும் சுகந்தி (ஆசிரியை - யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), பிரதீபன் (பொறி யியலாளர் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் நடேசராசன் (வைத்தியப் பொறுப்பதிகாரி - சித்த மத்திய மருந்தகம், வேலணை), துஷிதா (கணக்காளர் - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும் மங்கையற்கரசியின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சரவணபவன் (அதிபர்), சந்திரசேகரம், இராசபூரணி மற்றும் செல்வபூரணி (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் காமாட்சி சுந்தரம் (அதிபர்), கனகம்மா (ஆசிரியர்), செல்வரத்தினம், தவமணி ஆகியோரின் சம்மந்தியும் கமலாசினிதேவி, சாம்பசிவம் மற்றும் அரியரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் யானுகா, திவ்யா, ஜீவகாஷ், சஷ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2018) செவ்வாய்க் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**76, மணியகாரன் வீதி, கொக்குவில்**
**021 205 2394**

தகவல்: **குடும்பத்தினர்.**

(CS 12441/15/17)

# புலிகளின் தீர்மானத்தை நோக்கியே கூட்டமைப்பை நகர்த்த முயல்கிறோம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தீர்மானத்தை நோக்கி கூட்டமைப்பை நகர்த்த முயற்சிக்கிறோம். காலத்தின் தேவை கருதி தமிழ்த் தேசியத்துக்காகவே தேசியத் தலைவர் கூட்டமைப்பை உருவாக்கியிருந்தார். என்று ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்தது.

வவுனியா குருமன்காட்டில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் இருக்கின்றதோ இல்லையோ ஒட்டு மொத்தமாக தமிழர்கள் தங்களது ஒற்றுமையின் ஊடாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே இதுவரை காலமும் பலப்படுத்தி வந்திருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக தமது அரசியல் முகவரியைப் பெற்றுக்கொண்டவர்கள் தாயகப் பிரதேசத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சிதைத்தழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப்புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களது அரசியல் வடிவமாகப் பயணிப்பது காலத்தின் கட்டாயம்.

அந்தவகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றிபெற நாம் முழுமையான ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியிருக்கிறோம். நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தாமல் விட்டால் ஏனைய தேசியக் கட்சிகள், தமிழ்த் தேசியத்தினூடாகத் தமது பிரதிநிதித்துவத்தைப் பெறக்கூடிய நிலையேற்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சில விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் தமிழர்களின் ஒற்றுமையின் வெளிப்பாடு. அனைத்துப் போராளிகளும் ஜனநாயகப் போராளிகள் கட்சியுடன் இணைந்தே பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். எம்மிலிருந்து பிரிந்து சென்ற ஒருசில நபர்கள்தான் கட்சிகளையும் முரண்பாடான தோற்றப்பாட்டையும் உருவாக்கி செயற்பட்டுக்கொண்டடிருக்கிறார்கள். ஆனால் ஏனைய போராளிகள் எம்மோடு இணைந்து தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்துவதற்கான பயணத்தில் கைகோர்த்துள்ளனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு 2001 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டபோது அந்தக் கட்டமைப்பில் இருந்தவர்களை விட விடுதலைப் புலிகளில் மிகத் திறமையான அரசியலாளர்கள் இருந்தார்கள். ஆனால் காலத்தின் தேவை கருதியே தமிழ்த் தேசியத்துக்காக ஒன்றிணைத்துத் தேசியத் தலைவர் கூட்டமைப்பை உருவாக்கியிருந்தார். இந்த நிலையில் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளால் எட்டப்பட்ட தீர்மானத்தை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நகர்த்துவதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம் - என்றார். (4)

---

### அரச தலைவர்...

நேற்றுமுன்தினம் கையளித்தது. இந்த அறிக்கை இப்போது வெளியிடப்பட்டால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கருதுகின்றது. எனவே உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் அறிக்கையை வெளியிடுமாறு அந்தக் கட்சியின் மூத்த தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரைச் சந்திக்கவும் அமைச்சர்கள் சிலர் முடிவு செய்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா மேற்கண்டவாறு கூறினார்.

"பிணைமுறி விவகாரத்தில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சி செயற்பட்டு வருகின்றது. விசாரணை அறிக்கைக்கு அமைவாக அரச தலைவர் மைத்திரிபால நடவடிக்கை எடுப்பார். உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாக அந்த நடவடிக்கையை முன்னெடுப்பார்" -என்றார். (உ-5,31)

### நிரந்தரமான...

ளாய் சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் உழைக்க முன்வர வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும்.

இந்தப் புதிய வருடத்தில் முன்னேறிச் செல்கின்றவேளை கடந்த வருடத்தில் நாம் கண்ட சாதகமான காரியங்களையும் நாம் கற்றுக்கொண்ட பாடங்களையும் மனதில் முன்னிறுத்திக் கொள்வோமாக.

இந்தப் புதிய வருடத்தை ஆரம்பிக்கின்ற வேளை, இந்த நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வை அடையும் நோக்கில் சேர்ந்து செயற்பட முன்வருமாறு நான் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் தலைவர்களிடமும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இதனை செய்வதன் மூலம் எமது எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வளமான எதிர்காலத்துக்கு நாம் வழிசமைக்க முடியும். அனைவருக்கும் ஆசிர்வாதமான இனிய புத்தாண்டு வாழ்த்துகள் - என்றுள்ளது. (உ-5)

### எம்.பிமாருக்கு...

மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு 24 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரை ஆண்டுக்கு வழங்கப்படுகின்றது; இன்று தொடக்கம் 48 ஆயிரம் ரூபாவாக இது அதிகரிக்கப்பட்டுள்ளது. (உ-5)

### சட்டமா...

கப்படுத்துவது ஆகியன எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தும் என்பதால் அதனைத் தேர்தலின் பின்னரே மேற்கொள்ளவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் கருதுகின்றனர்.

அதேநேரத்தில் அறிக்கையை வெளியிட்டால் அதனால் பாதிக்கப்படப்போவது ஐக்கிய தேசியக் கட்சியே என்கிற நிலையில் சுதந்திரக் கட்சிக்கு அது நன்மை பயக்கும் என்பதால் அரச தலைவர் அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவதுடன் அதன் மீது நடவடிக்கையையும் உடனடியாக எடுக்கவேண்டும் என்று சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பல தலைவர்களும் கருதுகின்றனர். இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக நேரம் ஒதுக்கித் தருமாறு ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கையையும் மைத்திரிபால சிறிசேன நிராகரித்திருந்தார். இப்போது அப்படிப்பட்ட சந்திப்பு ஒன்றை நடத்துவது தனது முடிவில் ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு உள்ளது என்பதாக வெளிக்காட்டிவிடும் என்று அதற்குக் காரணமும் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே சட்டமா அதிபருடன் இது தொடர்பில் அரச தலைவர் கலந்துரையாடவுள்ளார். (உ-5)

### அரச பேருந்து...

னிச்சையான நடவடிக்கைகளைக் கண்டித்தும் பாரம்பரியம் மிக்க வவுனியா மத்திய பேருந்து நிலையத்தை எம்மிடமிருந்து பறிக்கும் நடவடிக்கையைக் கண்டித்தும், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளை அவமதித்தமையைக் கண்டித்தும் மற்றும் பல கோரிக்கைகளை முன்வைத்துமே இந்தப் போராட்டத்தை நடத்துகின்றோம்.

மக்களால் மக்களுக்காக ஒன்றுபட்டுத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர், மக்களின் நலன்களைக் கருத்தில் எடுக்காது, தன்னால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இம்மியும் தளராது நிறைவேற்றுவேன் என வைராக்கியத்துடன் கூறுவதை நாம் கண்டிக்கின்றோம்.

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை போராட்டத்தை நாம் நிறுத்தமாட்டோம். அத்துடன், எமக்கு ஆதரவாக கிழக்கு மாகாண சாலைகளின் பேருந்துகளும் வடக்குக்கான சேவைகளை இடைநிறுத்தி எமக்கு ஒத்தழைப்பு வழங்குவதாக அறிவித்துள்ளன. எனேவே போராட்டம் திட்டமிட்டபடி தொடரும்-என்றார்.

இது தவிர காரைநகர் சிவன் கோவிலில் இன்று தேர்த் திருவிழா இடம்பெறுகிறது. காரைநகர் சாலை பேருந்துகள் மாத்திரம் இன்று பணியில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

### ஊடகங்களுக்கான...

கிழமை கையெழுத்திடவுள்ளார்.

இது தொடர்பில் தலைமை அமைச்சர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

அரசமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு அமைவாக தேர்தல் காலங்களில் பக்கச்சார்பற்று நீதியாக ஊடகங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக பத்திரிகை ஆசிரியர்கள் உடனான கலந்துரையாடல் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றது.

கலந்துரையாடல்களின்படி தேர்தல் காலத்தில் ஊடகங்கள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்து அனைத்து ஊடகத்தினரினதும் இணக்கத்துக்கு அமைவாக இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன. அவையே அரசிதழ் அறிவிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஊடக செயல் நெறிக்கான அரசிதழ் அறிவித்தலுக்கு அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்ற அனுமதியைக் கோருவதற்கான ஆவணத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிடவுள்ளார் - என்றுள்ளது. (உ-5,31)

### வடக்கு...

ளுமன்ற உறுப்பினர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்று வடக்கு-கிழக்கு இணைப்பு வேண்டும் என்பதை வெறும் கோசமாக சொல்லிக் கொண்டிருப்பவர்கள் தான், வடக்கு கிழக்கு இணைப்பை சாத்தியமற்றதாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். மனதளவில், வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று நினைப்பவர்கள் அதனைக் கோசமாக முன்வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். இணைப்புக்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

வடக்கு - கிழக்கு இணைப்புவேண்டும் என்று வெறுமனே கூறினால் அது முஸ்லிம் மக்களின் மனதைப் பாதிக்கும். ஏனென்றால், தங்களுடன் கலந்தாலோசிக்காமல் அப்படி எவ்வாறு கூறமுடியும் என்று அவர்கள் சிந்திப்பார்கள். அதனால்தான் நாங்கள், வடக்கு-கிழக்கு மாகாணங்கள், முஸ்லிம் மக்களின் சம்மதத்துடன் இணைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றோம்.

வடக்கு கிழக்கு இணைப்பு என்பதை வெறும் கோசமாக மாத்திரம் பாவித்துக் கொண்டிருப்பவர்கள் பச்சை பச்சையாக பிரதேசவாதத்தை தமிழ் மக்கள் மத்தியில் அவிழ்த்து விட்டிருக்கின்றார்கள். கிழக்கில் கருணா செய்ததை, தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் செய்யப் பார்க்கின்றாரா என்று. எந்தவிதத் தொடர்பும் இல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். துரைராஜசிங்கம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக பிரதேசவாதத்தை வெட்கமில்லாமல் கிளப்பியிருக் கின்றார்கள்.

இப்படிச் செய்பவர்கள், கிழக்கு முஸ்லிம் மக்கள் மனதை மாத்திரம் அல்ல தமிழ் மக்களின் மனதையும் புண்படுத்துகின்றார்கள். வடக்கு கிழக்கு இணைப்பை தடுப்பதற்காகத்தான் இவ்வாறு செய்கின்றார்கள்.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில், வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பில் மூன்று தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வடக்கு கிழக்கு இணைப்புக்காக நாங்கள் அவ்வாறு வழிகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், வடக்கு - கிழக்கு இணைப்பை நாங்கள் கைவிட்டு விட்டோம் என்று சொல்லிக் கொண்டு வடக்கு கிழக்கு இணைப்பையே இல்லாமல் செய்கின்ற வேலையைத்தான் செய்து கொண்டிருக்கின்றார்கள் - என்றார். (உ-5)

### வாக்காளர்...

உள்ளூராட்சித் தேர்தல் நாடு முழுவதிலும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தேர்தலுக்கான வாக்காளர் அட்டை அச்சிடும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வாக்காளர் அட்டை எதிர்வரும் 18ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளது. அதற்கு மறு நாளிலிருந்து வாக்காளர் அட்டைய்ை விநியோகிக்கும் பணியை தபாூல் திணைக்களம் முன்னெடுக்கும். எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் வாக்காளர் அட்டை விநியோகப் பணி நடைபெறும்.

பெப்ரவரி 3ஆம் திகதிக்குப் பின்னர் வாக்காளர் அட்டை விநியோகம் நடைபெறாது. தபால் திணைக்களத்திடமே எஞ்சிய வாக்காளர் அட்டை இருக்கும். உரிய வாக்காளர் தபால் திணைக்களத்திடம் சென்று அதனைப் பெற்றுக் கொள்ள முடியும், என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு வெளியான கையோடு தாம் வாக்காளர் அடையாள அட்டை விநியோகத்தை நிறுத்தப்போவதாகத் தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது.

"தபால் திணைக்களத்தில் நிர்வாக கட்டமைப்பை மாற்றுமாறு கோரி நாம் ஏற்கனவே நாடு முழுவதிலும் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளோம். எமது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை. நாம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வில்லையாயின், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் முற்றாக நிறுத்தப்படும். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு அரசுதான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்"என்றார் சிந்தக பண்டார. (உ-5)

### புதிய...

கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட அந்தப் பேருந்து நிலையத்தில் ஒரு வருடத்தின் பின்னர் பேருந்து சேவைகள் இடம்பெறவுள்ளன.

புதிய பேருந்து நிலையத்தில் இருந்து சேவையாற்ற போக்குவரத்துச் சபையினர் தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வந்த நிலையில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமலேயே தொடர்ந்து வந்தது.

இது தொடர்பிலான துண்டறிக்கைகள் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்று நகர சபையினால் ஒட்டப்பட்டன.

"வடக்கு மாகாண முதலமைச்சரின் பணிப்புரைக்கு அமைய வவுனியா நகரசபைக்குரிய பேருந்து நிலையம் 31.12.2017 (நேற்று) நள்ளிரவு 12 மணியில் இருந்து மூடப்படவுள்ளதால் 01.01.2018 (இன்று) முதல் பொது மக்கள் தமது பயணங்களை புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

நவீன வசதிகளுடன் கூடியதாக 195 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டது வவுனியா புதிய பேருந்து நிலையம். 2016 ஜனவரி மாதம் 16 ஆம் திகதி கொழும்பு போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வாவினால், மக்களின் பாவனைக்காக அது திறந்துவைக்கப்பட்டது.

13 பேருந்துகள் மாகாணங்களுக்கிடையிலான சேவையிலும், 21 பேருந்துகள் உள்ளூர் சேவையிலும் ஈடுபடும் வகையில் இந்தப் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையத்துக்கு நாளாந்தம் 100 பேருந்துகள் வந்து செல்லும் என திறப்பு விழாவின் போது விருந்தினர்களால் தெரிவிக்கப்பட்டது. எனினும் திறப்பு விழாவுக்கு அடுத்த நாள் முதலே அங்கு சேவைகள் இடம்பெறுவதில் இழுபறிநிலை ஏற்பட்டது.

இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து சாரதிகள் முட்டி மோதிக் கொண்டனர். இதனால் அங்கு எந்தச் சேவைகளும் இடம்பெறாது பேருந்து நிலையம் வெறிச் சோடியிருந்தது. கடந்த 25ஆம் திகதி முதல் அங்கு சேவைகள் இடம்பெறவேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தார். அதற்கு இ.போ.சவினர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். அன்றையதினம் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் மீண்டும் தனியார்- இ.போ.சவினர் மோதிக்கொண்டனர். பயணிகள் அந்தரித்தனர். விடயம் மாவட்ட நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஒரு வாரத்தில் உரியவர்களுடன் கலந்துரையாடி தீர்வு பெறப்படவேண்டும் என்று மன்று உத்தரவிட்டிருந்தது. (உ-21)

### கால எல்லை...

நீடிப்பு மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருந்தார். இதன் காரணமாக மார்ச் முதலாம் திகதி வரையில் கால நீடிப்புச் செய்துள்ளோம்" என்று ஆளுநர் தெரிவித்தார். (உ-5)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 1
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சண்சையின் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## வென்றது யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம், ஜன. 1
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.
யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அல்மாதர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## திக்கம் அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 1
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் விகைல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணி அபார வெற்றிபெற்றது.
திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். றொக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:1 என்ற கோல் கணக்கில் திக்கம் வென்றது. (ம-23)




# யாழ். மத்திய கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 1
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கம் நடத்தும் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இன்னிங்ஸால் வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து அக்குறனை அசார் கல்லூரி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கண்டி அக்குறணை அசார் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. கண்டி அக்குறணை அசார் கல்லூரி அணி 32.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிசாந் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் சார்பில் துசாந்தன் 7 இலக்குகளை வீழ்த்தினார்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 5 இலக்குகளை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றது. ஜயதர்சன் 112 ஓட்டங்களையும், தசோபன் ஆட்டமிழக்காமல் 114 ஓட்டங்களையும், கௌதமன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.
அசார் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸிற்காக 73 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக மொகமட் 20 ஓட்டங்களைப் பெற்றார். (ம)

## இரவு ஆட்டங்கள் இல்லை

இன்று முதல் கரப்பந்தாட்டத் தொடர்கள் இரவு நேரங்களில் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க செயலாளர் தயாளபாலன் அறிவித்துள்ளார்.
அண்மையில் நடுவர்களின் பாதுகாப்பு கருதி இரவு நேரங்களில் கரப்பந்தாட்டத் தொடர்களை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என கரப்பந்தாட்டச் சங்கம் தீர்மானம் எடுத்திருந்தது. இந்த நிலையில் இந்தத் தீர்மானம் தொடர்பில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் மறு அறிவித்தல் வரும்வரை தீர்மானம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் எனவும் தயாளபாலன் மேலும் தெரிவித்தார். (ம-422)

## அணியில் சமநிலை உள்ளது ஆதலால் வெற்றிபெற வாய்ப்பு

### கோக்லி நம்பிக்கை

இந்திய அணி அனைத்துத் துறைகளிலும் சமநிலையுடன் உள்ளது. ஆதலால் வெற்றிக்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.
இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர் தொடர்பான வாதப்பிரதி வாதங்கள் தற்போது முழுமூச்சில் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் இவ்வாறான ஒரு கருத்தை முன்வைத்துள்ளார் கோக்லி.
'நாங்கள் சரியான வகையிலான மூன்று துறைகளிலும் செயற்பட்டு வருகின்றோம். எங்களுடைய நினைப்பு எல்லாம் திறமையை சரியான வகையில் வெளிப்படுத்தி, சிறப்பான ஆட்டத்தை வழங்கி தொடரில் வெற்றி பெற வேண்டும் என்பதே. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று அனைத்துத் துறைகளிலும் அணி பலம்பெற்றிருக்கையில் தென்னாபிரிக்காவின் தொடரைக் கைப்பற்றுவது என்பது சாத்தியமே' என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 1
யாழ்ப்பாண மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் தலைவராக மா.இளம்பிறையன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.
யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலகர் சங்க பொதுக் கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
மா.இளம்பிறையன், செயலாளராக சிவச்செல்வன். பொருளாளராக கஜேந்திரன், உபதலைவர்களாக எஸ்.வசந்தகுமார், சதீஷ்குமார், சுதாகரன். உப செயலாளராக ஜி.ஏ.கிறேஸியன் மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக சுரேந்திரா, ஜெயந்தன், கணநாதன், ஸ்ரீரமணன், எஸ்.கரன், ஆகியோருடன் உள்ளக கணக்காய்வாளராக முருகவேள் தெரிவு செய்யப்பட்டனர். (ம-422)

## எதையும் சாதிப்பார் கோக்லி இப்படிச் சொல்கிறார் கலிஸ்

இந்திய அணியின் தலைவரான கோக்லி எதையும் சாதிக்கும் வல்லமை மிக்கவர் என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் கலிஸ்.
இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான தொடர் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் தொடர் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கலிஸ் இவ்வாறு தெரிவித்தார்.
'விராட் கோக்லி உலகின் தலைசிறந்த வீரராக உருவாகி உள்ளார். அணியின் முடிவுகள் அவர் அற்புதமான வீரர் என்பதைக் காட்டுகிறது. கோக்லி தன்னைத்தானே வலுவானவராகக் கட்டமைத்துள்ளார். இந்திய அணியில் வேகப்பந்து வீச்சில் திறமை வாய்ந்த வீரர்கள் உள்ளனர். இங்குள்ள சூழ்நிலை இந்தியாவைவிட வேகப்பந்து வீச்சுக்கு சற்று உதவும். இதனால் இந்திய அணியின் பெறுபேற்றைக் காண்பதற்கு ஆவலாய் உள்ளேன்' என்று கலிஸ் மேலும் தெரிவித்தார். (ம)



# ஜோகோவிக் விலகல்

கட்டார் ரென்னிஸ் தொடரில் இருந்து நடப்புச் சம்பியனான ஜோகோவிக் விலகியுள்ளார்.
கட்டார் தொடர் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது. கடந்த வருடம் இந்தத் தொடரில் ஜோகோவிக் சம்பியனாகியிருந்தமையால் இந்த வருடம் அவர் மீது பெரியளவில் எதிர்பார்ப்பு இருந்தது. இந்த நிலையில் சற்றும் எதிர்பாரா வகையில் தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார்.
முழங்கையில் ஏற்பட்ட காயத்தை அடுத்தே அவர் தொடரில் இருந்து விலகியுள்ளார். கட்டார் தொடரில் இருந்து அவர் விலகியமை இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் நடைபெறவிருந்த ஆஸ்திரேலியத் தொடரிலும் அவர் பங்குபற்றுவதை சந்தேகத்துக்கு உள்ளாக்கியுள்ளது. (ம)





# 2017ஆம் ஆண்டின் கிரிக்கெட் அரங்கு இந்திய அணி ஆகக்கூடிய ஆதிக்கம்

கடந்த வருடம் பன்னாட்டுக் கிரிக்கெட் அரங்கில் நிகழ்ந்த முக்கிய பதிவுகள் மற்றும் சாதனைகள் தொடர்பில் இந்தப் பத்தி ஆராய்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் இந்திய அணியினதும் இந்திய வீரர்களினதும் ஆதிக்கமே கடந்த வருடத்தில் மிகைந்திருந்திருக்கிறது.



**டெஸ்ட் ஆட்டங்கள்**

கடந்த ஆண்டில் மொத்தம் 47 டெஸ்ட் ஆட்டங்கள் அரங்கேறின. 40 ஆட்டங்களில் முடிவு கிட்டியது. அதிக வெற்றிகளை இந்திய, தென்னாபிரிக்க அணிகள் பதிவுசெய்தன. அதாவது 11 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள இந்திய அணி 7 வெற்றியுடன் மூன்றில் சமநிலையும், ஒன்றில் தோல்வியும் கண்டிருந்தது. தென்னாபிரிக்க அணியும் 7 வெற்றிகளைப் பெற்றுள்ளது.



அதிக டெஸ்ட் ஓட்டங்களைக் குவித்த தனிநபர் வீரர்களின் பட்டியலில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித் முதலிடத்தில் உள்ளார். அவர் 11 டெஸ்டில் 6 சதங்கள், 3 அரைச்சதங்கள் உள்பட ஆயிரத்து 305 ஓட்டங்களைக் குவித்துள்ளார். தனிநபர் அதிகபட்சமாக இங்கிலாந்து வீரர் அலிஸ்டர் குக் 244 ஓட்டங்களைப் பெற்றமையே சாதனையாக இருந்தது.

92 சதங்கள் அடிக்கப்பட்டன. இதில் 8 இரட்டைச்சதங்கள் அடங்குகின்றன. இந்திய அணியின் தலைவர் கோக்லி மூன்று இரட்டைச் சதங்களைப் பதிவுசெய்திருந்தார். ஒரு அணியானது 600 ஓட்டங்களுக்கு மேல் குவிக்கும் நிகழ்வு 6 தடவைகள் அரங்கேறியுள்ளன. இதில் இந்தியாவின் பங்களிப்பு 5 தடவைகள். இந்திய அணி, பங்களாதேஷுக்கு எதிராக 6 இலக்குகள் இழப்புக்கு 687 ஓட்டங்கள் குவித்தமை இந்த ஆண்டில் ஒரு அணியின் சிறந்த பெறுபேறு. சிம்பாப்வே அணி, தென்னாபிரிக்காவுக்கு எதிராக 68 ஓட்டங்களில் சுருண்டது மோசமான பெறுபேறு.

அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வீரர்களின் பட்டியலில் 6 இடங்கள் சுழற்பந்து வீச்சாளர்களுக்குக் கிடைத்துள்ளன. ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் நாதன் லையன் 11 டெஸ்டில் 63 இலக்குகளைச் சாய்த்து முதலிடத்தில் உள்ளார். ஓர் இன்னிங்ஸில் 5 இலக்குகளை அவர் 5 தடவைகள் கைப்பற்றியுள்ளார்.

**ஒருநாள் ஆட்டங்கள்**

கடந்த ஆண்டில் நடந்துள்ள ஒரு நாள் ஆட்டங்களின் எண்ணிக்கை 129. இதில் அதிக வெற்றிகளை ருசித்த அணியாக இந்தியா உள்ளது. அந்த அணி 29 ஆட்டங்களில் 21 வெற்றிகள், 7 தோல்விகள், ஓர் ஆட்டத்தில் முடிவில்லை. இலங்கைக்கு எதிராக இந்தியத் துடுப்பாட்ட வீரர் ரோகித் 208 ஓட்டங்களை விளாசியமை தனிநபர் அதிகபட்சமாகும். கோக்லி ஆயிரத்து 460 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதன்படி கடந்த ஆண்டில் அதிக ஓட்டங்களைப் பதிவு செய்த வீரராக கோக்லியே உள்ளார்.

86 சதங்கள் பதிவுசெய்தன. தனிநபர்களைப் பொறுத்தவரையில் கோக்லியும், ரோகித் சர்மாவும் தலா 6 சதங்களுடன் முதலிடத்தில் உள்ளனர்.

இலங்கைக்கு எதிராக இந்திய அணி 4 இலக்குகள் இழப்புக்கு 392 ஓட்டங்கள் எடுத்ததே கடந்த ஆண்டில் ஒரு அணியின் அதிகபட்சமாகும். ஆப்கானிஸ்தானுக்கு எதிராக சிம்பாப்வே 54 ஓட்டங்களில் சுருண்டது குறைந்தபட்ச மாகும்.

**ரி–20 ஆட்டங்கள்**

கடந்த ஆண்டு 63 ரி-20 ஆட்டங்கள் நடந்தன. 6 சதங்கள் விளாசப்பட்டன. இந்த சரவெடி ஆட்டத்திலும் இந்தியாவின் ஆதிக்கம் மேலோங்கி இருந்ததை காண முடிந்தது. அந்த அணி 13 ஆட்டங்களில் 9 ஆட்டங்களில் வெற்றியும், 4 ஆட்டங்களில் தோல்வியும் சந்தித்துள்ளது. அத்துடன் அதிகபட்ச ஓட்டங்களையும் இந்தியாவே பதிவு செய்துள்ளது. இலங்கைக்கு எதிராக 5 இலக்குகளை இழந்து 260 ரன்கள் குவித்து மலைக்க வைத்தது நினைவிருக்கலாம்.




அதிக சிக்சர்களைப் பதிவுசெய்தவர்களில் இந்தியாவின் ஒரு நாள் ஆட்டங்களில் ரோகித் சர்மா, டெஸ்ட் ஆட்டங்களில் நியூசிலாந்தின் கிராண்ட்ஹோம், மேற்கிந்தியத் தீவுகளின் லூயிஸ் ஆகியோர் உள்ளனர். (ம)

## அறிமுகமாகிறார் அகர்

இங்கிலாந்துக்கு எதிரான ஆசஸ் தொடரின் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்டுக்கான ஆஸ்திரேலிய அணியில் அகர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த ஆட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ளது. சிட்னி ஆடுகளம் சுழலுக்கும் ஒத்துழைக்கும் என்பதாலேயே அகருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதம் இந்தியாவுக்கு எதிரான தொடரில் களமிறங்கிய பின்னர் அகர் ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## இரண்டாவது ரி–20 இன்று

நியூசிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதலாவது ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கிறது நியூசிலாந்து அணி. இந்த நிலையில் இரண்டாவது ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றால் கிண்ணம் அந்த அணியிடம் சென்றுவிடும் எனவே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற சிக்கல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு உள்ளது. (ம)



**JAFFNA SCIENCE COLLEGE**
G.C.E (A/L) BIO, MATHS Classes
★ Chemistry - Mr.S.Sureshkumar (B.Sc (Hons), PGDE)
★ Physics - Mr.S.Uiroviyam (B.Sc (Spl), M.Ed)
★ Com.Maths - Mr.B.Mayuran (B.Sc)
★ Biology - Mr.P.S. Tharan (B.Sc, PGDE)
A/L 2018, 2019, 2020 Batches & Day Classes Start - 01.01.2018 , 3.00 pm
T.P : 077 555 9028
077 224 7592
G.P.S Road, Kalviyankadu.
(cs 12440)(17.5)

பல தனியார் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அடித் தளமிட்ட கணக்கீட்டு ஆசிரியர் தற்போது தனி வழியில்...
கணக்கீடு
**P.பகீரதன் B.B.A (FM Spl)**

| VAI | IBS |
| --- | --- |
| கோண்டாவில் சந்தி, பலாலி வீதி | சுன்டுக்குளி |
| DAY CLASS | DAY CLASS |
| ஆரம்பம்:02.01.2018 (Tue) காலை 06.30 மணி | ஆரம்பம்:03.01.2017 (புதன்) காலை 6.30 மணி |
| A/L 2020 | A/L 2020 |
| ஆரம்பம்:06.01.2018 (சனி) மாலை 3.00 மணிக்கு | ஆரம்பம்:06.01.2018 (சனி) காலை 8.00 மணிக்கு |

தொடர்புகளுக்கு:-0774598499

**FLC FRENCH LANGUAGE CENTRE**
# FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Diploma Classes : DELF A1, A2, B1, B2.
40, பலாலி வீதி, இலுப்பையடி
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் :06.01.18 சனி காலை 10மணி
181, பிரதான வீதி, நெல்லியடி.
021 320 2973
ஆரம்பம் :08.01.18 மாலை 3.30மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(Ln 5154)(8)

**SPOKEN ENGLISH** 3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி
இம்முறை O/L எழுதியோர், வெளிநாடு செல்வோர், வீட்டுப்பெண்கள் ஆங்கிலம் பேசவிரும்புவோர் இணைந்துகொள்ளமுடியும்.
எம்து நேரடிஉரையாடற்பயிற்சி மூலமான இக் கற்கைநெறியில் அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் 3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 06.01.2018 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
பாடப்புத்தகங்கள், வீடியோ DVD, மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டும் - முன்பதிவுகள் ஒவ்வொருநாளும் பி.ப 4.30 வரை.
SAAMSON Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 486



## வென்றார் பெடரர்

பிரிஸ்பெய்ன் ரென்னிஸ் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தார் சுவிற்சர்லாந்து வீரரான பெடரர்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள பெடரரை எதிர்த்து ஜப்பானின் யூகி மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் வெற்றிபெற்றார் பெடரர். (ம)

சதுர அடி 3000 ரூபாவிலிருந்து உங்கள் தேவைகளுக்கேற்ப கட்டிக்கொடுக்கப்படும்.
SRI VASANTHAM ENGINEERING
Srivasanthamengineeing.com
No-300, Palaly Road, Kandarmadam, Jaffna.



021 222 6838 / 077 225 2944

Houses



Appatments



Low Budjet Houses



- கட்டட வரைபடம் (2D/3D)
- சட்டத்தரணியூடான உடன்படிக்கை
- உத்தரவாதத்துடன் கூடிய கட்டட நிர்மாணப்பணி
- அனுபவம் வாய்ந்த பொறியியலாளரின் மேற்பார்வை
- கட்டடங்களுக்கான விலைமதிப்புக்கள்
- பொறியிலாளர் ஆலோசனைகள்
- திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த வேலையாட்களின் உறுதியான கட்டுமானப்பணி

SRI VASANTHAM ENGINEERING

## மரணஅறிவித்தல்



மலர்வு 24 . 10 . 1972
உதிர்வு 30 . 12 . 2017

### திருமதி ஆனந்தலக்ஷ்மி சிவகாந்தன்

(ஆசிரியை - இணுவில் மத்திய கல்லூரி)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தலக்ஷ்மி சிவகாந்தன் 30.12.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு, இணுவில்.
தகவல்: குடும்பத்தினர்
(CS 12434) (14)

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 07 . 07 . 1926
இறைவன் அடியில் 22 . 12 . 2017

### பெரியதம்பி துரைச்சாமி

(ஓய்வுபெற்ற தபால் அத்தியட்சகர்)

யாழ்.உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பெரியதம்பி துரைச்சாமி 22.12.2017 வெள்ளிக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேர்ள் , அன்னலட்சுமி ஆகியோரின் அன்புக் கணவரும், அரியதுரை (ஆஸ்திரேலியா), சறோ (இலங்கை), பத்மா (இலங்கை), உதயகுமார் (லண்டன்), குசலகுமார் (லண்டன்), பிறேம்குமார் (லவன் - லண்டன்), றஜினி (லண்டன்), சிவலோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சிவநேஸ்வரி, சிவநாயகி, கந்தசாமி, சிவசூரியர் மற்றும் பரமேஸ்வரி (உரும்பிராய் இந்துக் கல்லூரி அருகில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இன்பஜோதி (ஆஸ்திரேலியா), மோகன் (இலங்கை), சுப்பிரமணியம் (இலங்கை), தயாநிதி (லண்டன்), பிருந்தா (லண்டன்), ஜனார்த்தினி (லண்டன்), சத்தியமூர்த்தி (லண்டன்), பரந்தாமன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், தம்பிரத்தினம் (இளவாலை), பற்றிமா (உரும்பிராய் இந்துக்கல்லூரி அருகில்) ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2018) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பற்றிமா (மருமகள்), ஜெயரூபகாந்தி (ரூபா - பெறாமகள்)**
(இந்துக்கல்லூரி அருகில் உரும்பிராய்)
(KN/343)(11.17)
**077 851 0671, 077 323 5788**

**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L DAY CLASS
கலை, வர்த்தகம் , தொழில்நுட்பம்
ஆரம்பம் :- 02/01/2018 செவ்வாய் காலை 7:00 மணி
A/L2020 புதிய பிரிவுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. c 5261.16.17


**பணிப்பெண் தேவை**
வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு : 077 480 9019

**டொச் மொழி வகுப்புக்கள்**
பிரபல ஆசிரியர்
திரு R.மயூரன் அவர்களின்
டொச்மொழி வகுப்புக்கள்
04.01.2018 இல்
யாழ். நகரில் ஆரம்பமாகின்றன.
German Swiss Academy
Near C.T.B. Bus stand, Jaffna.
077 645 4998

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவலிங்கம்

*(முன்னாள் சிங்கர் முகாமையாளர், யுபிலி பஜார், யாழ்ப்பாணம்)*



அளவெட்டிதெற்கைப்பிறப்பிடமாகவும்வவுனியா, 7ஆம் ஒழுங்கை, எல்லப்பர் மருதங்குளத்தை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா சிவலிங்கம் நேற்று (31.12.2017) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவலிங்கம் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் தம்பிராசா, லட்சுமணன், சிற்றம்பலம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவபரம் (புவியரசன் அழகுமாடம், கிளிநொச்சி), நிஷாந்தன் (திசா அழகு மாடம், வவுனியா), ஜெயகலா (பிரான்ஸ்), ரமேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவநிதி (கிளிநொச்சி), வசந்தசுதன் (பிரான்ஸ்), மாலினி (வவுனியா), சோபியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் புவிஅரசி, கலைச்செல்வன் தேனுஜா, றோகித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2018) திங்கட் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 175, எல்லப்பர் மருதங்குளம்,
வவுனியா.
தகவல்:
குடும்பத்தினர்.
077 282 2116/ 077 215 1209
(235/15/17)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Wish you a very Happy Christmas
And prosperous New Year 2018 !!!
To all our valuable customers and all Sri Lankans...
அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.
வணக்கம் இனிய வடமாகாண உறவுகளே....
PEACE
SKYMOON
TRAVELS & IMMIGRATION
WE MAKE YOUR DREAM COMES TRUE!!!
STUDENT VISA
JOB VISA
VISA
VISITOR VISA
REFUSED VISA
TOUR PACKAGE
BOUND
Providing our customers with excellent service is something we strive to do all year round.
We look forward to further working alongside our customers on their requirements on Travel/Tours and Visas with innovative solutions.
OUR SERVICES...
All kinds of visas for Canada
European visas
Visas for other countries
Air tickets all over the world, specially to Canada
Travels and Tours (inbound/outbound)
Vehicle rental
SKYMOON
TRAVELS & IMMIGRATION
WE MAKE YOUR DREAM COMES TRUE !!!
AIR TICKETS INSURANCE VEHICLE RENTALS
Jaffna
SKYMOON TRAVELS & IMMIGRATION
Colombo
SKYMOON TRAVELS & IMMIGRATION
Kandy
129, 1/1 D. S. Senanayake Street, Kandy. Tel: 081-2220556-7-8
Colombo
378, George R De Silva
Mawatha, Colombo-13
Tel: 0112 330 440
Jaffna
80/8, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 021 222 0023
Kandy
16 1/1, D S Senanayake Street,
Kandy.
Tel: 081 222 0556


அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.



After A/L's
Join
PLATINUM PARTNER
No.1
BTEC Centre
in Sri Lanka
Degree
Progression to
339 universities*
in UK, USA,
Australia
etc.
BCAS CAMPUS
UTP
University Transfer Program
Pearson
BTEC
UNIVERSITY OF CANBERRA
RICS
CIOB
BTEC HND in
COMPUTING
& SYSTEM DEVELOPMENT
Leading to BSc (Hons)
BTEC HND in
CIVIL
ENGINEERING
Leading to B.Eng (Hons)
UGC Recognized
TVEC Approved
BTEC HND in
BUSINESS
MANAGEMENT
Leading to BA (Hons)
LLB (Hons)
BTEC HND in
QUANTITY
SURVEYING
Leading to BSc (Hons)
BTEC HND in
Biomedical
Science
Leading to BSc (Hons)
BCAS
CAMPUS
BRITISH COLLEGE OF
APPLIED STUDIES
Tenny
Sanchu
0766 693 681
0777 102 131
INTAKE
NOW ON
BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road,
Jaffna
20 YEARS
021 221 9910
011 259 7217
info@bcas.lk
www.bcas.lk

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த புதுவருட வாழ்த்துக்கள்

டோனிகா
நகைத் தொழிலகம்
நகை வியாபாரிகள்
நம்பிக்கை, நாணயம், நயமான சேவை
அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்களுக்கு சிறந்த இடம்
T.P: 077 888 6191 82, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய புதுவருட வாழ்த்துக்கள்

ஸ்ரீ லக்ஷ்மி
பிளாசா
Sri Lakshmi Plaza
திருமணம்,
கொண்டாட்டங்கள்,
பெரு நிறுவன நிகழ்வுகள்
பிறந்த நாள் விழா விசேட
நிகழ்வுகள் இன்னும் பல...
E-mail:jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550 / 0044 746 657 8511
இல.84, ஐயனார் கோயில் வீதி.
தட்டாதெரு சந்தி (அருகில்). யாழ்ப்பாணம்.
(13)

அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

நியூட்டன்
எலக்ரிக்கல்
NEWTONE ELECTRICAL
வீட்டு வயரிங் செய்வதற்கு
தேவையான மின்சார
பொருள்கள், பைப்புக்கள்,
மோட்டார் என்பன
சில்லறையாகவும்,
மொத்தமாகவும்
பெற்றுக்
கொள்ளலாம்.
(13)
169, Sir Pon Ramanathan Rd,
Thirunelveli South, Jaffna.
Phone : 021 222 2037,
Cell : 077 061 0280.

பண்டிகை காலத்தை
முன்னிட்டு
20.12.2017 - 15.01.2018 வரை

Mega Mall
SUPERMARKET
மெகா மால் சுப்பர்மாரிக்கற்
No.114, Navalar Road, Jaffna. Tel : 021 222 4343
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

சகலவிதமான பொருள்களின்
விசேட விலைக்குறைப்பு
10% - 30%
வரையான
விலைக்கழிவுடன்
எம்மிடம் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களில்
06 அதிஷ்டசாலிகளுக்கு
தங்க நாணயங்களும், மற்றும்
அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல்
பரிசுகளும் வழங்கப்படும்.
தொ.பே.இல.021 222 4343

மலரும் புத்தாண்டு எல்லோருக்கும் மகிழ்ச்சி தருவதாக அமையட்டும்

கிருஷ்ண மஹால்
திருமண மண்டபம்
அரங்கேற்றம், கூட்டம்,
ஒன்றுகூடல், திருமணம்,
பூப்புனித நீராட்டுடவிழா,
பிறந்தநாள் மற்றும்
பொது வைபவங்களுக்கும்
Krishna Mahal
Wedding Hall
கிருஸ்ண மஹால்
பிரதான வீதி, சங்கானை. (கொமர்ஷல் வங்கி முன்பாக)
தொ.பே.: 077 958 7081
(13)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத
நம்பிக்கை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

With Best Compliments From........!
வாடிக்கையாளர்களுக்கு இனிய புதுவருட
வாழ்த்துக்கள்
KAJAMUGAN HARDWARE
கஜமுகன் ஹாட்வெயர்
கட்டடப் பொருள்கள், கம்பி வகைகள், சீமெந்து, Macson Mesh, PVC பைப் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் Pepsi Soda & Accessories அனைத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரே இடம்.
147,149, Stanley Road, Jaffna.
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 2833, 021 222 9733
Fax: 021 222 2368
E -mail: Kajamuganhw@hotmail.com

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

# Nivithra

**Beauty Parlour & Training Academy**

## இலவச அழகுக் கலைப் பயிற்சி

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

நிவித்ரா அழகுக்கலை நிலையத்தின் புதிய இலவச அழகுக்கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சியில் இணைய விரும்புவோர் கீழ் உள்ள இலக் கத்திற்கு SMS அனுப்பி எமது அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு பதிவு களை மேற்கொள்ளவும்.

திகதி : 06. 01 .2018 சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி
இடம் : **Nivithra Beauty Parlour &Training Academy 207, Navalar Road, Jaffna.**

தொடர்பு : **077 771 2604**

வருட இறுதியை முன்னிட்டு
முதல் இணையும்
10 மாணவர்களுக்கு
**Cake Icing Course**
முற்று முழுதாக இலவசம்

(13)

---

தைப்பொங்களை முன்னிட்டு புத்தம் புதிய டிசைன்களில் சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைகளை எண்ணம் போல் நியாயமான விலையில் வாங்கி மகிழ்ந்திட நாடவேண்டிய இடம்

# ஆர்.வி.ஜி மருந்தகம்

**ARVEGIE MEDICALS**

இல.504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2129

---

# ASR Wedding Halls

